# பெண்மணி

அக்டோபர் 2013

ரூ.23/-



சக்தியின் நவராத்திரிகள்

-ஆன்மிக கட்டுரை



சொ.கலைவாணி

## அன்புள்ள மன்னவனே...

முழு நாவல்

# உடல் எடையை குறைக்கும் ஐஸ்!

ஐஸ் கட்டியை சாப்பிடுகிறவர்களா நீங்கள்? அதனால் ஒரு நன்மை இருக்கிறது. என்னவென்றால், ஐஸ் கட்டிகளை சாப்பிட்டால் உடல் எடை குறையும்.

- எப்போது ஐஸ் கட்டிகளை சாப்பிடுகிறோமோ, அப்போது உடலில் இருக்கும் கலோரிகள் மற்றும் கொழுப்புகள் கரைகிறது. ஏனெனில் ஏற்கனவே நமது உடலில் சாதாரணமாக ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையானது இருக்கும். அதில் மேலும் இந்த ஐஸ் கட்டிகளை சாப்பிடுவதால், உடலில் வெப்பநிலை அதிகரித்து, உடலில் இருக்கும் அதிகமான கொழுப்புகள் மற்றும் கலோரியை கரைத்து விடுகின்றது.
- ஐஸ் கட்டிகளை சாப்பிடுவதால் வேறு எந்த உணவையும் உண்ணக் கூடாது என்று கட்டுப்பாடு எல்லாம் இல்லை. எது வேண்டுமானாலும் உண்ணலாம். ஆனால் உண்டபின் கண்டிப்பாக ஐஸ் கட்டிகளை சாப்பிட வேண்டும். இதனால் உடல் எடை எளிதாக குறையும்.
- பசியைக் கட்டுப்படுத்தும் உணவுகளை சாப்பிட்டால் எப்படி உடல் எடை குறைகிறதோ, அதேபோல் தான் ஐஸ் கட்டிகளும் அதில் ஒன்று. ஏனெனில் கிரீன் டீ குடித்தால் என்ன நன்மை கிடைக்கிறதோ, அதே நன்மைதான் ஐஸ் கட்டிகளை சாப்பிட்டாலும் கிடைக்கும்.
- ஐஸ் கட்டியும் ஒரு பசியைத் தடுக்கும் பொருள். இதனை உட்கொள்வதால் உடல் எடையானது விரைவில் குறையும்.
- எப்போதெல்லாம் பசி ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் ஐஸ் கட்டிகளை சாப்பிட்டால் பசியானது அடங்கி விடும். ஆகவே உடலில் கலோரிகளின் எண்ணிக்கையும் குறைவாகவே இருக்கும். அதனால் எடையும் குறையும்.
- ஐஸ் தண்ணீருடன் சிறிது ஐஸ் கட்டிகளை உடைத்து போட்டு குடிக்க வேண்டும். அது பற்களுக்கு நல்ல ஆரோக்கியத்தை தரும்.



ஆனால் அப்படியே ஐஸ் கட்டிகளை சாப்பிட்டால் பற்கள் வலுவை இழக்கும். ஆகவே அதனை தண்ணீராகத்தான் குடிக்க வேண்டும்.

- எப்போது எடை குறைந்தது போல் உணர்கிறீர்களோ, அப்போது அந்த ஐஸ் கட்டிகளை சாப்பிடுவதை நிறுத்திவிட வேண்டும்.

அளவுக்கு அதிகமாக ஐஸ் கட்டிகளை சாப்பிட்டால், அது பற்களுக்குத்தான் பாதிப்பை ஏற்படுத்தும். முக்கியமாக ஐஸ் கட்டிகளை எந்த காரணம் கொண்டும் கடித்து சாப்பிட வேண்டாம். மேலும் ஐஸ் உடலில் இருமல், தொண்டை வலி போன்றவற்றை ஏற்படுத்தி விடும்.

ஆகவே எடை குறைய வேண்டும் என்பதற்காக அளவுக்கு அதிகமாக ஐஸ் சாப்பிட வேண்டாம். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தம் கூட நஞ்சுதான்.

-ராதா.

# குழந்தைகள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவோம்!

குழந்தைகளை வளர்க்கும் பெற்றவர்கள் ஊட்டச்சத்து குறைபாட்டினால் ஏற்படும் பாதிப்புகளைக் குறித்து அறிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் குழந்தைகளை உடல், மன நலத்துடன் வளர்க்க இயலும்.



குழந்தை வளரத் தேவையான சத்துப்பொருள்களில் ஒன்று தயாமின். தயாமின் என்பது பி1 சத்து ஆகும். பழங்காலத்தில் கைக் குத்தல் அரிசியைப் பயன்படுத்தினர். அதில் தயாமின் நிறைய இருந்தது. இந்நாளில் நவீன முறையில் அரிசியை தீட்டித் தீட்டிப் பாலிஷ் செய்து தயாமின் சத்து நிறைந்த சிவப்பு பகுதி முழுவதும் போய் சத்தில்லாத அரிசிதான் கிடைக்கிறது.

இந்தத் தயாமின் சத்து அதாவது பி1 குறைபாட்டினால் குழந்தைகளுக்கு ஏற்படும் முதன்மையான பாதிப்பு பெரிபெரி நோய். இந்த நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தையின் இதயம் இயல்பான அளவைவிட அதிக அளவு பருமனடையும். இதன் தொடர் பாதிப்புகள் குழந்தையின் நலனை மிகக் கடுமையாகப் பாதிக்கும்.

குழந்தையின் குரல் கரகரப்பாக மாறும். சில வேளைகளில் சத்தமே வராமல் போகலாம். கை, கால்களில் எரிச்சல், ஊசி குத்துவது போல உணர்ச்சிகள் தோன்றும். மூச்சிரைப்பு, வாந்தி, வேகமான இதயத்துடிப்பு முதலிய அறிகுறிகள் ஏற்படும்.

புறநரம்பு அழற்சி, மனக்கோளாறுகள் உண்டாகும். எனவே தொடக்கம் முதலே குழந்தைகளுக்குத் தயாமின் நிறைந்த உணவுகளைக் கொடுத்து வந்தால் இந்தப் பாதிப்புகள் அவர்கள் அருகே நெருங்காது.

தயாமின் நிறைந்த உணவுப் பொருட்களை தெரிந்து கொள்வோம்.

முளை கட்டிய தானிங்களில் தயாமின் சத்து நிறையவே கிடைப்பதால் குழந்தைகளுக்கு வாரத்திற்கு ஒருமுறை முளை கட்டிய கோதுமை, கேழ்வரகு, கம்பு முதலிய தானிய உணவுகளைக் கொடுக்க வேண்டும்.

முளை கட்டிய கேழ்வரகை நிழலில் உலர்த்தி அதை மிக்ஸியில் அரைத்து அத்துடன் வெல்லம் சேர்த்துச் சிறிது நீர் விட்டுப் பிசைந்து அடை தட்டித் தரலாம்.

முட்டையின் மஞ்சள் கருவிலும் தயாமின் சத்து நிறைய உள்ளது. வாரத்திற்கு மூன்று முறையாவது குழந்தைகளுக்கு முட்டையை வேக வைத்துக் கொடுக்கலாம்.

முட்டை அசைவம் என்பவர்களுக்கு இயற்கை தயாமின் சத்து நிறைந்த பழங்களை நிறைய வழங்கியுள்ளது. சீத்தாப்பழம், மாம்பழம், முலாம்பழம், பேரீச்சை, கொடுக்காப்புளி முதலியவற்றில் தயாமின் சத்து நிறைய உள்ளது. எனவே தினம் ஒரு பழம் கொடுக்கலாம்.

உணவில் இவற்றை சேர்த்தால் அவர்கள் உடலில் தயாமின் போதுமான அளவு இருந்து சாப்பிடும் மாவுப் பொருட்களின் வளர்சிதை மாற்றத்திற்கு உதவி செய்யும். நரம்பணுக்களில் சுரக்கும் அசிடைல் கோலின் உற்பத்திக்கும், ஆல்பா கீடோ அமிலங்களின் வேதியல் மாற்றங்களுக்கு உதவியாகவும் செயல்படும்.

உணவு மூலம் கிடைக்காமல் போனால் மருத்துவர்கள் ஆய்வு செய்து உடனடியாக 25 மி.கி. தயாமினை நரம்பு வாயிலாகவும், 25 மி.கி. தயாமினை ஊசி வழியாகவும் செலுத்தி தினமும் 50 மி.கி. தயாமினை வாய்வழியே கொடுக்கச் செய்வர். எனவே இந்தச் சத்துக் குறித்த விழிப்புணர்வு அவசியம்.

–ரமணி புனிதகுமாரி.

# உன்னைப் போல் ஒருத்தி!

- வி.லட்சுமி

நடைப்பயிற்சியை முடித்துவிட்டு, குளித்து, உடை மாற்றி, அப்பா அம்மாவுக்கு டெக்ஸாசுக்கு மெயில் அனுப்பி விட்டு, அறையைப் பூட்டிக் கொண்டு கிளம்பலாம் என்று நான் நினைத்த பொழுதுதான் பார்வதியம்மாள் என்னுடைய அறைக்கு வந்து சேர்ந்தார்.

வார்டன் தங்கலட்சுமி, பார்வதியம்மாளை அழைத்து வந்து, "கல்பனா... இவங்க பெயர் பார்வதி... அறுபத்தி மூணு வயது... புது அட்மிஷன்... மாலதி போன பிறகு உன் ரூம்ல ஒரு வேகன்ஸி இருக்கில்லே, அதுல இனிமே இவங்க இருப்பாங்க...'' என்று சொல்லிவிட்டுப் போனார்.

''வாங்கம்மா... உள்ளே வாங்க...'' என்று புன்னகைத்தபடியே வரவேற்றாலும் உண்மையில் திகைத்துத்தான் போனேன்.

வொர்க்கிங் உமன்ஸ் ஹாஸ்டல் அல்ல இது. பொதுவான லேடீஸ் ஹாஸ்டல்தான். ஆனால் இந்த வயதில் ஓர் அட்மிஷனை நான் எதிர்பார்க்கவில்லை.

அவர் முகம் களையாக இருந்தது. மிகச் சிறிய உருவமாக, எடுத்து இடுப்பில் வைத்துக் கொள்ளலாம் போலத்தான் இருந்தார். அறிமுகப்படலத்திற்குப் பிறகு முகத்தில் இருந்த சம்பிரதாயப் புன்னகை விலகி விட்டது. ஒருவித இறுக்கம் ஆட்கொண்டது. சட்டென்று உள்ளே போனார். நான் அலுவலகம் கிளம்பினேன்.

நான் ஓர் இளம்பெண்தான். கைநிறைய வாங்குகிறவள்தான். அருமையான வளர்ப்புமுறை, அன்பான பெற்றோர், உயர்ந்த கல்வி என்று ஆசீர்வதிக்கப்பட்ட என் வாழ்க்கையில் வித்தியாசமான காலகட்டம் இது.

அமெரிக்காவில் இருக்கும் என் அண்ணன் ஒரு விபத்தில் சிக்கியிருக்க, அப்பாவும் அம்மாவும் கோயம்புத்தூரிலிருந்து கிளம்பிப் போய் அவனைக் கவனித்துக்



கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வந்து சென்னையில் வீடு பிடிக்கும் வரை நானாக அலசி இந்த மகளிர் விடுதியைத் தேர்ந்தெடுத்திருந்தேன். ஆனாலும், அறுபது வயதிற்கு மேற்பட்ட பெண்மணியுடன் எப்படி அறையைப் பகிர்ந்து கொள்வது என்கிற கவலை ஏற்பட்டிருந்தது எனக்கு.

* * *

இரவு ஏழரை மணிக்கு அறைக்கு வந்து



சேர்ந்தபொழுது பார்வதியம்மாள் கட்டிலில் உட்கார்ந்திருந்தார்.

என்ன பேசுவதென்று தெரியாமல் "சாப்பிட்டீங்களாம்மா?" என்றேன்.

"ம்" என்றார்.

"இந்த ஊர்தானாம்மா?"

"ஆமாம்."

''எனக்கு எம்.என்.சி.ல வேலை. பேரன்ட்ஸ் அமெரிக்கா போயிருக்கிறதால இங்க இருக்கேன். காலை உணவும், லஞ்சும் ஆபீஸ்கிட்டே இருக்கிற மெஸ்ல இருந்து வரும். ராத்திரிக்கு சப்பாத்தியும், கூட்டும் ஒரு வடஇந்தியப் பெண் கொண்டு வந்து, இங்க தருவாங்க. போன் பண்ணி, உங்களுக்கும் சேர்த்து கொண்டு வரச் சொல்லட்டுமா?'' என்றபோது வேகமாக மறுத்து தலையாட்டினார்.

''வேண்டாம். எது விதிச்சிருக்கோ, அதுவே கிடைக்கட்டும். சொன்னதுக்கு ரொம்ப தாங்க்ஸ்...'' என்றபோது 'உணவு தயார்' என்பதற்கான மணியோசை கேட்டது.

அவர் மவுனமாக எழுந்து கொண்டார்.

'எதற்காக இந்தப் பெண்மணி இப்படி விடுதி உணவைச் சாப்பிடுகிறார்? இந்த வயதில் என்ன பிரச்சினை? ஏன் இங்கே வந்திருக்கிறார் அவர்?' என் மனம் பலவாறாகக் குழம்பியது.

அன்று, நடைப்பயிற்சி முடித்து நான் வரும்போது பார்வதியம்மாள் சோர்வுடன் படுத்திருந்தார். ஏதோ முனகும் சப்தமும் கேட்க, அவரிடம் விரைந்தேன். சாப்பிட்டது ஒத்துக் கொள்ளவில்லை என்று மெல்லிய குரலில் சொன்னார். என்னிடமிருந்த ஜீரண மாத்திரையைக் கொடுத்தேன். விடுதியின் சமையல் அறையிலிருந்து சூடான சீரகத் தண்ணீர் தயார் செய்து அவரை அருந்த வைத்தேன். எழுந்து நிமிர்ந்து புன்னகைத்தார். வயிற்றின் உபாதையும் தணிந்தது.

கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் போக வேண்டியிருந்தது அவர் மனதைத் திறப்பதற்கு. மெள்ள அவர் மனம் விட்டு என்னிடம் பேசத் தொடங்கினார்.

* * *

**பா**ர்வதியம்மாளுக்கு ஒரே மகள். நந்தினி என்று பெயர். மகளது ஐந்தாம் வயதிலேயே கணவர் காலமாகி விட, தனியொருத்தியாகவே போராடி மகளை வளர்த்து விட்டார். அவளும் நன்றாகப் படித்து, தனியார் வங்கியொன்றில் வேலை பார்க்கிறாள். சேகர் என்கிற வரனைப் பார்த்து நல்லபடியாகக் கல்யாணம் செய்து வைத்து விட்டார் பார்வதியம்மாள். முதலில் எல்லோரும் சேர்ந்துதான் இருந்திருக்கிறார்கள். சேகரின் பெற்றோர், தங்கை, தம்பி என்று மாயவரத்திலிருந்து இங்கு ஒரேயடியாக வந்துவிட, மெள்ள பிரச்சினை ஆரம்பித்து பூதாகரமாகி விட்டது.

"உன் அம்மாவை முதியோர் இல்லத்தில் விட்டுவிடு" என்று சேகர் கட்டளையிட, மகள் இங்கே கொண்டு வந்து விட்டிருக்கிறாள். முதியோர் இல்லத்தை விட, மகளிர் விடுதியில் அம்மா இருக்கிறாள் என்று சொல்லிக் கொள்வது பெட்டர் என்று நினைத்தாளோ என்னவோ...

அறுபத்தைந்து வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் முதுமையில், கணவனையும் இழந்து, தனியான வாழ்க்கைக்கு தள்ளப்பட்டிருக்கும் அந்த ஜீவனின் துயரம் என் நெஞ்சை வருத்தியது. குரல் உடைந்து அழுகிற நிலைமைக்கு அவர் போய்விடாமல் இருக்க வேண்டுமே என்று தவித்தபோது, நல்லவேளையாக என் செல்பேசி அழைப்பு குறுக்கிட்டது.

* * *

**அ**ன்று வானிலையும் மந்தமாக இருக்க, சீப் எங்களை வேகமாக கிளம்பி வரச் சொன்னார். பேருந்துகள் அடைத்துக் கொண்டு வந்தன. கால்டாக்ஸியும் கிடைக்காத நிலையில், வந்த பஸ்ஸில் ஏற

## தேங்காய் பிரசாதம்

நவராத்திரி விழாவின் போது நெமிலி திரிபுரசுந்தரி கோவிலில், கலசத்தில் வைக்கப்படும் தேங்காய், அடுத்த வருடம் வரை கெடாமல் இருக்கும் அதிசயத்தைக் காணலாம். அந்தத் தேங்காயை மறுவருடம் நவராத்திரி விழாவின் போது முதல் நாள் பூஜித்து உடைத்து பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்குவது வழக்கம்.

நவராத்திரி ஒன்பது நாட்களும் உடுப்பி கிருஷ்ணன் கோவிலில் விசேஷ வழிபாடுகள் நடைபெறும். அப்பொழுது தினமும் ஒவ்வொரு புடவையை உடுப்பி கிருஷ்ணருக்கு அணிவித்து அலங்கரிப்பார்கள். இந்தப் புடவைகளை மைசூர் மகாராஜா வழங்கினார் என்று சொல்லப்படுகிறது.

–டி.ஆர். பரிமளம், திருச்சி.

வேண்டியதாகி விட்டது.

முன்னும் பின்னும் ஆட்கள் தள்ள, மேலே கீழே என்று பிடித்துக் கொள்ள வாகாகவே இல்லாத பிடிகள் ஆட்டமாட, குறுகலான இடத்தில் புளி மூட்டை மாதிரி நின்று கொண்டே பயணித்தேன். எனக்கு நான்கடி தள்ளி நின்றிருந்த ஒரு பள்ளி மாணவி அழாத குறையாகத் தடுமாறிக் கொண்டிருந்தாள். அவள் முதுகுக்குப் பின்னால் முரட்டு மனிதன் ஒருவன் வக்கிரப் பார்வையுடன் அவள் மேல் விழுவதும் நகர்வதுமாக இருந்தான்.

அப்போதுதான் அந்தக் கூடைக்காரி தொம்மென்று அந்த ஆளின் முதுகில் அடித்தாள். ''பரதேசி நாயே... வூட்டுல ஆத்தா, அக்கான்னு இல்லே? வேலைக்கு, படிப்புக்குன்னு பஸ்சுல வர்ற பொண்ணுன்னா எளக்காரமா ஒனக்கு? ஒரசிப் பாப்பியா?'' என்று உரத்த குரலில் அவள் மேலும் இரண்டு அடிகள் போட, அவன் முறைத்துவிட்டு தபதபவென்று இறங்கி ஓடினான்.

தலைவலித்தது எனக்கு. எந்த வயதிலும் பெண் என்பவள் ஏதோ ஒருவகையில் வன்முறையை சகித்துக் கொண்டேதான் இருக்க வேண்டுமா என்கிற கேள்வி எழுந்தது.

* * *

''ஹலோ... ஒரு நிமிடம்...'' என்று குரல் கேட்டு திரும்பினேன்.

"நீங்க கல்பனாதானே? அம்மாவோட ரூம் மேட்?" என்றபடி அருகில் வந்தாள்.

"ஆமாம். நீங்க நந்தினியா?"

''கரெக்ட். அம்மா உங்களைப் பத்தி சொல்லியிருக்காங்க. ரொம்ப அன்பா, அழகா பேசுவீங்களாம்... நைஸ் மீட்டிங் யூ...'' என்று புன்னகைத்தாள்.

''உண்மையில் அம்மாவுக்குத்தான் பெரிய மனசு... என்னைப் பத்தி இவ்வளவு சொல்லியிருக்காங்களே...'' என்றபோதுதான் எனக்குள் அந்த எண்ணம் முகிழ்த்தது. அந்த நிமிடத்தில் என்னவெல்லாம் இருந்ததோ அத்தனையும் சொல்லி முடித்து விட்டேன். முதலில் திகைத்தவள், பிறகு பொறுமையாக அனைத்தையும் கேட்டுக் கொண்டாள்.

''அவங்களைப் பார்க்கவே ரொம்ப கஷ்டமா இருக்கு நந்தினி... எப்பேர்ப்பட்ட மன அழுத்தத்தில் இருக்காங்க தெரியுமா?'' என்றபோது அவள் மெல்லிய குரலில் சொன்னாள்.

"வேற வழியில்லையே கல்பனா... என் கணவர் குடும்பம், கட்டுப்பெட்டி குடும்பம். படிப்பு, சம்பளம், வேலை இதெல்லாம் ஒரு பக்கம்... பிற்போக்குச் சிந்தனைகள், ஆதிக்க மனோபாவம், கணவன் என்கிற உயர்வு மனப்பான்மைன்னு ஏகப்பட்ட காம்ப்ளக்ஸ். அதுவும் மாமனார், மாமியார்னு அவர் குடும்பம் வந்தபிறகு எனக்கு நிபந்தனைகள், கட்டுப்பாடுகள். எனக்கு வேற வழி தெரியலே...''

நிதானமாக அவளைப் பார்த்துக் கேட்டேன்.

''சரி... நீ ஜீன்ஸ் போட்டிருக்கே... துப்பட்டா இல்லாம குர்த்தா போட்டு, லூஸ் ஹேர் விட்டிருக்கே... இதுக்கெல்லாம் கோட் கொண்டு வரலியா உன் கணவர்?''

"அதெப்படி?'' என்றாள் கோபத்துடன். "இது முழுக்க முழுக்க என் பர்ஸனல் விஷயம். என் தோற்றம், என் உடை, என் ரசனை இதுக்கெல்லாம் கட்டுப்பாடு கொண்டு வந்தா நான் சும்மா இருக்க மாட்டேன்...''

"ஹியர் யூ ஆர்...'' என்றேன் உறுதியாக. "தோற்றம், உடை பற்றி உரிமை பற்றி இவ்வளவு தெளிவாக இருக்கிற நீ, மற்ற உரிமைகள் பற்றி உணராமல் இருப்பது

## நவமி விளக்கு

பாலக்காடு கொடுந்திரப்புள்ளி ஆதிகேசவப் பெருமாள் கோவிலில் சரஸ்வதி பூஜையன்று நவமி விளக்கு திருவிழா கொண்டாடப்படுகிறது. அன்று கோவில் முழுக்க விளக்கேற்றி வழிபாடு நடத்துவர். நகர் முழுவதும் விளக்குகள் ஏற்றி யானைகள் ஊர்வலம் நடைபெறும்.

*–ஆர். ஜெயலட்சுமி, திருநெல்வேலி.*

குற்றாலம், குற்றாலநாத சுவாமி கோவிலில் பராசக்தி யோகபீடம் இருக்கிறது. இங்கு நவராத்திரி விழா சிறப்பாக நடைபெறும். அதிலும் விஜயதசமியன்று முரசு, மத்தளம், சங்கநாதம் முழங்க விசேஷப் பூஜை நடைபெறும். இதில் கலந்து கொள்பவர்களுக்கு வெற்றி வாய்ப்பு தேடி வரும் என்பது ஐதீகம்.

* நவராத்திரியின் போது கொலு கலசத்திற்கு தினமும் ஆரத்தி எடுக்க வேண்டும். தூய மஞ்சளாகிய லட்சுமியை, வெள்ளை நிற சுண்ணாம்பாகிய சரஸ்வதியுடன் கலந்தால், சிவப்பு நிறமான துர்க்கா கிடைப்பாள். இதுவே ஆரத்தியின் தத்துவம் மற்றும் தேவியரின் சங்கமம்.

*–மகாலட்சுமி சுப்பிரமணியன், புதுச்சேரி.*

ஏன்? உனக்காக தன் இளமை, ஆசாபாசம் எல்லாத்தையும் தியாகம் பண்ணி, வாழ்க்கையின் ஒரே பற்றுக்கோடா உன்னை நினைச்சு உனக்காகவே வாழ்ந்தவளுக்காக, நீ போராடியிருக்க வேண்டாமா? என் அம்மா, என் கூடத்தான் இருப்பாள்னு முரசறைந்து சொல்ல வேண்டாமா?

அம்மாவை விட்டுக் கொடுத்தாதான் உன் சுதந்திரம் காப்பாற்றப்படும்னா, அந்த அதர்ம உடன்பாட்டுக்கு ஒப்புக்க உனக்கு எப்படி மனசு வந்தது? ஆணும் பெண்ணும் இணைஞ்சு வாழற வாழ்க்கையில, தனக்கான இடத்தையும் உரிமையையும் தேடி அடைஞ்சு கம்பீரத்தோட நிக்கறதுதான் உண்மையான பெண் சுதந்திரம்... யோசிச்சு பாரு நந்தினி..."

இரண்டு நிமிடங்களை மவுனங்கள் எடுத்துக் கொள்ள, மூன்றாவது நிமிடம் அவளது விரல்கள் மெள்ள என் தோளைப் பற்றின.

"புரியுது கல்பனா... என் தவறுகளைத் திருத்திக்கறேன்... இன்னிக்கே அதுக்கான முயற்சிகளை ஆரம்பிக்கிறேன்..." என்றாள்.

கண்களின் ஈரத்தை நாசூக்காக ஒற்றிக் கொண்டு நகர்ந்து மெள்ள கூட்டத்தில் கலந்தாள்.

மானசீகமாக அந்தக் கூடைக்காரிக்கு நன்றி சொன்னேன். அடுத்தவர் வீட்டுப் பிரச்சினை ஆயிற்றே, தலையிடலாமா என்கிற நடுத்தரக் கோழை மனப்பான்மையை தவறு என்று சுட்டிக்காட்டி, எங்கெல்லாம் அநீதி நிகழ்த்தப்படுகிறதோ அங்கெல்லாம் இயன்றவரை போராடித் தீர்ப்பதே மானுட தர்மம் என்று உணர்த்திய மாயப் பெண் தெய்வம் அல்லவா அவள்?

(ஜெயஸ்ரீராஜ் சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றது.)

# வெண்தாமரையில் நாககாளியம்மன்

பவுர்ணமி தோறும் ஒவ்வொரு அவதாரக் கோலத்தில் அம்மனை காண வேண்டும் என்றால், தேனியிலிருந்து 4 கி.மீ. தொலைவில் உள்ள முத்துதேவன்பட்டியில் கோவில் கொண்டு அருளும் நாககாளியம்மன் ஆலயத்தில் காணலாம். சுயம்பு மூர்த்தமாக தோன்றிய கருணைத் தெய்வம் இவள். காமாட்சி, மீனாட்சி, காந்திமதி, கவுமாரி, ராஜராஜேஸ்வரி என ஒவ்வொரு சிறப்பு அலங்காரத்தில் காட்சி தரும் நாககாளியம்மனை காணக் கண்கோடி வேண்டும்.



இங்கு சொர்ண லிங்கேஸ்வரர், லிங்க ரூபமாக அருள்பாலிக்கிறார். புண்ணியம் தரும் புரட்டாசி மாதத்தில்தான், இத்தலத்து நாயகிக்கு திருவிழா. மாவிளக்கு, அக்கினி சட்டி எடுத்தல், கனிகளால் ஆன அலங்காரம் என பக்தர்கள் தங்கள் பிரார்த்தனையை செலுத்துகின்றனர்.

அதே மாதத்தில் நவராத்திரி விழாவும் இங்கே அமர்க்களப்படும். ஒன்பது நாட்களும் மகாலட்சுமி, துர்க்கை, வாராகி, இந்திராணி, கவுமாரி, லலிதாம்பிகை, ராஜ ராஜேஸ்வரி, காயத்ரி, சரஸ்வதிதேவி என தினமும் ஒவ்வொரு அவதாரக் கோலத்தில் காட்சி தருவாள் நாககாளியம்மன். வெண்பட்டாடை உடுத்தி வெண்தாமரையில் அமர்ந்தபடி காட்சி தரும் காளியைக் காண பல ஊர்களில் இருந்தும் திரண்டு வருகின்றனர் பக்தர்கள்.

சரஸ்வதி பூஜை நாளில் தாமரை மொட்டினால் குழந்தைகளின் நாவில் எழுதும் நிகழ்ச்சி இங்கு சிறப்புக்குரிய ஒன்று. இந்த வழிபாட்டைச் செய்தால் குழந்தைகள் கல்வி, கேள்வியில் சிறந்து விளங்குவர் என்பது ஐதீகம்.

ஆயுத பூஜையன்று நாககாளியம்மனுக்கு 108 குடங்களில் பாலபிஷேகம் நடைபெறும். அம்மனுக்கு பாலபிஷேகம் செய்து வேண்டிக் கொள்ள தொழில் சிறக்கும், விவசாயம் செழிக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

-வத்சலா சதாசிவன், சென்னை.

அகிலம் அனைத்தையும் காத்து இரட்சிக்கும் அன்னை ஆதிபராசக்தியை வணங்கும் நாட்கள் நவராத்திரி நாட்கள். முதல் மூன்று நாட்களும் விரதத்தை வேண்டி துர்க்கையம்மனை வழிபடுவர். அடுத்த மூன்று நாட்களும் செல்வத்தைத் தரும்படி லட்சுமி தேவியை வணங்குவர். இறுதி மூன்று நாட்களும் கல்வியை அளிக்கச் சரசுவதி தேவியைத் துதிப்பர்.

நவராத்திரி நாட்களில் பிரசாதம் படைத்து மகிழப் பலவிதமான சுண்டல்கள் செய்முறைகள் இங்கே தரப்பட்டுள்ளன.

## சுண்டல் தயாரிக்க

எந்த வகைச் சுண்டல் தயாரிக்க விருப்பமோ அந்த வகை பயறுகளைக் குறைந்தது 6 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். அதன்பின் அடுப்பைப் பற்ற வைத்துத் தேவையான அளவு தண்ணீர் விட்டு, ஊற வைத்தவற்றை அலசிப் போட்டு வேகவிட்டு கடைசியில் அளவாக உப்புச் சேர்த்து நன்கு வெந்ததும், உப்புச் சேர்ந்துள்ளதா எனப் பார்த்து வடிகட்டி வைக்க வேண்டும்.

தாளிப்பதற்கு நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் சிறந்தது. கடுகு, உடைத்த உளுத்தம்பருப்பு, மிளகாய் வற்றல், கருவேப்பிலை ஆகியன வேண்டும்.



கடுகு நன்கு வெடிக்க வேண்டும். அவ்வாறு தாளிப்பைச் செய்தவுடன் தேங்காய்த் துருவலைச் சேர்த்து வெந்த பயறைச் சேர்த்து அதில் பெருங்காயம் தூவ வேண்டும்.

சுண்டலுக்குச் சுவை சேர்க்கக் கடலைப்பருப்பு ஒரு மேஜைக்கரண்டி, தனியா ஒரு மேஜைக்கரண்டி, மிளகாய் வற்றல் பத்து, இவற்றை எண்ணெய் ஊற்றாமல் பக்குவமாகப் பொன்னிறமாக வறுத்து முன்கூட்டியே பொடித்து எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

சுண்டலைக் கடைசியில் பிரட்டி எடுக்கையில் இந்த மசாலா கலவையைச் சேர்த்தால் சுண்டல் மேலும் சுவை மிக்கதாக அமையும்.

## புதினா சென்னா சுண்டல்

**தேவையான பொருட்கள்:**

கருப்பு சென்னா – 2 கோப்பை, தேங்காய்த்துருவல் – அரை கோப்பை, பச்சை மிளகாய் – 3, புதினாத் தழை – அரை கைப்பிடியளவு, இஞ்சி – 1 துண்டு, கடுகு – ¼ ஸ்பூன், எண்ணெய் – 1 ஸ்பூன், கருவேப்பிலை – சிறிது, உப்பு – தேவைக்கேற்ப.

**செய்முறை:**

கருப்புக் கொண்டைக்கடலையை முதல் நாளே ஊற வைத்து நன்கு கழுவி உப்பு சேர்த்து வேக வைக்கவும். இருப்புச் சட்டியில் எண்ணெய் ஊற்றி புதினாவை வதக்கி அதனுடன் இஞ்சி, தேங்காய்த்துருவல் சேர்த்து அரைத்து எடுக்கவும். இருப்புச் சட்டியில் கடுகு தாளித்து வெந்த சுண்டல், அரைத்த விழுது சேர்த்து நன்கு கிளறி இறக்கவும்.

## ராங்கோலி சுண்டல்

**தேவையான பொருட்கள்:**

புதினா – ஒரு



# நவராத்திரிக்கு நவரச சுண்டல்



கைப்பிடி அளவு, கேரட் – 1, பீட்ரூட் – 1, ஜவ்வரிசி – 300 கிராம், முந்திரிப்பருப்பு – 10, நெய், உப்பு – தேவைக்கேற்ப.

**செய்முறை:**

முதல் நாள் ஜவ்வரிசியை ஊற வைக்கவும். கேரட், பீட்ரூடை தோல் நீக்கித் தனித்தனியாக அரைத்தெடுக்கவும். புதினாவைத் தனியாக அரைத்தெடுக்கவும். மூன்றில் ஒரு பகுதி ஜவ்வரிசியுடன் கேரட் விழுதைக் கலந்தும், மீதியுள்ள ஜவ்வரிசி பாதி அளவில் புதினா விழுதைக் கலந்தும் தனித்தனியாகப் பிரிட்ஜில் வைக்கவும். மீதியுள்ள ஜவ்வரிசியையும் பிரிட்ஜில் வைக்கவும்.

இருப்புச் சட்டியில் நெய்யை ஊற்றி முந்திரியை வறுத்து எடுத்தபின் மீதமுள்ள ஜவ்வரிசியை வறுத்து அதனுடன் ஊறவைத்த கேரட் ஜவ்வரிசியையும், புதினா ஜவ்வரிசியையும் சேர்த்து நன்கு கிளறி உப்பு சேர்த்து, வறுத்த முந்திரி சேர்த்து இறக்கவும்.

## ஓட்ஸ் சுண்டல்

**தேவையான பொருட்கள்:**

ஓட்ஸ் – இரண்டு பங்கு, தேங்காய்த்துருவல் – 1 மூடி, கருவேப்பிலை – சிறிது, கடுகு – ¼ ஸ்பூன், காய்ந்த மிளகாய் – 2, எண்ணெய் – 2 ஸ்பூன், உப்பு – தேவைக்கேற்ப.

**செய்முறை:**

ஓட்சை மாவாக அரைத்துக் கொள்ளவும். உப்பு, தண்ணீர் சேர்த்துக் கொழுக்கட்டை மாவுப் பதத்தில் பிசைந்து சிறு சிறு உருண்டைகளாக உருட்டி இட்லித்தட்டில் வேக வைத்தெடுக்கவும். இருப்புச் சட்டியில் எண்ணெய் ஊற்றி கடுகு, காய்ந்த மிளகாய் தாளித்து வெந்த ஓட்ஸ் உருண்டைகளைப் போட்டு, கருவேப்பிலை, தேங்காய்த்துருவல் சேர்த்து நன்கு கலந்து இறக்கினால் ஓட்ஸ் சுண்டல் ரெடி.

## நவதானிய சுண்டல்

**தேவையான பொருட்கள்:**

வெள்ளை கொண்டக்கடலை, சின்ன கருப்புக் கடலை, சிறுபயறு, மொச்சை, தட்டாம்பயறு, வேர்க்கடலை, வெள்ளைப்பட்டாணி, பச்சைப்பட்டாணி, கோதுமை – தலா ஒரு மேஜைக்கரண்டி (அவரவர் தேவைக்கேற்ப கூட்டிக் கொள்ளலாம்), தேங்காய்த்துருவல் – ¼ கோப்பை, பச்சை மிளகாய் – 3, இஞ்சி – சிறு துண்டு, உப்பு – தேவைக்கேற்ப, கடுகு– ¼ ஸ்பூன், கருவேப்பிலை, பெருங்காயம் – சிறிதளவு, மிளகாய் வத்தலும், கொத்தமல்லி விதையும் எண்ணெயில்லாத சட்டியில் தனித்தனியாக வறுத்துப் பொடித்தது – 2 தேக்கரண்டி.

**செய்முறை:**

மேற்கூறிய பயறு வகைகளை நன்கு கழுவி ஊற வைக்கவும். பின் குக்கரிலோ, தனிப்பாத்திரத்திலோ பக்குவமாக வேக வைத்து எடுக்கவும். குக்கரில் வைப்பதெனில் உப்பு சேர்த்து வேக வைத்து எடுக்கவும். இஞ்சி, பச்சைமிளகாயை விழுதாக அரைத்தெடுக்கவும்.

இருப்புச் சட்டியில் எண்ணெய் ஊற்றி கடுகு தாளிக்கவும். காயம், வெந்த சுண்டலைப் போடவும். அரைத்த விழுதையும் சேர்த்து நன்கு கலந்து பச்சை வாசனைப் போனவுடன் வறுத்த மிளகாய் பொடி, தேங்காய்த்துருவல் கலந்து நன்கு கிளறி, கருவேப்பிலை சேர்த்து இறக்கவும்.

## இனிப்புச் சுண்டல்

**தேவையான பொருட்கள்:**

உளுத்தம்பருப்பு – 2 டம்ளர், வெல்லம் – 1½ டம்ளர், தேங்காய் – 1 மூடி (சிறியது), ஏலக்காய்த்தூள் – ½ தேக்கரண்டி.

**செய்முறை:**

உளுத்தம்பருப்பை கழுவி ஊற வைக்கவும். கொதிக்கும் நீரில் உளுத்தம்பருப்பை வேகவிடவும். வெந்தவுடன் வடிதட்டில் கொட்டி வடிக்கவும். கல், தூசி இல்லாத வெல்லத்தைத் தட்டி அதனோடு சேர்க்கவும். ஏலக்காய்தூள், தேங்காய்த்துருவல் சேர்த்து அடுப்பில் வைத்து நன்கு கிளறி விட்டு இறக்கவும்.

## கொள்ளுச் சுண்டல்

**தேவையான பொருட்கள்:**

கொள்ளு – 200 கிராம், வெங்காயம் – 1, பச்சை மிளகாய் – 2, இஞ்சி பொடியாக நறுக்கியது – ¼ தேக்கரண்டி, தேங்காய்த்துருவல் – 2 மேஜைக்கரண்டி, கடுகு – சிறிது, கருவேப்பிலை – சிறிதளவு, எண்ணெய் – 2 தேக்கரண்டி, உப்பு – தேவைக்கேற்ப.

**செய்முறை:**

கொள்ளை குறைந்தது 5 மணி நேரம் ஊறவைத்து குக்கரில் இரண்டு கோப்பைத் தண்ணீர், சிறிதளவு உப்புச் சேர்த்து வேக விடவும். கொதி வந்ததும் மிதமான வேகத்தில் வேக விடவும். வெந்ததும் வடிகட்டி எடுத்து, வாணலியில் எண்ணெய் ஊற்றி கடுகு, கருவேப்பிலை தாளித்து போடவும். பிறகு பொடியாக நொறுக்கிய வெங்காயம், பச்சைமிளகாய், இஞ்சியை போட்டுக் கிளறி விடவும். கடைசியாக துருவிய தேங்காய் சேர்க்கவும்.

## கொண்டக்கடலை சுண்டல்

**தேவையான பொருட்கள்:**

கொண்டக்கடலை – 1 கோப்பை, தேங்காய்த்துருவல் – ¼ கோப்பை, சின்ன வெங்காயம் – 3, கடுகு – ½ தேக்கரண்டி, உடைத்த உளுத்தம்பருப்பு – ½ தேக்கரண்டி, மிளகாய் வத்தல் – 2, பச்சை மிளகாய் – 1, கருவேப்பிலை – ஓர் இணுக்கு, கொத்தமல்லித்தழை – சிறிது, எண்ணெய், உப்பு – தேவைக்கேற்ப.

**செய்முறை:**

கொண்டக்கடலையை குறைந்தது 12 மணி நேரம் ஊற விட வேண்டும். இரவில் ஊற வைத்துக் காலையில் நன்கு களைந்து தண்ணீரை வடித்து, குக்கரில் போட்டு மூழ்கும் அளவிற்கு நீர் ஊற்றிச் சிறிது உப்பு சேர்த்து, ஐந்து விசில் வரை வேக வைத்து அடுப்பில் இருந்து இறக்கவும். குக்கரில் ஆவி இறங்கியதும் கொண்டக்கடலையில் உள்ள தண்ணீரை வடிக்கவும்.

வாணலியில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் கடுகு, உளுத்தம்பருப்பு, மிளகாய் கிள்ளித் தாளித்து பச்சை மிளகாய் பொடியாய் நறுக்கிப் போட்டு கிளறி கடைசியில் கருவேப்பிலை சேர்க்கவும். அதில் வெந்த கடலையைச் சேர்த்துத் தேவையான உப்பு, தேங்காய்த்துருவல் சேர்த்து நன்கு கிளறி இரண்டு நிமிடம் அடுப்பில் வைத்து இறக்கவும்.



## கடலைப்பருப்பு சுண்டல்

**தேவையான பொருட்கள்:**

கடலைப்பருப்பு – 200 கிராம், பச்சை மிளகாய் – 4, தேங்காய்த்துருவல் – 1 குழிக்கரண்டி, காயம் – சிறிதளவு, கருவேப்பிலை – ஒரு கொத்து, உப்பு – தேவையான அளவு.

**செய்முறை:**

கடலைப்பருப்பை நன்கு கழுவி ஊற வைக்கவும். தண்ணீரைக் கொதிக்க வைத்து ஊறிய கடலைப்பருப்பைப் போடவும். வெந்தபின்தான் உப்பு சேர்க்க வேண்டும். இல்லையெனில் வேகாது. குக்கரில் வைத்தால் பக்குவம் தவறினால் குழைந்து விடும்.

வெந்தபின் உப்பு, காயம் கலந்து வடிதட்டில் கொட்டவும். இருப்புச் சட்டியில் எண்ணெய் ஊற்றி கடுகு போட்டு வெடித்ததும், நறுக்கிய மிளகாயைப் போட்டு, வெந்த பருப்பையும் சேர்த்துக் கிளறியபின் தேங்காய்த்துருவல், கருவேப்பிலை கலந்து இறக்கவும்.

## தட்டைப்பயறு(காராமணி) சுண்டல்

**தேவையான பொருட்கள்:**

தட்டைப்பயறு சிவப்பு அல்லது வெள்ளை – 200 கிராம், மிளகாய் வற்றல் – 4, கருவேப்பிலை – சிறிது, தேங்காய்த்துருவல் – 1 மூடி, கடுகு– ¼ தேக்கரண்டி, உப்பு – தேவையான அளவு.

**செய்முறை:**

காராமணியைக் கழுவி ஊற வைக்கவும். குக்கரில் உப்பு சேர்த்து இரண்டு விசில் வரும் வரை வேகவைத்து எடுக்கவும். இருப்புச் சட்டியில் கடுகு, காய்ந்த மிளகாய் தாளித்து வெந்த காராமணியை வடிகட்டி சேர்க்கவும். நன்கு கிளறி தேங்காய்த்துருவல், கருவேப்பிலை சேர்த்து இறக்கவும்.

–ராஜம்.

# சமையல் மேஜை



எம்.கலைவாணி மனோகர். அழகான கூட்டுக்குள் வாழும் அன்பான இல்லத்தரசி இவர். கோலம் போடுவது, விதவிதமாக சமைப்பது, அழகழகான ஆடைகள் தைப்பது, எம்பிராய்டரி செய்வது என்பது இவரது பொழுதுபோக்கு.

இவரது கணவர் தனியார் நிறுவனத்தில் மேற்பார்வையாளராக உள்ளார். இவருக்கு ஒரு மகன், ஒரு மகள். மகன் என்ஜினீயரிங் மூன்றாம் ஆண்டு படிக்கிறார். மகள் 12-ம் வகுப்பு படிக்கிறார். சென்னை பெரம்பூர் இவரது வாசம்.

வாசம் மிகுந்த இவரது சமையல் குறிப்பை படித்து பார்த்து ருசிப்போமா.

## ரவை கரண்டி அப்பம்

**தேவையான பொருட்கள்:**

*ரவை – 1 கப், அரிசிமாவு – 1 கப், மைதாமாவு – 1 கப், தேங்காய்த்துருவல் – 1 கப், தேங்காய்(பில்லையாய்) – சிறிது, சர்க்கரை – 1 கப், ஏலக்காய்தூள் – ½ ஸ்பூன், உலர்ந்த திராட்சை – 5, ஆப்ப சோடா மாவு – சிறிது, பால் – 2½ கப், பாதாம், முந்திரி (வறுத்து பொடித்தது) – 2 ஸ்பூன், எண்ணெய் – தேவையான அளவு.*

**செய்முறை:**



ஒரு பாத்திரத்தில் ரவை, அரிசிமாவு மைதா மாவு, தேங்காய்த்துருவல், தேங்காய் பில்லைகள், ஏலத்தூள், உலர்ந்த திராட்சை, பொடித்த பாதாம், முந்திரி, சர்க்கரை,



ஆப்பசோடா அனைத்தையும் போட்டு அதில் பாலை ஊற்றி தோசைமாவு பதத்தில் கலந்துக் கொள்ளவும்.

வாணலியில் எண்ணெயை காயவைத்து அதில் கலவையை கரண்டியால் எடுத்து ஊற்ற ரவை கரண்டி அப்பம் தயார்.



## உருளைக்கிழங்கு பாயசம்



**தேவையான பொருட்கள்:**

பால் – ½ லிட்டர், உருளைக்கிழங்கு – 3, சர்க்கரை – 1 கப், வேர்க்கடலை – சிறிதளவு, முந்திரிப்பருப்பு – 4, நெய் – தேவையான அளவு.

**செய்முறை:**

ஒரு பாத்திரத்தில் பாலை விட்டு கொதிக்க விடவும். உருளைக்கிழங்கை வேகவைத்து தோலுரித்து மிக்ஸியில் நன்றாக அரைத்து கொதி வந்த பாலில் சிறிது சிறிதாக போட்டு கட்டித்தட்டாமல் கலந்து நுரை வந்ததும் சர்க்கரையை சேர்க்கவும். நெய்யை சூடாக்கி அதில் முந்திரி, வேர்க்கடலையை வறுத்து பாயசத்தில் கலந்து இறக்கி விடவும்.

சூடான சுவையான உருளைக்கிழங்கு பாயசத்தை குழந்தைகள் விரும்பி சாப்பிடுவர்.

## ரவை புட்டு

**தேவையான பொருட்கள்:**

பம்பாய் ரவை – 2 கப், வெல்லம் – 2 கப், தேங்காய்த்துருவல்– 1 மூடி, பொடியாக நறுக்கி நெய்யில் வறுத்த முந்திரிப்பருப்பு – 1 மேஜைக்கரண்டி, ஏலப்பொடி – ½ ஸ்பூன், கேசரிப்பவுடர் – 1 சிட்டிகை.

**செய்முறை:**

ரவையை வாணலியில் சிறுதீயில் வறுத்து எடுக்கவும். இரண்டு கப் தண்ணீரை நன்கு கொதிக்க வைத்து ரவையில் விட்டு, கரண்டி காம்பால் கிளறவும். சிறிது நேரத்தில் உதிரியாகி விடும். நன்றாக உதிர்த்து விட்டு, இட்லிப்பானையில் வேக வைத்து எடுக்கவும்.

வெல்லத்தை தூளாக்கி அரை டம்ளர் தண்ணீர் விட்டு கேசரிப்பவுடர் போட்டு கொதிக்க விடவும். கம்பிப்பாகு வந்ததும் வடிகட்டி வெந்த ரவையில் ஊற்றிக் கிளறவும். பின்பு தேங்காய்த்துருவல், ஏலப்பொடி, வறுத்த முந்திரியை கலந்து பரிமாறவும்.

சுவையான நிறமான இந்த புட்டை நவராத்திரியில் வெள்ளிக்கிழமையன்று செய்து விருந்தினர்களுக்கு பரிமாறலாம்.

–லட்சுமி சந்தானம், திருச்சி.

## பட்டர் பிஸ்கெட்

**தேவையான பொருட்கள்:**

டால்டா – 100 கிராம், மைதா மாவு –1 கப், சர்க்கரை – ½ கப், பேக்கிங் பவுடர் – கொஞ்சம்.

**செய்முறை:**

ஒரு குக்கரில் மணலைப் போட்டு அரை மணி நேரம் சூடுபடுத்தவும்.

டால்டாவுடன் மைதா மாவு, சர்க்கரை, பேக்கிங் பவுடர் சேர்த்து நன்றாக பிசையவும். பின்பு கைகளில் நெய்தடவி கலவையை பிஸ்கெட்டாக தட்டி ஒரு பாத்திரத்தில் போட்டு அதனை சூடேறிய குக்கரில் வைத்து மூடி, மேலும் அரைமணி நேரம் வெயிட் போடாமல் வேக வைத்து இறக்க பிஸ்கெட் ரெடி. இதனை எளிதாக விரைவாக செய்து அசத்தலாம்.

## பாலக் பூரி

**தேவையான பொருட்கள்:**

கோதுமை மாவு – 2 கப், சீரகம் – ¼ ஸ்பூன், பாலக்கீரை – ஒரு கட்டு, மிளகாய்தூள் – ¼ ஸ்பூன், நெய் (அல்லது) எண்ணெய் – 1 ஸ்பூன், எண்ணெய் – பொரிக்க, உப்பு – சுவைக்கேற்ப.

**செய்முறை:**

பாலக்கீரையை அலசி, பொடியாக நறுக்கி சிறிது தண்ணீர் விட்டு 5 நிமிடம்

வேக விடவும். பின்பு தண்ணீரை வடித்து மிக்ஸியில் மையாக அரைத்துக் கொள்ளவும். கோதுமை மாவில் உப்பு, சீரகம், நெய் (அல்லது) எண்ணெய், மிளகாய்தூள் சேர்த்து அரைத்த விழுதைப் போட்டு நன்கு பிசைந்துக் கொள்ளவும். தேவைப்பட்டால் சிறிது தண்ணீர் சேர்த்துக் கொள்ளலாம்.

பிசைந்த மாவை சிறு பூரிகளாக தேய்த்துப் பொரித்தெடுக்கவும். சத்தானது. சுவையானது.

## கடாய் வெஜிடபிள்

**தேவையான பொருட்கள்:**

அனைத்து காய்கறிகளும் (வேகவைத்தது) – 1 கப், கருவேப்பிலை, கொத்தமல்லித்தழை – சிறிது, கடுகு, உளுத்தம்பருப்பு – ½ ஸ்பூன், எண்ணெய், உப்பு – தேவையான அளவு.

**கடாய் பவுடர்:**

வரமிளகாய் – 1, தனியா – 1 ஸ்பூன், சீரகம்–1 ஸ்பூன், சோம்பு – ½ ஸ்பூன் (அனைத்தையும் பொடித்துக் கொள்ளவும்).

**செய்முறை:**

வாணலியில் சிறிது எண்ணெய் ஊற்றி கடுகு, உளுத்தம் பருப்பு, கருவேப்பிலை தாளித்து வெந்த அனைத்து காய்கறிகளையும் போட்டு, கடாய் பவுடர் 2 ஸ்பூன் சேர்த்து, தேவையான அளவு உப்பு சேர்க்கவும். இதில் சிறிது தண்ணீர் தெளித்து மூடி ஐந்து நிமிடம் சிறுதீயில் வைத்து கிளறி இறக்கி நறுக்கிய மல்லித்தழையை தூவி பரிமாறவும்.

## வெள்ளரிக்காய் கிச்சடி

**தேவையான பொருட்கள்:**

அரிசி – 1½ கப், பாசிப்பருப்பு – ½ கப், வெள்ளரிக்காய்



**சுண்டல் சுவை கூட...**

நவராத்திரியில் எந்த வகை சுண்டல் செய்தாலும், சிறிது தேங்காய்த்துருவலை நெய்யில் வறுத்து சேர்த்துக் கொண்டால் சுவையாகவும் மணமாகவும் இருக்கும்.

– ரமா ராமநாதன், நாகர்கோவில்.

சேமியா பாயசம் நீர்க்க இருந்தால் மூன்று ஸ்வீட் பிரெட் சிலைஸ்களை சூடான பாலில் தோய்த்துப் பிழிந்து மசித்துப் பாயசத்தில் சேர்க்கவும். பாயசம் பதம் சரியாவதுடன் சுவையும் மாறாமலிருக்கும்.

– ப. மீனலோசினி, சென்னை.

(சிறுதுண்டுகளாக நறுக்கியது) – 1 கப், முந்திரிப்பருப்பு – ¼ கப், பச்சைப்பட்டாணி – ½ கப், மஞ்சள்தூள் – ½ ஸ்பூன், சீரகத்தூள், 2 ஸ்பூன், கரம்மசாலா – ½ ஸ்பூன், இலவங்கம் – 2, பிரியாணி இலை – 2, பட்டை – சிறிதளவு, இஞ்சி பூண்டு விழுது – 1



ஸ்பூன், பச்சைமிளகாய் – 4, தண்ணீர் – 6 கப், நெய் – 1 ஸ்பூன், எண்ணெய், உப்பு – தேவையான அளவு.

**செய்முறை:**

வாணலியில் நெய் விட்டு முந்திரிப் பருப்பை வறுத்தெடுக்கவும். பின் அதே வாணலியில் சிறிதளவு எண்ணெய் விட்டு வெள்ளரிக்காயைப் போட்டு சிறிதளவு மஞ்சள்தூள், உப்பு சேர்த்து வதக்கவும். வெள்ளரிக்காய் இலேசாக வதங்கியதும் எடுத்து தனியே வைக்கவும். அரிசி, பருப்பை களைந்து அத்துடன் மஞ்சள்தூள், உப்பு, சீரகத்தூள், கரம்மசாலா சேர்த்து கலந்து வைக்கவும்.

வாணலியில் ஒரு டேபிள்



ஸ்பூன் எண்ணெய் விட்டு பிரியாணி இலை, பட்டை, இலவங்கம் போட்டு தாளிக்கவும். பின் இஞ்சி பூண்டு விழுதை சேர்த்து பச்சை வாசனை போகும் வரை வதக்கவும். அதில் அரிசி கலவையைக் கொட்டி, நன்றாகக் கிளறி விட்டு தண்ணீரை ஊற்றவும். கீறிய பச்சை மிளகாய், பச்சைப்பட்டாணி சேர்த்து மூடி வேக விடவும்.

நீர் பாதியாக வற்றியதும் வெள்ளரிக்காய், முந்திரிப்பருப்பை கலந்து வேகவிடவும். கிச்சடி வெந்ததும் மேலே சிறிதளவு தேங்காய்த்துருவல், மல்லித்தழையை தூவி இறக்கி சுடச்சுட சாப்பிடவும்.

## பாம்பே சட்னி

**தேவையான பொருட்கள்:**

கடலை மாவு – 100 கிராம், பச்சைமிளகாய் – 6, கடுகு – ½ ஸ்பூன், கடலைப்பருப்பு, உளுத்தம் பருப்பு – தலா 1 ஸ்பூன், தேங்காய் எண்ணெய் – 2 ஸ்பூன், உப்பு – தேவைக்கேற்ப.

**செய்முறை:**

வாணலியில் எண்ணெய் விட்டு கடுகு, உளுத்தம் பருப்பு தாளித்து கடலைப்பருப்பு, நறுக்கிய பச்சைமிளகாயை போட்டு வதக்கவும். கடலைமாவை 200 லிட்டர் நீர்விட்டு கரைத்து அதில் ஊற்றி உப்பு சேர்த்து



கிளறி இரண்டு நிமிடம் கழித்து இறக்கவும். இதுவே பாம்பே சட்னி.

இட்லி, தோசைக்கு தொட்டுக் கொள்ள அருமையாக இருக்கும்.

தயிரை சுத்தமான துணியில் வடிகட்டி, நீர் முழுவதும் வடிந்த பிறகு, அதனுடன் தேவைக்கேற்ப சர்க்கரை, ஏலக்காய்தூள், கிராம்பு, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம் கலந்து குளிர வைத்து, ஸ்ரீகண்ட் செய்து சாப்பிட்டால் உடல் உஷ்ணம் குறையும்.

* மண்சட்டியில் உறை ஊற்றிய தயிர் கெட்டியாகவும், சுவையாகவும் இருக்கும். சீக்கிரம் புளிக்காது. ஜில்லென்றும் இருக்கும். உடம்புக்கும் மிக நல்லது.

* வீட்டுக்குச் சுண்ணாம்பு அடிக்கும் போது சுண்ணாம்புக் கலவையுடன் வார்னிஷ் சிறிதளவு கலந்து அடித்தால் நீண்டகாலம் உதிராது.

– ஆர்.ராஜலட்சுமி, சென்னை.

## பிரெட் ரெய்தா

**தேவையான பொருட்கள்:**

பிரெட் துண்டுகள் – 5, தேங்காய் பத்தைகள் – 2, பச்சை மிளகாய் – 2, இஞ்சி – சிறு துண்டு, கெட்டித்தயிர் – 1 கப், கடுகு, உளுத்தம் பருப்பு – ½ ஸ்பூன், கொத்தமல்லித்தழை – சிறிதளவு, எண்ணெய் – 6 ஸ்பூன், உப்பு – தேவையான அளவு.

**செய்முறை:**

பிரெட்டை சிறுதுண்டுகளாக நறுக்கி தோசைக்கல்லில் எண்ணெய் விட்டு ரோஸ்ட் செய்து கொள்ளவும். தேங்காய், பச்சை மிளகாய், இஞ்சி இவற்றை விழுதாக அரைத்துக் கெட்டித் தயிரில் உப்புடன் சேர்த்து கலக்கவும்.

ஒரு ஸ்பூன் எண்ணெயில் கடுகு, உளுத்தம் பருப்பை தாளித்து தயிரில் ஊற்றி பிரெட் ரோஸ்ட்டுகளையும் அத்துடன் போட்டு பத்து நிமிடங்கள் ஊற வைத்து அகலமான தாம்பாளத்தில் தனித்தனியாக எடுத்து வைக்கவும். அதன் மேல் நறுக்கிய கொத்தமல்லித் தழையை தூவி அலங்கரிக்கவும். பிரெட் ரெய்தா சாப்பிட சுவையாக இருக்கும். *



சூரியன் சுட்டெரிக்கத் துவங்கிய முற்பகல் நேரம் கயல்விழி மூச்சு வாங்க கண்மாய்க் கரையோரமாய் ஓடிக் கொண்டிருந்தாள். கொளுத்திய வெயிலோ உடம்பில் ஊறிய வியர்வையோ அவளை எதுவும் செய்யவில்லை.

அவளது மனம் முழுக்க உற்சாக ஊற்று பீறிட்டுக் கொண்டிருந்தது. இந்த உற்சாகத்திற்கான காரணத்தை தன் தோழியிடம் உடனே சொல்லியாக வேண்டும் என்ற ஆவலில் காலில் செருப்பு கூட போடாமல்

ஓடிக் கொண்டிருந்தாள்.

கோடைக்கால வெயிலில் கண்மாய் காய்ந்து வறண்ட பூமியாய் மாறியிருக்க, கரையோரமாய் வரிசையாய் நின்ற ஆலமரங்கள் குளிர்ச்சியான தென்றலை வாரி வழங்கிக் கொண்டிருந்தது.

எதிரே புல்லுக்கட்டோடு வந்து கொண்டிருந்த தேனம்மா கயல்விழியைக் கண்டதும் நின்றாள்.

“ஏ புள்ள கயலு! ஏன் இப்படி ஓடியாற?”

‘‘பாட்டி! ரஞ்சிதம் உங்கூடத்தானே புல்லு பறிக்க வந்தாள்?”

“ஆமா! பறிச்சிட்டுத்தான் இருக்கா.”

‘‘எங்கே? செட்டியார் பண்ணையில தானே?”

“ஆமா”

‘‘நான் அவளைப் பார்க்கத்தான் போயிட்டு இருக்கேன். நீ போ பாட்டி.”

“அதுக்கு ஏன்டி ஓடுற? நடந்துதான் போயேன்.”

‘‘பாட்டி! நான் இன்னிக்கு கோயம்புத்தூருக்கு போறேன்.”

“கோயம்புத்தூருக்கா?”

“ம். எங்க அத்தை வீட்டுக்கு போறேன். கொஞ்ச நாள் அங்கேதான் இருப்பேன்.”

“என்ன விசேஷம்?”

“அதெல்லாம் சொல்றதுக்கு நேரமில்ல. மாமா வீட்டுக்கு வந்திருக்கு. நான் ரஞ்சிதத்துகிட்ட சொல்லிட்டு உடனே கிளம்பணும். வரட்டுமா?’’ என்றவள்



# அன்பள்ள மன்னவனே...

-சொ.கலைவாணி

தேனம்மாவின் பதிலை எதிர்பாராமல் மீண்டும் ஓடத் துவங்கினாள்.

பத்தாவது நிமிடத்தில் செட்டியார் பண்ணை குளிர்சோலையாய் தென்பட, ஓடுவதை நிறுத்திவிட்டு மரப்பலகையால் ஆன உயரமான கேட்டை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள்.

வரிசையாய் தென்னை மரங்கள் பசுமையாய் நிற்க, கீழே பாத்திகளில் நீர் பாய்ந்து கொண்டிருந்தது. ரஞ்சிதத்தை தேடியவாறே பாத்திகளை சேதப்படுத்தாமல் வரப்பின் மீதேறி நடந்தாள்.

முருங்கை மரத்தடியில் சில பெண்கள் புற்களை பறித்துக் கொண்டிருக்க, அவர்களை குறிவைத்து நடந்தாள்.

''ரஞ்சிதம்! ரஞ்சிதம்'' கயல்விழியின் குரலில் வெயில் படாமல் தாவணி தலைப்பால் முக்காடிட்டு இருந்த ரஞ்சிதம் திரும்பினாள். கயல்விழியைக் கண்டதும் முகம் மாறினாள்.

"கயல்! என்னடி இவ்வளவு தூரம்?"

"உன்னைப் பார்க்கத்தான் வந்தேன்."

''என்னையா? காலையிலதானே பார்த்தோம்."

"ரஞ்சிதம்! இப்படி வாயேன். உங்கிட்ட முக்கியமான விஷயம் பேசணும்" என்றவாறே அவளது கைப்பற்றி ஓரமாய் அழைத்துப் போனாள் கயல்விழி.

"என்னடி?"

"ரஞ்சி! ஊர்ல இருந்து மாமா வந்திருக்கு."

"எந்த மாமா?"

''பெரிய மாமா. கோயம்புத்தூர்ல இருந்து."

''ஓ! என்னவாம்? பையன் கல்யாணத்துக்கு பத்திரிகை அடிச்சிக் கொண்டு வந்தாராக்கும்?"

''ம்ஹூம். அடுத்தவாரம்தான் நிச்சயதார்த்தமாம்."

"அதைச் சொல்றதுக்கா இவ்வளவு தூரம் வந்திருக்கார்?"

"இல்ல. என்னைக் கூட்டிட்டு போக வந்திருக்காங்க" கயல்விழி உற்சாகமாய்ச் சொல்ல, ரஞ்சிதத்தின் முகம் மலர்ந்தது.

"ஏய்! என்னடி சொல்ற? நிசமாவா?"

"ம். இன்னிக்கே நான் கிளம்பணுமாம்."

"என்னடி அதிசயமா இருக்கு. ஒருவேளை உங்க அத்தை மனசு மாறி உன்னையே தம்புள்ளைக்கு கட்டி வெச்..."

"ஏய் ஏய்! இல்லப்பா. அப்படியெல்லாம் எதுவும் இல்ல."

"என்ன?"

"அத்தைக்கு சர்க்கரை வியாதி, ரத்தக் கொதிப்புன்னு ஏகப்பட்ட வியாதி இருக்கில்ல. அதனால உடம்புக்கு ரொம்ப முடியலையாம்."

"அதுக்கு?"

''இப்ப வேற நிச்சயம், பவுன் உருக்குறது, கல்யாணம்னு வரிசையா விசேஷம் வருதில்ல. அதான் கூடமாட ஒத்தாசைக்காக..."

ரஞ்சிதத்தின் முகம் மீண்டும் கடுத்தது. "புரிஞ்சு போச்சு. அப்போ உம்மேல உள்ள பிரியத்தில கூப்பிடல. வீட்டுல வேலை செய்யத்தான் கூப்பிட்டிருக்காங்க. நீயும் கிளம்பிட்ட?"

''அத்தையும் பாவம்தானே ரஞ்சி? அவங்களுக்கு ஒண்ணுன்னா நாமதானே உதவிக்கு போகணும்?"

''ம். உன்னை மாதிரி ஒரு ஏமாளி கிடைச்சா யார்தான் தலையில மொளகா அரைக்க மாட்டாங்க."

"ரஞ்சி."

"உம் மாமா கூப்பிட்டதும் நீ சரின்னு தலையாட்டிட்டியா?"

"ம்."

"ஏன்டி இப்படி இருக்க? வரமுடியாதுன்னு சொல்ல வேண்டியதுதானே?"

''மாமா பாவம் ரஞ்சி. அவுககிட்ட போயி எப்படி சொல்றது?"

''அப்போ நீ மட்டும் பாவமில்லையா? மாமன் மகன்தான் என் உசிருன்னு சொல்லிட்டு திரிஞ்சியே. உன் அம்மாவும் அப்பாவும் கூட அவன்தான் உம்மாப்பிள்ளைன்னு முடிவு பண்ணியிருந்தாங்களே."

கயல்விழி விரக்தியாய் புன்னகைத்தாள். "நாங்க மட்டும் ஆசைப்பட்டா போதுமா? அதுக்கெல்லாம் ஒரு கொடுப்பினை வேணும். எனக்கு கொடுத்து வைக்கல."

''ஏன்டி! உனக்கென்ன குறைச்சல்? அழகில்லையா? சொத்துபத்தில்லையா? எது இல்ல உங்கிட்ட?"

"படிப்பு இல்லையே. மாமன் வீட்ல எல்லாருமே படிச்சிருக்காங்க. பெரிய அத்தான், சின்னத்தான், அவுக தங்கச்சி எல்லாருமே நிறைய படிச்சிருக்காங்க. பெரிய பெரிய உத்தியோகத்தில இருக்காங்க. நான் வெறும் எட்டாங்கிளாஸ்தானே?"

''அது ஒரு குறையா கயல்? எழுத

படிக்கத் தெரிஞ்சா போதாதா?"

"நம்மூருக்கு அது போதும். பட்டணத்துல வாழுறவங்களுக்கு போதாதே. படிக்காத கழுதைன்னுதான் என்னை சின்னத்தான் சொல்லும்."

"என்ன? அவரும் வந்தாரா?"

''இப்ப வரல. முன்னால இங்க வரும்போது அப்படித்தான் சொல்லும். பாட்டி இறந்தப்ப வந்தாங்க. அதுக்குப் பிறகு வரவே இல்லையே. படிப்பு, வேலைன்னு இங்க வர்றதேயில்லை.'' கயல்விழியின் வார்த்தையில் இழையோடிய ஏக்கமும் வருத்தமும் உணர்ந்த ரஞ்சிதம் பரிவாய் தோழியைத் தொட்டாள்.

''அதுவும் நல்லதுக்குத்தான்னு நினைச்சுக்க கயல்."

"என்ன?"

"ஆமா! அடிக்கடி வந்து போனாங்கன்னா உம்மனசில நீ ஆசைய வளர்த்திட்டு இருப்ப. இப்ப அந்த ஏமாற்றம் அதிகமாத் தெரியாது."

"யார் சொன்னது? இப்பவும் என் மனம் முழுக்க அத்தான்தான் நிறைந்திருக்கிறார். அவர்கூட வாழ முடியாட்டியும் பக்கத்துல இருந்து பார்க்கலாம்ன்ற ஆசையிலதான் போறேன். இந்த சந்தோஷம் மட்டும் எனக்குப் போதும்."

"ஏய்! என்னடி சொல்ற?"

''உண்மைதான் ரஞ்சி! மாமா கூப்பிட்டதில அம்மாவுக்குக் கொஞ்சமும் விருப்பமில்லை. நான்தான் அடம்பிடிச்சி சம்மதிக்க வெச்சேன்."

"எதுக்கு? அங்கே போய் வேலைக்காரியா இருக்கிறதுக்கா? உன்னை யாருடி மதிப்பாங்க?"

"நான் எந்த மதிப்பையும் எதிர்பார்த்து அங்கே போகல ரஞ்சி. சின்னத்தானை பார்த்து அஞ்சு வருஷமாச்சு. இன்னும் ஒரு மாசத்தில இன்னொருத்தியோட புருஷனாகிடுவாரு. அதுக்கப்புறம் அவரை பார்க்கவோ பேசவோ முடியாது. அதனால கொஞ்சநாள் என் கண்ணு நிறைய மனசு நிறைய அத்தானை பார்த்துக்கிறேன்."

"க...யல்."

"கடைசி வரைக்கும் இந்த நினைப்பு மட்டும்தானே என் கூட இருக்கப் போகுது? நான் போயிட்டு வரட்டுமா ரஞ்சி?"

"எப்போ போகணும்?"

''மதிய சாப்பாடு முடிஞ்சதும் கிளம்பணும்னு மாமா சொல்லிச்சி."

## ரெயில் என்ஜினை இழுக்கும் சாதனை மனிதர்கள்!

ஐரோப்பாவில் பலசாலி மனிதர்கள் பலர் இருக்கிறார்கள். சாதனை படைப்பதற்காகவே இவர்கள் தங்கள் உடல் எடையை அதிகரித்துக் கொள்கிறார்கள். லத்வியாவின் ரிகா நகரில் 254 டன் எடையுள்ள ரெயில் என்ஜினை இரண்டு பலசாலி மனிதர்கள்



இழுத்து சாதனை படைத்துள்ளனர். இந்த ரெயில் என்ஜின் 1972-ம் ஆண்டு ரஷ்யாவில் தயாரிக்கப்பட்டதாகும். இந்த ரெயில் என்ஜின் 120 கார்கள் அல்லது 50 யானைகளின் எடைக்கு சமமானதாகும்.

இதுபோன்ற சாதனைகளை ஏற்கனவே லத்வியாவின் பலசாலி மனிதர்கள் சாதித்து காட்டியுள்ளனர். இருந்தாலும் புதுப்புது சாதனைகளை நிகழ்த்திக் காட்டுவதில் இவர்களை யாரும் விஞ்சிவிட முடியாது. அந்த அளவுக்கு தங்கள் பலத்தை நிரூபிப்பதில் பெரும் ஆர்வம் மிக்கவர்களாக இவர்கள் இருக்கிறார்கள். 254 டன் ரெயில் என்ஜினை இழுத்து சாதனை நிகழ்த்தப்பட்ட அந்த நாள் முழுவதும் லத்வியா ரெயில் நிலைய வரலாற்று நூதன சாலையில் விசேஷ கண்காட்சிகளும் இடம் பெற்று இருந்தன.

இங்கே நம்நாட்டில் யார் அதிகம் சாப்பிடுகிறார்கள், ஒருவர் ஒரே சமயத்தில் எத்தனை இட்லிகளை விழுங்குகிறார்கள் என்ற சாதனைகளில்தான் அக்கறை செலுத்துகிறோமே தவிர இத்தகைய சாதனைகளை எப்பொழுதுதான் நிகழ்த்தப் போகிறோமோ?

''சரி! பத்திரமா போயிட்டு வா'' ரஞ்சிதத்தின் கண்கள் லேசாய் கலங்கின. சிறுவயது முதலே இணை பிரியாமல் ஒட்டி வளர்ந்தவர்கள்.

“கயல்! போனதும் கடிதம் போடு.”

“ம்.”

“பார்த்து ஜாக்கிரதையா நடந்துக்க. யாரும் ஒரு வார்த்தை சொல்ற மாதிரி நடந்துக்காதே.”

“ம். சரி.”

“கயல்! பெரிய வீட்டு விசேஷம். நல்ல துணிகளா எடுத்துக்கிட்டு போ.”

“எல்லாம் எடுத்து வெச்சிட்டேன். சரி! நான் போயிட்டு வர்றேன்.”

“ம்” தலையாட்டியவாறே கையசைத்தாள் ரஞ்சிதம்.

கலங்கிய விழிகளோடு கையசைத்துவிட்டு நடக்கத் துவங்கினாள் கயல்விழி.

வீட்டை நெருங்கும் போதே மாமாவின் குரல் வருத்தமாய் ஒலித்தது. அம்மாவிடம் பேசிக் கொண்டிருக்கிறார் எனப் புரிந்ததும் மவுனமாய் பின்பக்க வழியாக வீட்டிற்குள் நுழைந்தாள். வராந்தாவில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார் காளிதாஸ்.

“நானும் ரொம்ப ஆசைப்பட்டேம்மா. எப்படியாவது கயலை மருமகளாக் கிடணும்னு. ஆனா உன் மதினிதான்...”

“விடுங்கண்ணே! உங்க புள்ளைக பெரிய படிப்பு படிச்சிருக்கு. அதுக்கேத்த மாதிரிதானே பொண்ணு தேடணும்.”

“படிப்பு பெரிய விஷயமில்லம்மா. அவ ஏதோ புதுசுபுதுசாக் காரணம் சொல்றா. உறவுக்குள்ள கல்யாணம் பண்ணினா ஊனமான குழந்தைங்க பொறக்குமாம்.”

“ஏண்ணே! நான் கூடத்தான் நம்ம அத்தை மகனைக் கட்டியிருக்கேன். அஞ்சு பிள்ளையும் பெத்திருக்கேன். எல்லாப் பிள்ளையும் நல்லாத்தானே இருக்கு?”

“அதானே! ஆனா அவளைப் பத்தி உனக்குத் தெரியாதா? அவ சொல்றதுதான் சரின்னு சாதிப்பா.”

“சரி! இனிமே இதைப்பத்தி பேசி என்னாகப் போகுது? நீங்க ஒண்ணும் வருத்தப்படாதீங்கண்ணே! வாங்க சாப்பிடலாம்.”

“இரும்மா! மச்சானும் வந்திடட்டும். சேர்ந்து சாப்பிடலாம்.”

“சரிண்ணே!”

“ஆமா! கயலுக்கு ஏதாவது மாப்பிள்ளை பார்க்கிறியா?”

இந்தக் கேள்வியால் திடுக்கிட்டுப் போனாள் கயல்விழி. அம்மா என்ன சொல்லப் போகிறாள் என காதைக் கூர்மையாக்கினாள்.

“இன்னும் எதுவும் பார்க்கலண்ணே.”

“ஏம்மா! இங்கே எந்த வரனும் வரலையா? நான் வேணா...”

“அதெல்லாம் கேட்டு வர்றாங்கதான். பெரியவ கூட அவ கொழுந்தனுக்கு கேட்டுகிட்டே இருக்கா. நான்தான்... நம்ம ஹரிக்கு கேட்பீங்களோன்னு நினைச்சி... வேற எதையும் பேசாம விட்டுட்டேன். இனிமே பார்க்க வேண்டியதுதான். அவ ஜாதகத்தைக் கொடுத்தனுப்பணும். அவுக பார்த்துட்டு பொருத்தம் நல்லா இருந்தா மேற்கொண்டு பேசணும். இல்லேன்னா வேற இடம் பார்க்கணும்.”

“ஹச்ச்” எனத் தும்மினாள் கயல்விழி. இருவரும் திரும்ப, சாவித்திரி கேட்டாள்.

“கயலு! நீ எப்ப வந்தே?”

“இதோ இப்பத்தான்...”

“என்னம்மா! உன் கூட்டாளிகிட்ட சொல்லிட்டியா?”

“சொல்லிட்டேன் மாமா.”

“ஒரு மாசத்துக்குத் தேவையான துணிமணி எடுத்து வெச்சுக்கம்மா! கல்யாணம் முடிஞ்ச பிறகு வரலாம்.”

“எதுக்குண்ணே! மதினிக்கு சுகமாகுற வரைக்கும் இருந்தாப் போதும்.”

“இல்ல சாவித்திரி. எப்படியும் உறவுக்காரங்க வர போக எப்பவும் விசேஷமாத்தான் இருக்கும். கொஞ்ச நாள் இருக்கட்டும். நீ கல்யாணத்துக்கு வரும்போது கூட்டிட்டு வந்திடு.”

“ம். சரி” அரைமனதோடு தலையாட்டினாள் சாவித்திரி.

கயல்விழியின் மனதிற்குள் ஆனந்தம் கும்மியடித்தது. ‘அடேயப்பா! ஒரு மாதம்! முப்பதுநாள்... முழுதாய் முப்பதுநாள் அத்தானைப் பார்க்கப் போகிறோம்’ என குதூகலித்தாள்.

அவளது வரவால் அங்கு என்னென்ன நிகழப்போகிறது என அவள் உணர்ந்திருக்கவில்லை.

## 2

அப்பா வந்தபிறகு ஒன்றாய் அமர்ந்து சாப்பிட்டுவிட்டு சற்று நேரம் பேசிவிட்டு புறப்பட்டு, மாமா வீடு போய்ச் சேர நள்ளிரவாகி விட்டிருந்தது. வீடு முழுக்க இருள் கவிழ்ந்திருக்க, வெளிகேட்டில் மட்டுமே இரண்டு விளக்குகள் எரிந்து

கொண்டிருந்தன.

காளிதாஸ் காரை விட்டு இறங்காமலேயே ஹாரன் அடிக்க, முழுதாய் ஐந்து நிமிடம் கழித்தே மாடியறையில் வெளிச்சம் தோன்றியது. சற்றும் தூக்கக் கலக்கமின்றி அமர்ந்திருந்த கயல்விழியிடம் திரும்பினார்.

''ரொம்ப நேரமாகிப் போச்சேம்மா. தூக்கம் வருதா?''

''இல்ல மாமா.''

''அத்தை மாத்திரை போட்டுட்டு தூங்கியிருப்பாள். அதான் கேட் திறக்க இவ்வளவு நேரமாகுது'' என்றவர் மீண்டும் ஹாரன் அடிக்க, கதவு திறக்கப்பட்டது.

கயல்விழி ஆர்வமாய் காரிலிருந்து எட்டிப் பார்க்க, மூத்தவன் சுதாகரன் தூக்கம் கலைந்த நிலையில் இருபுறமும் கேட்டை அகலமாய் திறந்து வைத்தான். கார் சின்ன உறுமலுடன் போர்டிகோவை அடைந்து, ஏற்கனவே அங்கு நின்றிருந்த இன்னொரு காரின் பின்னே சென்று நின்றது.

காளிதாஸ் இறங்கி, மறுபுறமாய் வந்து கயல்விழிக்கு கதவைத் திறந்துவிட, உடல் முழுக்க பரபரப்போடு காரை விட்டு இறங்கினாள். போர்டிகோவைச் சுற்றிலும் அமைந்திருந்த பூங்காவை வியப்பாய் பார்த்துக் கொண்டிருக்கையில் கேட்டை பூட்டிவிட்டு வந்தான் சுதாகரன்.

''ஏம்ப்பா இவ்வளவு லேட்?''

''வர்ற வழியில ட்ராபிக் ஜாம். ஏதோ சரக்கு லாரி ரோட்ல கவிழ்ந்திடுச்சாம். அதைக் கிளியர் பண்ணிவிட ரொம்ப லேட்டாயிடுச்சி.''

''ஏய் கயல்! எப்படி இருக்கே? ரொம்ப வளர்ந்திட்ட போலிருக்கு?'' என்றவனைப் பார்த்து கூச்சமாய் புன்னகைத்தாள்.

''நல்லா இருக்கேன் பெரியத்தான். நீங்க எப்படியிருக்கீங்க? அக்கா... குழந்தைங்க எல்லாம்...''

''எல்லாரும் சவுக்கியமா இருக்கோம். எல்லாருமே தூங்கிட்டாங்க. உள்ளே போ.''

''என் பெட்டி...''

''நான் எடுத்திட்டு வர்றேன். அப்பா! வர்ற வழியில சாப்பிட்டீங்களா? இல்லையா?''

''நான் சாப்பிடலாம்னு சொன்னேன். கயல் வேண்டாம்னு சொல்லிட்டா.''

''ஏன் கயல்?''

''எனக்கு... ஓட்டல்ல எல்லாம் சாப்பிட்டு பழக்கமில்ல பெரியத்தான்.''

''தினமுமா சாப்பிடப் போறோம்? அவசரத்திற்கு சாப்பிட்டு பழகிக்க வேண்டியதுதான். மணி ஒன்னாகுது. இவ்வளவு நேரமா வயித்தைக் காயப் போடுவ?''

''இல்ல. அம்மா பலகாரமெல்லாம் செய்து தந்திருந்தாங்க. நானும் மாமாவும் அதையே சாப்பிட்டோம்.''

''சரி! உள்ளே வாங்க'' என்றவாறு அவன் சூட்கேஸோடு வீட்டிற்குள் நுழைய, பிரமிப்பான பார்வையோடு அவர்களைப் பின் தொடர்ந்தாள்.

'இது என்ன வீடா? அரண்மனையா? சினிமாவில் பார்ப்பதுபோல் எவ்வளவு பெரியதாய் இருக்கிறது?' செருப்பை வெளியே கழற்றிவிட்டு வீட்டிற்குள் காலை வைத்ததும் சில்லென்றிருந்தது.

பளபளவென இருந்த தரையை வியப்பாய் பார்த்தாள். 'இதிலா காலை வைக்க வேண்டும்? ஐயோ! அழுக்காகி விடுமே.' தயக்கமாய் காலூன்றினாள். எங்கே வழுக்கி விடுமோ என்ற அச்சத்தோடு மெல்ல நடந்தாள்.

''அப்பா! கயல் எந்த ரூம்ல தங்குவாள்? இதை எங்கே வைக்கணும்?''

''மாடியில உன் ரூமுக்கு பக்கத்து ரூம்ல வெச்சிடுப்பா''

''அடடா! எம்மாமனார் வந்திருக்காருப்பா. அங்கேதான் தங்க வெச்சிருக்கேன்.''

''சரி! அப்போ உமா ரூம்ல வெச்சிடு.''

''கதவைப் பூட்டியிருப்பாளே. இப்ப எழுப்பினா அவ தூக்கம் கெட்டுடும். உங்க ரூம்ல வெச்சிடவா? காலையில உமா ரூமுக்கு ஷிப்ட் பண்ணிடலாம்.''

''சரி'' காளிதாஸ் தலையாட்ட, எதிரே இருந்த அறைக்குள் நுழைந்து பெட்டியை வைத்துவிட்டு வெளியே வந்தான்.

''சரிப்பா! நான் படுக்கிறேன். காலையில எனக்கு மீட்டிங் இருக்கு.''

''போய் படுத்துக்கப்பா.''

''ஓ.கே. குட்நைட். குட்நைட் கயல்.''

''ம்.ம்'' கயல்விழி தலையாட்ட, அவன் மாடிக்குச் சென்ற சில கணங்களில் விளக்கு அணைக்கப்பட்டது. வீடு வெகு அமைதியாய் இருந்தது. இப்போது தான் எங்கே படுப்பது? தயக்கமாய் காளிதாஸை ஏறிட்டாள்.

''மாமா! நான்... எங்கே...''

''இதுதாம்மா நம்ம ரூம். கட்டில்ல அத்தை படுத்திருப்பா. நீயும் போய்

## பலமாடிக் கட்டிடத்தில் பசுமைத் தோட்டம்!

மத்திய லண்டனில் பலமாடிக் கட்டிடங்களின் சுவர்களில் செங்குத்தான பசுமைத் தோட்டங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தை லண்டன் மேயர் பெரிஸ் ஜோன்ஸ் அறிமுகப்படுத்தி உள்ளார். சுற்றுப்புற சூழல் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் இந்த பசுமை தோட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. 68 அடி உயரம் உள்ள கட்டிடத்தின் சுவர் ஒன்றில் 10 ஆயிரத்திற்கும் அதிகமான தாவரங்களைக் கொண்ட செங்குத்தான தோட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்த பசுமைத் தோட்டம் விக்டோரியா ரெயில் நிலையத்திற்கு அருகில் கண்ணைக் கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.



கடும் மழைக் காலத்தில் மத்திய லண்டனில் வெள்ளம் ஏற்படுவதை இதுபோன்ற செங்குத்தான தோட்டங்களினால் தவிர்க்க முடியும் என்று புவியியல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். இதுபோன்ற பசுமைத் தோட்டத்தில் 20 பருவ கால தாவரங்கள் உள்ளன. வருடம் முழுவதும் இந்த பசுமைத் தோட்டச்சுவர் பூத்துக் குலுங்கும். பறவைகள், வண்ணத்துப் பூச்சிகள், வண்டுகள் என பல்வகை உயிரினங்கள் இந்தத் தோட்டத்தில் பராமரிக்கப்படும்.

2005-ம் ஆண்டு வெலிங்டன் நகரில் இதுபோன்றதொரு தோட்டம் உருவாக்கப்பட்டது. ஆனால் நீர்வழங்கல் முறைகள் திருப்தி அளிக்காமல் போனதால் அதிலுள்ள தாவரங்கள் இறக்க இந்த திட்டம் கைவிடப்பட்டது. இப்போது லண்டனில் இத்திட்டம் வெற்றிகரமாக கையாளப்பட்டு வருகிறது. இந்த செங்குத்தான பசுமைத் தோட்டத்தால் சுற்றுப்புற சூழலும் இயற்கையாக மாறும் என்று வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

---

படுத்துக்க."

"நீங்க?"

"நான் இப்படி ஹால்ல படுத்திடுறேன். நாளைக்கு உனக்கு ஒரு ரூம் ஒதுக்கித் தந்திடுறேன்."

"சரி... மாமா! மாமா!"

"என்னம்மா?"

"நான் இங்கே படுத்துக்கிறேன். நீங்க ரூம்ல போய் படுத்துக்கங்க."

"இங்கேயா? வேணாம்மா"

"இல்ல மாமா! அத்தை உடம்புக்கு முடியாதவங்க. நான் வீட்லயே தூங்கும்போது அம்மாமேல கையக் காலைப் போடுவேன். அதான்..."

"அப்படியா? சரி! அப்ப இந்த சோபாவில படுத்துக்கிறியா?"

"வேணாம் மாமா! இப்படி தரையில படுத்துக்கிறேன். அப்பத்தான் வசதியா இருக்கும். ஒரு பாய் மட்டும் கொடுத்தாப் போதும்."

"இதோ வர்றேன்" என்றவர் அறைக்குள் நுழைந்து ஒரு போர்வையும் தலையணையும் கொண்டு வந்தார்.

"இந்தாம்மா! படுத்துக்க."

"சரி மாமா."

"கயல்! தப்பா எடுத்துக்காதேம்மா."

"எதுக்கு மாமா?"

"இப்படி... ஹால்ல படுக்க வெச்சதுக்கு."

"என்ன மாமா இது? நான் என்ன தனி ரூம்லயா படுத்து தூங்கி வளர்ந்தேன்? இது ஒண்ணும் சிரமமில்ல மாமா! நீங்க போய் தூங்குங்க" என்றவளைப் பார்த்து புன்னகைத்தார்.

"சரிம்மா! அப்புறம்... ரூம்ல ஏசி ஓடுது. அதனால கதவை திறந்து போட முடியாது."

"பூட்டிக்கங்க மாமா! நான் படுத்துக்கிறேன்." என போர்வையை விரித்தாள். காளிதாஸ் தலையாட்டிவிட்டு ஹாலில் எரிந்த விளக்குகளை அணைத்து விட்டு ஷாண்ட்லியரை மட்டும் எரியவிட்டு தன் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டார்.

கயல்விழிக்கு திக்திக்கென இதயம் அடித்துக் கொண்டது. புது இடம். துணைக்கு ஒருவரும் இல்லாமல் தனித்து விடப்பட்டதும் தாயின் நினைப்பு வந்தது. இத்தனை வருடங்களாய் தாயின் நிழலில் இருந்தாயிற்று.

இங்கே யாருமில்லாமல் ஒதுக்கப் பட்டதைப் போல் மனம் கலங்கியது.

படுக்கத் தோன்றாமல் சுவரோடு சாய்ந்து அமர்ந்தாள். காரில் உட்கார்ந்தே வந்ததில் கால்கள் வலித்தது. அம்மா இருந்தால் தைலம் போட்டு தேய்த்து விடுவாள்.

இங்கே யாரிடம் தைலம் கேட்பது? காலை அழுத்திப் பிடித்தவாறே கண்களை சுழலவிட்டாள். முப்பது நாற்பது பேர் படுத்துறங்கும் அளவிற்கு விசாலமான ஹால். பாதி சுவரை மறைத்தபடி பெரிய டி.வி.

அதனருகே ஸ்பீக்கர்... சவுண்ட் சிஸ்டம் என பெரிது பெரிதாய் இடத்தை அடைத்துக் கொண்டிருந்தது. அனைவரும் குடும்பமாய் அமர்ந்து பார்க்கும்படி குஷனோடு கூடிய சோபாக்கள். நடுவே கண்ணாடியால் செய்யப்பட்ட டீப்பாய்.

வீட்டிலிருந்த ஒவ்வொரு பொருட்களும் விலை உயர்ந்ததாய் இருக்க, புருவம் உயர்த்தி வியந்தாள் கயல்விழி.

'இந்த வீட்டைக் கட்டத்தான் மாமா ஊரிலிருந்த சொத்துக்களையெல்லாம் விற்றாரா? ம். என்ன சொத்து? பட்டணத்தில் வாழ்பவர்கள் அதற்கேற்றாற்போல் ஆடம்பரமாய் வாழ வேண்டியதுதான்.

இப்படி ராஜவாழ்க்கை வாழ்பவர்களுக்கு நம்ம ஊர் பிடிக்குமா? நம் வீட்டில் பெரிய மெத்தைக் கட்டில் கூட கிடையாதே. இந்த சோபாவே இப்படி பஞ்சாட்டம் இருக்கும்போது, வெறும் நார்க்கட்டிலில் இவர்களால் படுக்க முடியுமா? அதற்காகத்தான் மாமாவைத் தவிர யாரும் ஊர் பக்கம் வருவதே இல்லை போலும். நம் ஊரில் விருந்தினர் வந்தால் விடிய விடிய அமர்ந்து சளைக்காமல் பேசுவார்களே.

இங்கே வந்தவளை வாவெனக் கேட்கவோ, சாப்பிடுகிறாயா எனக் கேட்கவோ ஒருவரும் இல்லையே. அவரவர் அறையில் முடங்கிக் கொண்டார்களே. இதுதான் இவர்களின் பழக்கமோ?

ஹூம். காத்திருந்து வரவேற்கும் அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்த ஆளா நான்? வெளிப்படையாய் சொல்ல வேண்டும் என்றால் வீட்டு வேலைக்காக வந்திருக்கிறேன். எனக்கு இந்த வரவேற்பே அதிகம்.

பெரியத்தானாவது வா எனக் கேட்டான். சின்னவனைக் கண்ணில் கூட படவில்லையே. கல்யாணமாப்பிள்ளை அல்லவா? கல்யாணக் கனவோடு தூங்கிக் கொண்டிருப்பானோ? ம். இருக்கும்.

இரவே! சீக்கிரம் விடியேன்! நான் அவனைப் பார்க்க வேண்டும்.' தன் மனம் கவர்ந்தவனின் நினைப்போடு தரையில் படுத்தாள். சில்லெனக் குளிர்ந்தது.

புடவைத் தலைப்பால் போர்த்திக் கொண்டாள். ஷாண்ட்லியரின் ஒளி வர்ணஜாலமாய் ஹால் முழுக்க சிதறியிருக்க, அதை ரசித்தவாறே உறங்க முயற்சித்தபோது அந்த ஒலி கேட்டது. யாரோ மெதுவாய் நடக்கும் ஓசை.

சட்டென எழுந்து அமர்ந்தாள். கண்களை நாலாபுறமும் சுழற்றி தேடினாள். எல்லா அறைகளும் இறுக சாத்தியிருக்க, லேசாய் பயம் முளைத்தது. உள்ளே யாரும் நடக்கவில்லையே. அப்படியென்றால்...

இப்போது நடை சத்தம் தெளிவாய்க் கேட்க, பயமாய் எச்சில் விழுங்கினாள். எழுந்து சென்று விளக்கைப் போடக்கூட பயமாய் இருந்தது. தயக்கமாய் மாமாவின் அறையைப் பார்த்தாள்.

மாமாவைக் கூப்பிடலாமா? என்ற எண்ணம் தோன்றும் போதே வெளிப்பக்கக் கதவை யாரோ திறக்க முயற்சித்தார்கள். காதை உன்னிப்பாக்கினாள். கதவை சிரமமாய் திறக்க முயல்வது தெரிந்தது.

உடல் மொத்தமும் தூக்கிப் போட்டது. நடுக்கமாய் எழுந்து சுவரோடு ஒட்டிக் கொண்டாள். கண்கள் கதவையே வெறித்துக் கொண்டிருக்க 'க்ளக்' என்ற ஓசையோடு கதவு திறந்துக் கொண்டது. இருட்டில் ஏதோ உருவம் உள்ளே நுழைய வீறிட்டாள் கயல்விழி.

"திருடன்! திருடன்! மாமா! திருடன் வந்திருக்கான். ஓடியாங்க... பெரியத்தான்! வாங்களேன்." கண்களை இறுக மூடிக் கொண்டு கயல்விழி போட்ட கூச்சலில் வீடு மொத்தமும் அதிர்ந்தது.

கதவைத் திறந்து உள்ளே நுழைந்த ஹரிஹரன் இந்தத் திடீர் கத்தலில் பதறியடித்து அவசரமாய் விளக்குகளைப் போட்டான்.

கண்களை மூடிக் கொண்டே கத்தியவளைக் கண்டு வியந்து பின் மலர்ந்து அவசரமாய் ஓடிச் சென்று அவளது வாயை மூடினான்.

"ஏய் கயல்! ஏன் இப்படி கத்தற? எல்லாரும் எழுந்துக்கப் போறாங்க" என்ற வசீகரக் குரல் காதில் மோதியதும் உடலும் உள்ளமும் சிலிர்க்க சட்டெனக் கண்களைத் திறந்தாள் கயல்விழி.

தனக்கு வெகு அருகே நின்றவனைக் கண்டதும் மனம் படபடவென அடித்துக் கொண்டது. ஐந்து வருடங்களாய் பார்க்க ஏங்கிய முகம்... மனதிற்குள்ளாக

அழுத்தமாய் பதித்து வைத்திருந்த முகம் கண்முன்னே தோன்றியதில் கண்கள் கரித்தன.

விழிகள் விரிய நின்றவளைக் கண்டதும் புன்னகையோடு அவளது வாயை மூடியிருந்த கையை எடுத்தான் ஹரிஹரன்.

''ஏய் வாயாடி! ஸ்பீக்கர் எதையும் முழுங்கிட்டியா? இப்படி கத்துற?''

"ச்...சி..ன்னத்தான்..."

''ஆமா! உங்க ஊர்ல திருட வர்றவன் சுவரேறிக் குதிச்சி பின்பக்கமா வரமாட்டானா? நேர்வழியா வாசக்கதவை சாவிபோட்டு திறந்துதான் வருவானா? ம்?''

''அ...து... நீங்கன்னு... தெரியாம... கொஞ்சம்... சத்தம் போட்டுட்டேன்.''

''எது? இது கொஞ்சம் சத்தமா? எல்லாரும் ஏ.சி. ரூம்ல தூங்குறதால தப்பிச்சேன். இல்லேன்னா மொத்தமா வந்து என்னை மொத்தியிருப்பாங்க.''

"ஐயோ..."

"பின்னே? சத்தமா இது? என்னவோ அம்மா எழுந்துக்கல. இல்லேன்னா என்னாகியிருக்கும்?"

"எ..ன்ன... ஆகியிருக்கும்?" மிரட்சியாய்க் கேட்டாள்.

''ம்? எல்லாரையும் ஒருவழி பண்ணியிருப்பாங்க. அம்மா மாத்திரை போட்டுட்டு படுத்தா யாரும் எழுப்பக் கூடாது. விடிஞ்சப்புறம் அவங்களா எழுந்தாத்தான் நார்மலா இருப்பாங்க. அதோட இந்த ரூம்ல உமான்னு ஒரு குட்டிப்பிசாசு படுத்திட்டு இருக்குது பாரு. அதோட தூக்கம் கெட்டுப் போச்சுன்னா அவ்வளவுதான்.''

அவன் கண்களை உருட்டி மிரட்டலாய்ச் சொல்ல, இன்னும் மிரண்டாள்.

"ஏ...ன்? உமாவும்... கோபப்படுவாளா?"

"பின்னே? எங்களையே 'வந்து பாரு'ன்னு நிற்பாள். உன்னை சும்மா விடுவாளா? பாவம்! நீயே பருந்துகிட்ட மாட்டின கோழிக்குஞ்சி மாதிரி நடுங்கிட்டு இருக்கே. ஒரே நசுக்! நசுக்கிடுவா.''

"என்னத்தான் சொல்றீங்க? ஏன்... இப்படி பயமுறுத்துறீங்க? எனக்கு... ரொம்ப... பயமா இருக்கே.''

"நிஜமாவே பயமா இருக்கா?"

''ம்.'' வேகமாய் தலையாட்டினாள். அவளது மிரட்சியைக் கண்டு திருப்தியாய் புன்னகைத்தான் ஹரிஹரன்.

"ம். இந்த பயம் இருக்கட்டும். என்னையே ஒரு நிமிஷத்தில மிரள வெச்சேல்ல நீ?"

"நா...னா?"

"ஆமா! நான் பாட்டுக்கு நைட் டியூட்டி முடிஞ்சி வீட்டுக்குள்ள வந்தால் 'திருடன் திருடன்' என்று கத்தி பயமுறுத்தவில்லை?"

"அது... நான் வேணும்னே கத்தலை. திடீர்னு கதவைத் திறந்ததும் பயந்து..."

"எப்படியோ என்னை ஒரு நிமிஷம் மிரள வைச்சேல்ல?"

"வந்து... ஸாரி"

"ம். போனது போகட்டும். ஆமா! ஊர்ல இருந்து எப்போ வந்தே?"

## விமானத்தின் இறக்கை மீது பறந்த சாகச சிறுமிகள்!

இங்கிலாந்தைச் சேர்ந்த 9 வயது சிறுமிகள் ரோஸ் பவல், பிளேம் பிரெவர். இருவரும் சகோதரிகள். விமானத்தின் இறக்கை மீது உட்கார்ந்து பயணம் செய்து புதிய சாதனையை இந்த சிறுமிகள் நிகழ்த்தியிருக்கிறார்கள். இவர்கள் குடும்பத்தில் விமானத்தின் இறக்கையில் அமர்ந்து பயணித்த மூன்றாவது சந்ததியினர் இவர்கள்.

6 வயதில் இருந்தே இந்த பயணத்தை மேற்கொள்ள இவர்கள் ஆர்வமாக இருந்தனர். ஆனால் தற்போது இந்த ஆபத்தான சாதனையை இவர்கள் நிகழ்த்திக் காட்டியுள்ளனர். தசைத்தேய்வு தொடர்பான நோயினால் பாதிக்கப்பட்டுள்ள இவர்களது சிநேகிதர் எல்லியின் உயிரைக் காப்பாற்ற நிதி சேகரிக்கும் நோக்கில் ஒரு விழிப்புணர்வு பயணமாகவே இதனை மேற்கொண்டனர்.

இந்த பயணம் குறித்து ரோஸ் கூறும்



"கொஞ்சம் முன்னாலதான்."

''இப்பதான் வந்தியா? அப்போ எல்லாரும் தூங்கியிருப்பாங்களே?"

"ஆ..மா" அவள் தயக்கமாய் தலையாட்ட, அவள் நின்ற இடத்தை ஆராய்ந்தான். கீழே விரிக்கப்பட்டிருந்த படுக்கை விரிப்பைக் கண்டதும் முகம் சுருக்கினான்.

"ஏய்! இங்கேயா படுத்திருந்த?"

"ம்... ஆமா"

"ஏன்? அப்பா உனக்கு ரூம் தரலையா? மாடியில என் ரூம் பக்கத்தில ரூம் இருக்கே?"

''அது... பெரியத்தான் மாமா வந்திருக்காங்களாம்..."

"ஓ! அடுத்தவாரம் எங்கேஜ்மெண்டுக்காக இன்னிக்கே வந்திட்டாரா? சரி! அதோ அந்த மூணாவது ரூம்தான் என் ரூம். நீ அங்கே போய் படுத்துக்க. நான் சோபாவில படுத்துக்கிறேன்."

"ஐயோ! வேணாம் சின்னத்தான்."

"ஏன்?"

"நீங்க இவ்வளவு நேரம் கண்விழிச்சி வேலை பார்த்திட்டு வந்திருக்கீங்க. கூட கொஞ்ச நேரம் தூங்குவீங்க. மணி இப்பவே மூணு தாண்டிப் போச்சி. நான் எப்பவுமே அஞ்சு மணிக்கெல்லாம் எழுந்திடுவேன். அதனால இங்கேயே இருக்கேன். நீங்க போய்ப் படுத்துக்கங்க'' என்றவளை வியப்பாய் பார்த்தான்.

''அஞ்சுமணிக்கே எழுந்து என்ன பண்ணுவ?"

"நம்ம ஊர்ல அந்நேரத்துக்கே எழுந்து வாசத்தெளிச்சி கோலம் போடுவேன்."

''இங்கெல்லாம் உனக்கு அந்த வேலை கிடையாது. வாசலைப் பார்த்தியா? சிமெண்ட் தரைதான். அதைத் தோட்டக்காரனே காலையில செடிக்கு தண்ணீர் விடும் போது அலசி விட்டுடுவான்."

''அப்போ? சாணம் தெளிக்க வேண்டாமா?"

"இங்கே மாடும் கிடையாது. சாணியும் கிடையாது. ஸோ! நல்லாப் போர்த்திகிட்டு தூங்கு. விடிஞ்சி எழுந்தால் போதும்."

"ச...ரி"

''போ! இந்தா என் ரூம் சாவி'' என சாவியை நீட்டினான். மறுப்பாய் தலையசைத்தாள்.

"வேணாம் சின்னத்தான்."

"ஏன்?"

''இல்ல... எனக்கு தனி ரூம்ல படுக்கணும்னா ரொம்ப பயம். இந்த இடத்திலயே படுக்க பயமாத்தான் இருக்கு. பக்கத்தில மாமா ரூம் இருக்கிறதால கொஞ்சம் பரவாயில்லை. அதான்... மாடி ரூம் வேணாம்."

"ஓ.கே. இன்னிக்கு ஒரு நாள் அட்ஜஸ்ட் பண்ணிக்க கயல். நாளையில இருந்து உமா ரூம்ல படுத்துக்க."

"சரி."

''ஓ.கே. எனக்கு ரொம்ப டயர்டா இருக்கு. நான்..."

"போய் படுங்கத்தான்."

"ம். தேங்க்யூ. காலையில பார்ப்போம்" என மெலிதாய் புன்னகைத்து விட்டு மாடிப்படிகளில் தாவி ஏறியவனை கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டே

பொழுது ''இந்த பயணம் மிகவும் பிரமிப்பாக இருந்தது. இந்த பிரமிப்பை விவரிப்பது என்பது மிகவும் கடினம். விமான இறக்கை மீது அமர்ந்து நாங்கள் பயணம் செய்தது ஒரு பறவை பறப்பது போல இருந்தது. உயரே செல்லும் போது பயமாகவும் இருந்தது. அதே சமயம் மகிழ்ச்சியாகவும் இருந்தது. கடும் குளிராகவும் இருந்தது. நாங்கள் இருவரும் நடுங்கிப் போனோம். இருந்தாலும் இந்த பயணத்தால் பெருமை அடைகிறோம்'' என்கிறார்.

எல்லியின் தாய் தசைத்தேய்வுத் தொடர்பான சிறுவர்களுக்காக அறக்கட்டளை ஒன்றை நிறுவியுள்ளார். அவர் கூறும் பொழுது ''எங்கள் அறக்கட்டளை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்திய இந்த சிறுமிகளால் நாங்கள் பெருமைப்படுகிறோம். மணிக்கு 100 கிலோமீட்டர் வரை வேகமாக விமானத்தை செலுத்தியது இவர்களுடைய தாத்தாக்களே'' என்றார்.

இவர்களில் நார்மன் என்பவர் கூறுகையில் ''விமான இறக்கையின் மீது பயணம் செய்த சிறுமிகள் எங்கள் பேரப்பிள்ளைகள் என்பதால் நாங்கள் மிகவும் எச்சரிக்கையாக செயல்பட வேண்டியது இருந்தது. ஏற்கனவே பலமுறை இவ்வாறு பயணம் செய்ய அவர்கள் விரும்பிய போது நான்தான் தவிர்த்தேன். இப்போது அவர்களது உன்னதமான நோக்கத்திற்காக இதை ஒப்புக் கொண்டேன். பேத்திகள் இருவரும் இந்த புதிய சாதனையை நிகழ்த்தியது பெருமையாகவே இருக்கிறது'' என்கிறார்.

நின்றாள் கயல்விழி.

அவன் அறைக்குள் நுழைந்ததும் இனம்புரியாத உணர்வுடன் தரையில் அமர்ந்தாள். எந்தவித பந்தாவும் இல்லாமல் அவன் வெகு இயல்பாய் பேசியவிதம் புதுவித இன்பத்தைத் தர, அவனுடன் பேசிய நினைவில் லயித்துப் போனாள். தூக்கம் தூரமாய்ப் போனது.

## 3

**வி**டிந்தது முதலே கயல்விழிக்கு நிற்க நேரமின்றி வேலை தொடர்ச்சியாய் இருந்தது. ஒருவர் ஒருவராய் எழுந்து வர எந்தவித அறிமுகத்தையும் எதிர்பாராமல் சின்ன தலையசைப்போடு அவளை ஏற்றுக் கொண்டனர். அதோடு அவரவர் வேலையைப் பார்த்துக் கொண்டு நகர்ந்துவிட, கயல்விழிக்கு அடுப்படியே சொந்தமாகிப் போனது.

சுதாகரனும் அவன் மனைவி சுமித்ராவும் ஒன்றாய் பணிபுரிவதால் இருவரும் ஒரே நேரத்தில் புறப்பட்டு வெளியேறினர். அவர்களது எட்டு வயது குழந்தையை குளிக்க வைத்து, சாப்பாடு ஊட்டி, பள்ளி வேனில் ஏற்றும் பொறுப்பை கயல்விழியிடம் கொடுத்தாள் இந்திரா.

அந்தப் பணியை செய்து முடித்ததும் கல்லூரிக்குச் செல்லும் பரபரப்போடு வந்த உமாவிற்கு காலை உணவு, மதிய உணவு என கொடுத்தனுப்பி, மாமாவின் பொறுப்பை அத்தை ஏற்றுக் கொள்ள கயல்விழி காலை நேர காபி குடிக்கும் போது மணி ஒன்பது.

அதை குடித்து முடிப்பதற்குள் மாமாவை அனுப்பி வைத்துவிட்டு உள்ளே வந்தாள் அத்தை. ஆயாசமாய் சோபாவில் அமர்ந்தவளை நெருங்கினாள் கயல்விழி.

"அத்தே! சாப்பிடுறீங்களா?"

''வேண்டாம்மா. இன்னிக்கு வெள்ளிக்கிழமை. குளிச்சிட்டு கோவிலுக்கு போயிட்டு வந்துதான் சாப்பிடுவேன்."

"நீங்க பசியோட இருக்கக்கூடாதுன்னு மாமா சொன்னாங்களே."

"ருக்கு ஓட்ஸ் கஞ்சி காய்ச்சிருப்பாள். அதைக் குடிச்சிட்டுத்தான் போவேன்."

''அப்போ குளிக்க வெந்நீர் வெக்கட்டுமா?"

"அப்பவே ஹீட்டர் போட்டுட்டேன். குழாயத் திருகினா சுடுதண்ணி வந்திடும். நீ ஒண்ணு பண்றியா?"

"சொல்லுங்கத்தே."

"சின்னவனுக்கு நேத்து நைட் டியூட்டி. லேட்டாத்தான் வந்திருப்பான். பத்து மணிக்குத்தான் எழுந்திருப்பான். அவன் எழுந்தால் காபி, டிபன் கொடுத்துடுறியா?"

''சரிங்கத்தே'' உற்சாகமாய் தலையாட்டினாள்.

"ருக்கு."

"இதோ வந்திட்டேம்மா" பாத்திரங்களை கழுவிக் கொண்டிருந்த ருக்மணி கையைத் துடைத்துக் கொண்டே வந்தாள்.

''ருக்கு! மார்க்கெட்டுக்குப் போயி காய்கறி வாங்கி வந்திடு."

"சரிங்கம்மா."

"ரெண்டு கட்டு பொன்னாங்கண்ணிக் கீரையும் புடலங்காய் இருந்தாலும் வாங்கிட்டு வந்திடு. கயல்..."

"அத்தே!"

"நீ உன் அம்மா மாதிரியே சமைப்பியா? கீரை கடையத் தெரியுமா?"

"கடைவேன் அத்தே."

''உன் அம்மா என்னவெல்லாமோ போட்டு கூட்டுமாதிரி செய்வாளே."

"ஆமா அத்தே! சிறுபருப்பு, தக்காளி, வெங்காயம், பச்சைமிளகாய் போட்டு கீரையையும் வேக வெச்சு மையக் கடைஞ்சி தாளிச்சிட்டாப் போதும். அவ்வளவு ருசியா இருக்கும் கீரை."

''ம்... அதே மாதிரியே பண்ணிடு. ருக்கு! நீ கயல்கூட ஒத்தாசை பண்ணு. நான் குளிச்சிட்டு வர்றேன். கோவிலுக்கு போகணும்."

''சரிங்கம்மா'' பணிப்பெண்ணிற்கு பணத்தைக் கொடுத்துவிட்டு, இந்திரா குளியலறைக்குள் செல்ல, களைப்பாய் அமர்ந்தாள் கயல்விழி.

'அம்மாடியோவ்! எவ்வளவு வேலை? காலை நேரத்திற்கு மட்டுமே இத்தனை வேலை என்றால் இன்னும் மதிய உணவு, மாலை பலகாரம், இரவு உணவு என தொடர்ச்சியாய் எவ்வளவு வேலைகள்?

பாவம்தான் அத்தை! இத்தனை வேலைகளையும் ஒத்தை ஆளாய் நின்று கவனிப்பது பெரிய கஷ்டம்தான். இதிலும் அத்தை உடம்புக்கு முடியாதவர். பெரியத்தான் மனைவியும் உமாவும் அவரவர் வேலைகளையாவது பார்த்துக் கொள்ளலாம்.

சுமித்ரா தன் குழந்தையையாவது ரெடி செய்து பள்ளிக்கு அனுப்பிவிட்டு

செல்லலாம். இப்படி எல்லா சுமைகளையும் அத்தையிடம் விட்டு விட்டுச் செல்வது சரியா? அப்படியென்ன பெரிய வேலை? இந்த வசதி போதாதா?

சரி. இது அவர்கள் குடும்பம். அவர்கள் விருப்பம். நமக்கென்ன வந்தது? நம் வேலை கொஞ்சநாள் அத்தைக்கு ஒத்தாசையாய் இருப்பது. அந்த வேலையை ஒழுங்காய் செய்துவிட்டு போக வேண்டியதுதான்.'

"ருக்கு! ருக்கு!" கனமாய் ஒலித்த குரலில் திடுக்கிட்டு எழுந்தாள். இரவு அங்கியுடன் நரைத்த மீசையோடு மாடியில் நின்று குரல் கொடுத்துக் கொண்டிருந்தார் சுமித்ராவின் அப்பா நாகராஜன்.

"ருக்கு! எங்கே போய்த் தொலைஞ்ச?"

"அது... ருக்மணிம்மா... மார்க்கெட்டுக்கு போயிருக்காங்க."

"நீ யாரும்மா?"

"நான்... கயல்விழி... ஊர்ல இருந்து..."

"ஓ! புது வேலைக்காரியா? எனக்கு காபி வேணும்."

'நான் வேலைக்காரியில்ல' என மறுப்பாய் தலையசைப்பதற்குள் அடுத்த உத்தரவு வந்தது.

"காபி சூடா இருக்கணும். சர்க்கரை கொஞ்சமா."

"ச...ரி"

"அப்படியே நியூஸ் பேப்பரையும் எடுத்திட்டு வாம்மா. நான் மொட்டைமாடியில வெயிட் பண்றேன்" அவர் உத்தரவுகளை பிறப்பித்து விட்டு விலக, குளித்துவிட்டு வெளியே வந்தாள் இந்திரா.

"கயல்! இப்ப சம்பந்தியா பேசினாரு."

"ஆமா அத்தே"

"அவருக்குக் கொஞ்சம் காபி கொடுத்திடு. டிபன் சாப்பிடுறதுக்குள்ள நான் கோவிலுக்கு போயிட்டு வந்திடுறேன்."

"ம்" என தலையாட்டினாள். 'இது வேறயா?' மனதிற்குள் முனகியவாறே காபி கலந்து, ஹாலில் கிடந்த செய்தித்தாளையும் எடுத்துக் கொண்டு மாடியேறிய போது அறைக் கதவை திறந்து கொண்டு சோம்பல் முறித்தவாறே வெளியே வந்தான் ஹரிஹரன்.

கையில் ஆவிபறக்கும் காபி கோப்பையும் மறுகையில் செய்தித்தாளோடும் எதிரே வந்தவளைக் கண்டதும் புன்னகைத்தான்.

"வாவ்! கயல்! யூ ஆர் கிரேட்."

"என்னத்தான் சொல்றீங்க?"

"காலையில எழுந்ததும் காபி குடிச்சிட்டே நியூஸ் பேப்பர் வாசிப்பேன்னு உனக்கு யார் சொன்னது?"

"அது... இந்தக் காபி..."

"எனக்குத்தானே? தேங்க்யூ..." என வாங்கிக் கொண்டவனிடம் என்ன சொல்வதென்றே புரியாமல் திகைக்க, மொட்டைமாடிக்குச் செல்லும் படிக்கட்டிலிருந்து இறங்கி வந்தார் நாகராஜன்.

"ஏம்மா! உங்கிட்ட காபி கேட்டு எவ்வளவு நேரமாச்சு. இங்க நின்னு என்ன பண்ணிட்டு இருக்க?"

"அது.. நான்..." கயல்விழி திணற, வாயருகே கொண்டு போன காபியை குடிக்காமலே நிமிர்ந்தான் ஹரிஹரன்.

"மாமா! இவகிட்டயா காபி கேட்டீங்க?"

"ஆமா, ஹரி! உங்க வீட்டுக்கு வர்ற வேலைக்காரிங்க எல்லாருமே சொல்லி வெச்சமாதிரி ஒரே சோம்பேறியாத்தான் வந்து சேருறாங்க." நாகராஜன் அலட்சியமாய்ச் சொல்ல கயல்விழியின் முகம் கன்றிப் போனது.

லேசான கோபத்தோடு அவரை ஏறிட்டான் ஹரிஹரன்.

"மாமா! எது பேசுறதா இருந்தாலும் யோசிச்சிப் பேசுங்க."

"அட என்னப்பா! வேலைக்காரியச் சொன்னால் உனக்கேன் இவ்வளவு கோபம் வருது?"

"இவ ஒண்ணும் வேலைக்காரியில்ல. எங்க அத்தைப் பொண்ணு" அவனது கோபமும் உரிமையையும் கண்டு கண்கள் கசிந்தன. நன்றியோடு அவனை ஏறிட்டாள்.

"இதோ பார் கயல். நீ ஒண்ணும் இந்த வீட்ல உள்ள எல்லாருக்கும் சேவகம் பண்றதுக்காக இங்க வரல. என் கல்யாணத்துக்குத்தான் வந்திருக்க. அதை முதல்ல நினைவு வெச்சுக்க..."

"சரி... அத்தான்."

"அம்மா எங்கே?"

"கோ...விலுக்கு போயிருக்காங்க."

"ருக்மணிம்மா?"

"கீரை வாங்கப் போயிருக்காங்க."

"அவங்க வந்ததும் மாமாவுக்கு காபி கொடுக்கச் சொல்லு. போ. நீ போய் உன் வேலையைப் பாரு." அவன் குரலை உயர்த்தியே சொல்ல, மறுபேச்சின்றி மளமளவென கீழே இறங்கினாள் கயல்விழி.

நாகராஜன் முகம் முழுக்க அவமானத்துடன் நிற்க, அவர் பக்கமாய்த்

திரும்பினான் ஹரிஹரன்.

"மாமா! இந்த வீட்ல நீங்க எப்படி ஒரு விருந்தாளியோ அதே மாதிரி அவளும் ஒரு விருந்தாளி. அதனால இனிமே அவகிட்ட வேலை ஏவுற வேலையெல்லாம் வேண்டாம்'' என்றவாறே பால்கனியை நோக்கிச் சென்று அங்கே இருந்த மூங்கில் நாற்காலியில் சாய்ந்து அமர்ந்தான்.

அதற்கு மேல் அங்கு நிற்க இயலாமல் தன் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்தினார் நாகராஜன். ஆத்திரத்தோடு தன் மொபைலை எடுத்து மகளைத் தொடர்பு கொண்டார்.

கீரையை சுத்தம் செய்து அலசிக் கொண்டிருந்த போது வெளியே கார் ஒன்று இரைச்சலோடு வந்து நிற்க, அத்தைதான் கோவிலுக்கு போய்விட்டு வந்து விட்டார்களோ என்று வெளியே எட்டிப் பார்த்தாள் கயல்விழி.

சீற்றமாய்க் கதவைத் திறந்து கொண்டு வந்தவள் சுமித்ரா. வந்த வேகத்தில் நேராய் கயல்விழியை நெருங்கினாள்.

"ஏய்! நீ என்ன மகாராணியா?'' எடுத்த எடுப்பில் அதிகாரமாய் அவள் கேட்ட தோரணையில் மிரண்டு போனாள் கயல்விழி. புடலங்காயை நறுக்கிக் கொண்டிருந்த ருக்மணி அதிர்ந்து போய் எழ, சுமித்ராவின் கோபம் அவளிடம் திரும்பியது.

"ருக்கு! காலையில எங்க அப்பாவுக்கு ஒரு காபிகூட கொடுக்காம எங்கே போய்த் தொலைஞ்ச?''

''இல்லீங்கம்மா! நான் ஒன்பது மணிக்காதான் மார்க்கெட்டுக்குப் போனேன். அதுவரை ஐயா எழுந்துக்கல.''

''அவர் எத்தனை மணிக்கு எழுந்திருக்கிறாரோ அதுவரை வெயிட் பண்ணி காபி கொடுத்திட்டு போறதுக்கென்ன?''

"இல்லம்மா! பெரியம்மாதான் கீரை... வாங்கிட்டு வர...''

''அவங்க சொன்னா நீ போயிடுவியா? உன்னால என் அப்பா கண்டவங்ககிட்டல்லாம் பேச்சு வாங்கணுமா?''

''அ..க்..கா! அது வந்து'' எனத் தொடங்கிய கயல்விழியிடம் ஒற்றை விரலை நீட்டி எச்சரித்தாள்.

"ஏய்! நான் உங்கிட்ட பேசல.''

"இல்லக்கா! நான்...''

''வாயை மூடுடி. யாருடி அக்கா? நீ என்ன என் கூடப் பொறந்தவளா? சொல்லு! கூடப் பொறந்தவளா?''

"இ..ல்..ல''

''பிறகென்ன உரிமை கொண்டாடுற? ஆமா! நீ இங்கே வேலை செய்யத்தானே வந்தே?''

''இல்ல... அத்தைக்கு உடம்புக்கு முடியலன்னு ஒத்தாசையா இருக்கணும்னு...''

"அதான் கேட்கிறேன். வேலைக்குத்தானே வந்தே? ஏன் என் அப்பாவுக்கு காபி கொடுத்தா குறைஞ்சி போயிடுவியா?''

''இல்லக்கா! நான்... கொண்டு போனேன்...''

''பொய் சொல்லாதடி. நீ போய் ஹரிகிட்ட போட்டுக் கொடுத்துதானே எங்க அப்பாவை உம்முன்னால அவமானப்படுத்த வெச்ச?''

"ஐயோ... இல்ல...''

"அப்பாவி மாதிரி மூஞ்சிய வெச்சிட்டு வந்த அன்னிக்கே குடும்பத்தில குழப்பம் உண்டாக்குறியா? என்னை யார்னு நினைச்ச? நூறு சவரன் நகையோட வந்தவ நான். என் அப்பா எவ்வளவு பெரிய கோடீஸ்வரர் தெரியுமா? கேவலம் ஒரு காபிக்காக அவரை அவமானப்படுத்தியிருக்க. உன்னை மாதிரி பிச்சைக்காரிகளை கூப்பிட்டு நடு வீட்ல உட்கார வெச்சா மரியாதைய எதிர்பார்க்க முடியுமா?''

''அண்ணீ...'' ஹரிஹரனின் குரலில் மூவரும் திரும்ப, அதே நேரம் வீட்டிற்குள் நுழைந்தாள் இந்திரா. அவள் வருவதை பார்த்த பிறகே மாடியை விட்டு கீழே இறங்கி வந்தார் நாகராஜன்.

இவர்களின் குடும்ப விஷயத்தில் நமக்கென்ன வேலை என்பதாய் ருக்மணி சமையலறைக்குள் நுழைந்துவிட, சுமித்ரா இன்னும் குறையாத கோபத்தோடு மாமியாரை நெருங்கினாள்.

''வாங்க அத்தே! உங்களைத்தான் தேடிட்டு இருந்தேன்.''

"என்னம்மா! இந்த நேரத்தில வீட்டுக்கு வந்திருக்க?''

"வர வெச்சிட்டா... நீங்க கொண்டு வந்த வேலைக்காரி''

"அண்ணீ! கொஞ்சம் மரியாதையாப் பேசுங்க.''

"நீங்க எங்க அப்பாவுக்கு மரியாதை கொடுத்தீங்களா?''

''ஏன்? நான் என்ன மரியாதை கொடுக்கல?''

''ம்... கொடுத்தீங்களே! ஏதோ ஒரு பொண்ணு முன்னால ஒரு கப் காபிக்காக என்னை அசிங்கப்படுத்துனீங்களே. அது பெரிய மரியாதைதான்'' எகத்தாளமாய் நாகராஜன் சொல்ல, குழம்பிப் போனாள் இந்திரா.

"என்ன ஆச்சு சம்பந்தி?"

"இன்னும் என்ன நடக்கணும்? ருக்கு வீட்ல இல்லன்னதும் இவகிட்ட அப்பா காபி கேட்டிருக்கார். அதுக்கு உங்க புள்ள சண்டைக்கே போயிட்டாராம்." சுமித்ரா ஆத்திரமாய்ச் சொல்ல ஹரி குறுக்கிட்டான்.

''அண்ணி! நடந்தது என்னன்னு தெரியாம பேசாதீங்க."

"எல்லாம் தெரிஞ்சிதான் பேசுறேன். அது என்ன நேத்து வந்தவ மேலே அவ்வளவு அக்கறை?"

''அண்ணி! நிதானமா பேசினா எல்லாருக்கும் நல்லது."

''ஏன் அத்தே! எங்க அப்பாவுக்கு காபி போட்டுக் கொடுத்தா இவ கிரீடம் இறங்கிடுமா? அதைப் போய் உங்க புள்ளகிட்ட சொல்லியிருக்கா. இவரும் என் அப்பாவை தரக்குறைவா பேசியிருக்கார்."

"ஹரி! என்னப்பா இதெல்லாம்?"

''அம்மா! இவங்க ரெண்டுபேரும் பேசுறதக் கேட்டு எந்த முடிவுக்கும் வராதீங்க. இங்க யாரும் யாரையும் தரக்குறைவா பேசல. இவர் பேச்சைக் கேட்டுக்கிட்டு அண்ணி சும்மா கத்துறாங்க."

''பார்த்தீங்களா அத்தே! எவ்வளவு அலட்சியமா பேசுறார் பார்த்தீங்களா?"

"அண்ணி! உங்க அப்பாவை நீங்க வீட்ல இருந்து உபசரிக்க வேண்டியதுதானே? வந்தவங்க போனவங்களுக்கெல்லாம் வேலை செய்யவா எங்க அத்தை கயலைப் பெத்தாங்க?"

"ஹரி" அதட்டினாள் இந்திரா.

''பின்னே என்னம்மா? கயலை ஒரு வேலைக்காரி மாதிரி அதிகாரம் பண்றார் மாமா. அது தப்பில்லையா?"

"முதல்ல நீ உள்ளே போ."

"அம்மா."

''உள்ளே போன்னு சொன்னேன்'' தாயின் குரல் உயரவும் சிடுசிடுப்பாய் வேகமாய் மாடியேறினான் ஹரிஹரன்.

''கயல்! என்ன இதெல்லாம்? நான் உன்னை சம்பந்திக்கு காபி கொடுன்னு சொல்லிட்டுத்தானே போனேன்?"

"ஆமா அத்தே. நான் காபி கொண்டு போனேன். ஆனா..."

''ஏய்! பொய் சொல்லாதே. எங்க அப்பாவுக்கு இதுவரைக்கும் யாரும் காபி தரல. அவர் எவ்வளவு மனவேதனையில எனக்கு போன் பண்ணினார் தெரியுமா?"

''சுமித்ரா! நீ அப்பாவை டைனிங் டேபிளுக்கு அழைச்சிட்டு போ. நான் டிபன் எடுத்திட்டு வர்றேன்."

''வேண்டாம் சம்பந்தியம்மா. நான் ஊருக்குக் கிளம்பறேன்."

"ஐயோ! என்ன சம்பந்தி நீங்க?"

''இல்லம்மா! நான் ஒண்ணும் சாப்பாட்டுக்கு வழியில்லாம இங்க வரல. நல்ல காரியம் நடக்கும்போது நாமளும் நின்னா உங்களுக்கெல்லாம் உதவியா இருக்கும்னு நினைச்சேன். ஆனா மரியாதை இல்லாத இடத்தில..."

''மன்னிச்சிடுங்க சம்பந்தி! இனிமே இப்படியெல்லாம் நடக்காது. சுமித்ரா! அப்பாவை அழைச்சிட்டு போம்மா."

"வாங்கப்பா" என்றவாறு நாகராஜனோடு இணைந்து நடக்க இந்திராவின் பார்வை கயல்விழியிடம் திரும்பியது.

"இதோ பாரு! நீ எனக்கு ஒத்தாசை பண்ண வந்திருக்க. பெரியவங்க விஷயத்தில தலையிட்டு குடும்பத்தில குழப்பம் பண்ணிடாதே"

"அத்தே!"

"அவர் எவ்வளவு பெரிய மனுஷன்? அவர் மனசு கஷ்டப்படுற மாதிரி நடந்திருக்கியே. இனிமே இப்படி எதுவும் நடக்கக்கூடாது. அதே மாதிரி இனிமே நான் சொல்லாம மாடிப்பக்கமா போகாதே. சின்னவன் கூட பேசுறதைக் கூட குறைச்சுக்க. புரியுதா?'' இந்திராவின் கேள்வியில் மனசுக்குள் சுக்கலாய் நொறுங்கினாலும் அதை வெளிக்காட்டாமலும் மவுனமாய் தலையசைத்தாள். கண்கள் தளும்பியது.

'ரஞ்சிதம் சொன்னது சரிதானோ? நாம் இங்கு வந்திருக்கக் கூடாதோ?' மனம் நெருஞ்சி முள்ளாய் குத்தத் துவங்கியது.

## 4

முழுதாய் மூன்று நாட்கள் அந்த வீட்டில் உள்ள எவர் கண்ணிலும் படாமல் கிச்சனில் பதுங்கிக் கொண்டாள் கயல்விழி. அனைத்து வேலைகளையும் செய்து களைத்து இரவில் அனைவரும் உறங்கியபிறகே படுக்கச் செல்வது வழக்கமாயிற்று.

முதல் நாளைய சம்பவத்திற்கு பிறகு அத்தையிடமும் வெகு ஜாக்கிரதையாய் நடந்து கொண்டதில் சகஜமாகிப் போனாள் இந்திரா. அதுவும் சுமித்ராவின் கண்களில் படவே இல்லை.

நான்காவது நாள் காலை உணவை முடித்துவிட்டு கிச்சனை சுத்தம் செய்து கொண்டிருந்த போது ஹாலில் இருந்து இந்திரா அழைப்பது கேட்டது.

"கயல்விழி"

"அத்தே?"

"இங்கே வாம்மா."

''என்னங்க அத்தே'' என்றவாறு அவள் வருகையில் அனைவரும் எங்கோ புறப்பட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது. பளிச்சென்ற ஆடையும் பகட்டான நகையுமாய் மின்னியவர்களை கவனியாமல் இந்திராவை நோக்கினாள்.

"கூப்பிட்டீங்களா அத்தே?"

"ஆமா... நாங்கள்லாம் நிச்சயதார்த்த புடவை எடுக்கக் கிளம்புறோம். உன் வேலை முடிஞ்சுதா?"

கயல்விழிக்கு உற்சாகம் ஊற்றெடுத்தது. அத்தை தன்னையும் வெளியே அழைத்துச் செல்லப் போகிறாள் என்ற ஆவலில் பலமாய் தலையசைத்தாள்.

''முடிஞ்சுது அத்தே. இனி மதிய சாப்பாடுதான் செய்யணும்."

"எங்களுக்காக எதுவும் செய்ய வேண்டாம். நாங்க வெளியில சாப்பிட்டுப்போம். ருக்கு இன்னிக்கு லீவு. அதனால உனக்கு மட்டும் ஏதாவது சமைச்சுக்க" என்றதும் சட்டென மனம் சுருங்கியது.

"ச..சரி... அத்தே."

"நாங்க போனதும் வீட்டைப் பூட்டிக்க. போன் எதுவும் வந்தா அட்டெண்ட் பண்ணு. வெளியாட்கள் யாராவது வந்தா உள்ளே நின்னே பதில் சொல்லி அனுப்பிடு. புரியுதா?"

"ம்."

''ஏன் இந்திரா. கயல்விழி மட்டும் தனியா வீட்ல இருக்கணுமா? பேசாம நாம கூட்டிட்டு போலாமே?" என்ற காளிதாசை முறைத்தாள்.

"ஷாப்பிங் பண்ணிட்டு வர எப்படியும் நைட் ஆயிடும். இவ நம்மகூட வந்தான்னா யார் டிபன் பண்றது?"

''நைட்டுக்கும் வெளியே சாப்பிட்டு வந்திடலாம்மா" என்ற உமாவை நன்றியோடு பார்த்தாள் கயல்விழி.

"அதெல்லாம் சரிப்படாது உமா. நாம ஆறு ஏழு மணிக்கெல்லாம் வந்திடலாமே. பிறகேன் ஓட்டலுக்கு தண்டம் அழணும். அதோட என் அப்பாவுக்கு ஓட்டல் சாப்பாடு ஒத்துக்காது" என்றாள் சுமித்ரா.

''அதுக்கில்லம்மா! புது இடம். சின்னப்பொண்ணைத் தனியா விட்டுட்டு போறோமேன்னு..."

"நாம என்ன ரோட்லயா விட்டுட்டு போறோம். வீட்டுக்குள்ளதானே இருப்பாள்? அதோட நாளையில இருந்து கெஸ்ட் வர ஆரம்பிச்சிடுவாங்க. வீட்டை சுத்தப்படுத்தி நீட்டா வைக்கட்டும். அதுக்குள்ள நாம வந்திடலாம்."

"இல்ல சுமித்ரா. நான்..."

"சம்பந்தி! நாம இங்கே நின்னு பேசிட்டு இருந்தா அங்கே பொண்ணு வீட்டுக்காரங்க வந்து வெயிட் பண்ணுவாங்களே. சட்டுபுட்டுன்னு கிளம்புங்க" நாகராஜன் அவசரப்படுத்த, காளிதாஸ் தயக்கமாய் மனைவியை ஏறிட்டார்.

அவள் புறப்படத் தயாராக, கயல்விழி புன்னகைத்தாள்.

"பரவாயில்லை மாமா! எனக்கொண்ணும் பயமில்ல. பகல் நேரம்தானே... நீங்க போயிட்டு வாங்க. எனக்கும் வீட்ல வேலையிருக்கு."

"இருந்திக்குவியாம்மா?"

"நான் இருந்துக்குவேன் மாமா. நீங்க புறப்படுங்க."

''சரிம்மா. பத்திரமா இரு. எதுவும் அவசரம்னா டெலிபோன் பக்கத்தில எங்க நம்பரையெல்லாம் குறிச்சி வெச்சிருக்கோம். போன் பண்ணு. சரியா?"

"சரி மாமா."

"சரி சரி! எல்லாரும் கார்ல போய் ஏறுங்க. கயல்! நீ நாங்க போனதும் உள்ளே பூட்டிக்க."

"சரி அத்தே" என்றவாறு மனம் கனக்க அவர்கள் வெளியேறும் வரை நின்று கதவைப் பூட்டிவிட்டு வந்து கிச்சன் தரையில் அமர்ந்தாள். கண்ணீர் பொங்கியது.

'அத்தையும் மற்றவர்களும் தன்னை ஒரு வேலைக்காரியாய்த்தான் நினைக்கிறார்களோ? சிறுபெண்ணை தனியே விட்டுச் செல்கிறோமே என்று யாரும் தயங்கவில்லையே. மாமா பாவம். தன்னை அழைத்து வந்ததற்காக ரொம்பவே வருத்தப்படுகிறார்.

எனக்கும்தான் ஏன் இந்த ஆசையெல்லாம் வருகிறது? வீட்டு வேலை செய்யத்தானே

வரவழைத்தார்கள்? அவர்களுடன் சென்று ஊரைச் சுற்றிப் பார்க்க ஆசைப்படலாமா? தேவையற்ற ஆசைகளை மனதில் ஏன் வளர்த்துக் கொண்டு இப்படி கண்ணீர் விட வேண்டும்?'

கண்ணீரை அழுத்தமாகத் துடைத்து விட்டு எழுந்தாள்.

'நம் வேலையை நாம் செய்யலாம். அவர்கள் வருவதற்குள் வீட்டையும் சுத்தப்படுத்த வேண்டுமே' என விட்ட வேலையைத் துவங்கியபோது ஹாலில் இருந்த தொலைபேசி அழைத்தது.

அவசரமாய் கைகளைத் துடைத்துவிட்டு ஓடிச் சென்று ரிஸீவரைக் கையிலெடுத்தாள். தயக்கமாய் குரல் கொடுத்தாள்.

"ஹ...லோ."

"ஹலோ! யார் பேசறது?"

"நீங்க யாருங்க?"

"ஹேய் கயல்! நான் ஹரி பேசுறேன்" ஹரிஹரனின் குரல் காதில் தேனாய் பாய, உடல் சிலிர்த்தது. சற்று முன் வரை கலங்கிய மனக்குளம் ஆனந்தமாய் ஆர்ப்பரித்தது.

"சி...சின்னத்தான்."

"என்ன கயல் நீ போனை எடுக்கிற? அம்மா இல்ல?"

"அத்தை... எல்லாரும் இப்பத்தான் ஜவுளி எடுக்கப் போனாங்க."

"என்ன? போயிட்டாங்களா? அப்ப நீ போகலையா?"

"நானா? நான்... எதுக்கு சின்னத்தான்?"

"என்ன இப்படிக் கேட்டுட்ட? பொண்ணுக்கு மட்டும் புடவை எடுக்கல கயல். எல்லாருக்குமே ட்ரெஸ் எடுக்கச் சொன்னேனே. நீயும் போனாத்தானே உனக்கு பிடிச்சமாதிரி செலக்ட் பண்ணுவ?"

"அதெல்லாம்... அத்தை சொல்லலியே..."

"சரி, எப்பப் போனாங்க?"

"ஒரு பத்து நிமிஷம் இருக்கும்."

"சரி! நீ சாப்பிட்டியா? இல்லையா?"

"சாப்பிட்டேன்."

"குட். நீ ட்ரெஸ் சேஞ்ச் பண்ணிட்டு ரெடியா இரு. நான் இன்னும் பத்து நிமிஷத்தில வர்றேன். நாம சேர்ந்தே போகலாம்."

கயல்விழியின் இதயம் பலமடங்கு துடித்தது. "எங்கே?"

"ஜவுளி எடுக்கத்தான்."

"அவங்க போயிட்டாங்களே."

"எந்தக் கடைக்கு போவாங்கன்னு எனக்குத் தெரியும். நானும் போகணும்தான். நீ ரெடியா இரு. நான் வர்றேன்."

"இ..இல்லத்தான். எனக்கு... இங்கே நிறைய வேலை இருக்கு."

"எல்லாரும்தான் வெளியே போயாச்சே. வேற என்ன வேலை?"

"இல்ல... வீட்டையெல்லாம் சுத்தப்படுத்தி வைக்கணும். ராத்திரிக்கு டிபன் பண்ணி வைக்கணும்னு சொல்லிட்டு போனாங்க."

"யாரு?"

"அத்தையும்... சுமித்ரா அக்காவும்..."

"லுக் கயல்! நீ ஒண்ணும் வேலை செய்யறதுக்காக வரல்ல. நீயும் நம்ம வீட்ல ஒருத்தி. புரியுதா?" அவனது உரிமையான அதட்டலில் மனம் கசிந்தது.

'இதற்காகத்தானே... இந்த வீட்டில் ஒருத்தியாய் வாழத்தானே ஆசைப்பட்டேன்? ஆனால்... இது நிறைவேறாத ஆசைஆயிற்றே!'

"கயல்! நான் பேசறது கேட்குதா இல்லையா?"

"சொல்லுங்க அத்தான்."

"போனை வெச்சிட்டு நீட்டா ட்ரெஸ் பண்ணிட்டு ரெடியா இரு. இப்ப வந்திடுவேன். ஓ.கே?"

"ச.. சரி அத்தான்."

"ஓ.கே. பை" என அவன் போனை வைத்துவிட்ட பிறகும் அப்படியே நின்றாள்.

'இவனுடன் எப்படிப் போவது? அத்தை என்ன சொல்லுவார்கள். அவர்களது பேச்சை மீறியதாய் ஆகிவிடுமே. தேவையில்லாமல் அவர்களது கோபத்தை சம்பாதித்துக் கொள்ள வேண்டுமா?' சற்று நேரம் தயங்கி நின்றாள்.

மனம் பலமாய் அரற்றியது. 'கயல்! இது மாதிரியான ஒரு அருமையான சந்தர்ப்பம் வாய்க்குமா? உயிராய் நேசிப்பவன் அழைக்கிறான். அவனுடன் வெளியே செல்வது சொர்க்கமல்லவா? அதை மறுக்க முடியுமா?

அந்த இன்பத்தை மனநிறைவை எவராலும் தனக்கு தர முடியாது. அத்தையோ சுமித்ராவோ யார் வேண்டுமானாலும் கோபித்துக் கொள்ளட்டுமே. அதனால் தனக்கு என்ன நஷ்டம் வந்துவிடப் போகிறது? இன்னும் சில நாட்கள்தானே இங்கு இருக்கப் போகிறோம்.

என் அத்தானுடன் நான் போகப் போகிறேன். போகத்தான் போகிறேன்.'



"ஐயோ! நான் அதைச் சொல்லல"

"வேறென்ன?"

"இதில எப்படி... நான்?"

"நீ ஓட்ட வேண்டாம். பின்னால உட்கார்ந்தால் போதும்."

"விளையாடாதீங்க அத்தான். நான் இந்தமாதிரி வண்டியில எல்லாம் உட்கார்ந்ததே இல்லை."

"இன்னிக்கு உட்காரேன். சூப்பரா இருக்கும்."

"எ..ன்ன?"

"ஆமா கயல்! கார்ல போறதை விட பைக்தான் பெஸ்ட். நல்ல காற்றோட்டமா சுற்றுப்புறத்தை... நடமாடும் மனிதர்களை... டிராபிக்கை ரசிச்சிகிட்டே போகலாம். காற்றை கிழிக்கிற மாதிரி போகும் போது சும்மா ஜம்முன்னு இருக்கும்.



சும்மா ஏறி உட்கார். அதுக்கப்புறம் உனக்கு பைக்ல போறது மட்டும்தான் பிடிக்கும். கமான்.''

''இல்லத்தான்... யாராவது ஏதாவது நினைச்சுக்கப் போறாங்க.''

''ஏய்! இது ஒண்ணும் உங்க ஊர் இல்ல. சிட்டி! இங்கே உன்னையோ என்னையோ எல்லாருக்கும் தெரியாது. அவங்கவங்க வேலையைப் பார்த்திட்டு போயிட்டே இருப்பாங்க. ம்... ஏறு''

தயக்கமாய் அவனை நெருங்கி உள்ளம் படபடக்க ஏறி அமர்ந்தாள். இதுவரை அவன் அருகே நின்று கூட பேசியதில்லை. நேருக்கு நேராய் பார்த்ததில்லை. இப்போது இந்த நெருக்கம், அவனது அண்மை ஒருவித கலக்கத்தையும் புதுவித இன்பத்தையும் தந்தது.

''பயமா இருந்தா என்னைப் பிடிச்சுக்க கயல்'' என்றவாறே வண்டியை உயிரூட்ட லேசாய் பதறி அவனது தோளைப் பற்றிக் கொண்டாள். வண்டி சீறிப் பாய, கயல்விழி உயரே உயரே பறந்தாள். காணும் இடமெல்லாம் இன்பமயமாய் இருந்தது.

இவன் தன்னுடையவன். தன் மனம் முழுக்க நிறைந்திருப்பவன் என்ற உரிமையில் தோளைப் பற்றியிருந்த கரங்களை எடுக்கவே இல்லை.

அவளது இன்பங்கள் இன்னும் சில நொடிப்பொழுதுகளில் மறையப் போவதை அவள் அப்போது உணரவில்லை.

பத்து அடுக்குகள் கொண்ட ஜவுளி ஷோரூமில் மொத்த குடும்பமும் குழுமியிருக்க, ஹரிஹரனுக்கென நிச்சயிக்கப்பட்டிருந்த பிரியவதனாவும், அவளது குடும்பத்தாரும் வரிசையாய் அமர்ந்து நிச்சயதார்த்த உடைகளை தேர்வு செய்து கொண்டிருந்தனர்.

பெரியவர்கள் ஒரு பக்கமாய் நின்று தங்களது ரசனைக்கேற்ற ஆடைகளைப் பிரித்துப் பார்த்துக் கொண்டிருக்க, பிரியவதனாவின் பார்வை மட்டும் நொடிக்கொருதரம் வாசலுக்கு சென்று மீண்டு கொண்டிருந்தது.

நவநாகரீகமான உடை. உடை முழுக்க வண்ணமயமான கற்கள், டாலடித்தது. வெண்ணெய் நிறம். கருகரு கூந்தல். அதை முதுகில் படர விட்டிருந்தாள். முகத்தில் எப்போதும் குடிகொண்டிருக்கும் சிறு அலட்சியம்.

தெளிவாய் சீர்செய்யப்பட்டிருந்த புருவம். மை தீட்டிய கண்கள். அதில் தற்சமயம் அதீத கோபம் தொனித்தது. தன் முன்னே விரிக்கப்பட்டிருந்த விலை உயர்ந்த பட்டுப்புடவைகளில் கவனம் செல்லவில்லை.

'இந்த ஹரி இன்னும் என்ன செய்து கொண்டிருக்கிறார்? நான் வருவேன் என்று தெரியாதா? எவ்வளவு நேரம் காத்திருப்பது?' கடுப்பாய் நகம் கடித்துக் கொண்டிருந்தவளை நெருங்கினாள் சுமித்ரா.

''என்ன பிரியா? புடவை செலக்ட் பண்ணியாச்சா?''

''ம்ப்ச்'' அலட்சியமாய் உதட்டைச் சுளித்தாள்.

''ஏய்! என்னாச்சு? ரொம்ப அப்செட்டா இருக்க?''

''அக்கா! உங்க மச்சினன் வீட்டில் என்ன வெட்டி முறிக்கிறார்? நான் இங்கே வர்றது தெரியுமில்ல?''

''ஓ! இதுதான் விஷயமா? ஸாரிம்மா! அவர் வீட்லயே இல்லை. இருந்தா எங்ககூட கூட்டிட்டு வந்திருக்க மாட்டோமா?''

''எங்கே போயிட்டார்?''

''அவர் பிரண்ட் யாரோ பாரின் போறாங்களாம். அவங்களை சென்ட்டாப் பண்றதுக்காக மார்னிங் சீக்கிரமே போயிட்டார்.''

''அப்போ இங்கே வரமாட்டாரா?''

''வருவார்! பதறாதே! அநேகமா இந்நேரம் வந்திட்டு இருப்பார்.''

''ம்ப்ச்! எனக்கு இங்கே போரடிக்குது.''

''ஏன்? நீயும் எங்கூட வந்து பர்ச்சேஸ் பண்ணேன்.''

''நோ நோ... எனக்கு இந்த மாதிரி கிரவுடுன்னாலே அலர்ஜி. அவர் வந்திடட்டும். நாங்க வேற செக்ஷன்ல போய் செலக்ட் பண்ணிக்கிறோம்.'' பிரியவதனா சற்றே கர்வமாய்ச் சொல்ல, சுமித்ராவின் முகம் கடுத்தது.

'பெரிய பந்தா பார்ட்டியா இருப்பா போலிருக்கு. ஹும்' என லேசாய் உதட்டை பிதுக்கிவிட்டு நகர முயன்றவளின் பார்வை வெளியே வந்து இறங்கியவர்களின் மீது நிலைத்தது.

பைக்கில் கம்பீரமாய் அமர்ந்திருந்த ஹரிஹரனையும் அவனது தோளை ஒட்டிக் கொண்டு இருந்த கயல்விழியையும் பார்த்து புருவம் உயர்த்தினாள். மனம் லேசாய் விசிலடிக்க, பிரியவதனாவிடம் திரும்பினாள்.

அவள் தன் செல்போனில் யாரையோ அழைக்க முயற்சித்துக் கொண்டிருக்க, குரூர புன்னகையோடு அவளை அழைத்தாள்.

''அட! பிரியா! உன்னோட அவர் வந்திட்டார் பாரு"

"எங்கே? எங்கே?" ஆவலாய் பார்வையை வெளியே வீசிய பிரியவதனாவின் அழகு முகம் சட்டெனச் சுருங்கியது. பைக்கை விட்டு கீழே இறங்கியவனிடம் கயல்விழி எதுவோ சொல்ல, அவளிடம் குனிந்து ஏதோ சமாதானம் செய்து கொண்டிருந்தான் ஹரிஹரன்.

பிரியவதனாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க, அவளை உன்னிப்பாய் கவனித்துக் கொண்டிருந்த சுமித்ராவின் முகம் மர்மமாய் புன்னகைத்தது.

## 5

''யார் அவ?'' பிரியவதனாவின் கேள்வியே அவளுக்குக் கயல்விழியை சுத்தமாய் பிடிக்கவில்லை என்பதை உணர்த்த, சுமித்ரா தனக்குள் புன்னகைத்துக் கொண்டாள். இயல்பாகவே சுமித்ராவிற்கு தன்னை விட யாரும் மேலே இருக்கக் கூடாது என்ற எண்ணம் உண்டு.

பிறந்த வீட்டிலும் சரி, புகுந்த வீட்டிலும் சரி. அவளது பேச்சை மட்டும்தான் அனைவரும் கேட்க வேண்டும். இதுவரை அப்படித்தான் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் சமீபகாலமாய் தன் மாமியார் இளைய மகனுக்கு பெண் பார்த்துவிட்டு வந்ததில் இருந்து தன் இளைய மருமகளின் அழகையும் படிப்பையும் குடும்பத்தையும் புகழ்வது சுத்தமாய் பிடிக்காமல் போனது.

அதுவும் அலட்சியமான பேச்சோடு அவள் நாசூக்காய் ஒதுங்கினால் இன்னும் கொதிப்பாள். முதன்முறையாய் தன் மச்சினன் தன்னை மற்றவர்கள் முன் எதிர்த்து பேசிவிட்டான் என நான்கு நாட்களாய் மருகிக் கொண்டிருந்தவள் இந்த சந்தர்ப்பத்தை சரியாய் பயன்படுத்திக் கொள்ள நினைத்தாள்.

கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தவர்களை வெறித்தாள்.

"அக்கா! உங்ககிட்டதான் கேட்கிறேன்" பிரியவதனா கடுத்த குரலில் கேட்க, சட்டென சுதாரித்துக் கொண்டு கேட்டாள்.

"என்ன கேட்டே பிரியா?"

''அவர்கூட ஒட்டி உரசிகிட்டு வர்றாளே... அவ யாருன்னு கேட்டேன்"

ஆத்திரமாய் பற்களைக் கடித்துக் கொண்டு கேட்டவளைப் பார்த்து நமுட்டுச் சிரிப்பாய் சொன்னாள்.

"இவளா? இதுதான் ஹரியோட முறைப் பொண்ணு."

"வ்வாட்?"

''அதாவது ஹரியோட அத்தைப் பொண்ணு. ஊர்ல இருந்து வந்திருக்கா. பேரு கயல்விழியாம்."

''அத்தைப் பொண்ணுன்னா இப்படித்தான் ஒட்டிகிட்டு வரணுமா? நான்சென்ஸ்..."

''அட! இதுக்கே கோவிச்சிகிட்டா எப்படி? வீட்ல நடக்கிற கூத்தெல்லாம் கேட்டா மிரண்டுடுவ போலிருக்கே'' நாசூக்காய் சுமித்ரா கொளுத்திப் போட, பிரியவதனாவின் முகம் மேலும் சிவந்தது.

"ஓஹோ! வீட்ல வேற கூத்து நடக்குதா?"

"பின்னே? இவ என்னன்னா சின்னத்தான் சின்னத்தான்னு வழிய, அவர் என்னன்னா கயல் கயல்னு உருக, ஹய்யோ! பார்க்கவே சகிக்காது."

"உங்க மாமியார் இதையெல்லாம் ஏன்னு கேட்கிறதில்லையா."

"எங்க ஹரி யார் பேச்சையும் கேட்க மாட்டார். இப்பக்கூடப் பாரேன்! நாங்க வரும்போதே அத்தை தெளிவா சொல்லிட்டுத்தான் வந்தாங்க. ஜவுளி எடுக்க ஹரியோட மாமனார் குடும்பமும் கட்டிக்கப் போறவளும் வருவாங்க. அதனால கயலைக் கூட்டிட்டு போக வேண்டாம்னு. ஆனா எங்கே கேட்டார்? பாரேன்! எவ்வளவு தைரியமா ஜோடி போட்டுட்டு வர்றாங்கன்னு. நீ ஒருத்தி இங்கே வெயிட் பண்றதையே மறந்திருப்பாரு."

சுதாகரன் எதிர் செக்ஷனில் இருந்து குரல் கொடுத்தான்.

"சுமி! இங்கே ட்ரெஸ் செலக்ட் பண்ணச் சொன்னால் அங்கே என்ன பண்ணிட்டு இருக்க? டயமாகுதே."

''இதோ வந்திட்டேன்'' என்றவள் பிரியவதனாவிடம் மெல்ல கிசுகிசுத்தாள்.

''இதோ பாரும்மா! இதுவரைக்கும் நீ யாரோ எவரோ. ஆனா இன்னும் பத்து பதினைஞ்சு நாள்ல எங்க வீட்டு மருமகளாகப் போற. என் தங்கை. உம்மேல உள்ள அக்கறையில ஒண்ணு சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டியே."

"சொல்லுங்கக்கா."

"ஹரி நல்லவர்தான். அவதான் சரியில்ல.

ஊர்ப்பக்கம் தெரியாதா? மாமன் மகன், அத்தைமகன்னு சின்னவயசில இருந்தே உரிமையாப் பழகுறதும் அவங்களே கல்யாணம் பண்ணிக்கிறதும் சகஜம். அதேமாதிரி இந்தப் பெண்ணோட வீட்லயும் எல்லாருக்கும் ஹரிய மாப்பிள்ளையாக்கணும்னு ஆசையாம். ஆனா அத்தைதான் நீதான் தன்னோட இளைய மருமகன்னு உறுதியாச் சொல்லிட்டாங்க. அதனாலதான் இவளையே நேர்ல அனுப்பி ஹரியை கைக்குள்ள போட்டுக்க முடிவு பண்ணியிருக்காங்க. நீ படிச்சவ, நாலும் தெரிஞ்சவ. உஷாரா இருந்துக்க."

"இப்ப... நான் என்ன செய்யணும்?" பிரியவதனாவின் முகம் கடினமாய் மாறியிருந்தது.

சுமித்ரா திருப்தியாய் புன்னகைத்தாள்.

"முதல்ல உன் ஹரிகிட்ட சொல்லி அவளை ஊருக்கு அனுப்பச் சொல்லு. அவ போயிட்டாளே எல்லாப் பிரச்சினையும் தீர்ந்திடும்."

"சரிக்கா."

"ஆனா சொல்றதை இன்னிக்கே சொல்லிடு. இல்லேன்னா நிச்சயதார்த்தம் அன்னிக்கும் இப்படித்தான் உரசிகிட்டு அலைவாள். உன்பாடுதான் திண்டாட்டமாப் போயிடும். எச்சரிக்கையா இருந்துக்க."

"சரி."

"சரி! அவங்க இங்கதான் வர்றாங்க. நான் கிளம்புறேன்" என்றவாறே சுமித்ரா நல்லபிள்ளையாய் ஒதுங்கிவிட, எரிமலையாய் குமுறிக் கொண்டிருந்த பிரியவதனாவை இருவரும் நெருங்கினர். ஹரிஹரன் புன்னகையோடு கேட்டான்.

"ஹாய் பிரியா! வந்து ரொம்ப நேரமாச்சா?"

"ம்."

"ஸாரிம்மா! பிரண்ட்ட வழியனுப்பிட்டு வர லேட்டாயிடுச்சு."

"ஓஹோ"

"பிரியா! இது கயல்விழி. என் அத்தைப் பொண்ணு! கயல்! இது பிரியவதனா. என் எதிர்கால மனைவி." அவன் இயல்பாய் அறிமுகம் செய்ய, இருவரும் ஒருவரையொருவர் நேராய் பார்த்துக் கொண்டனர்.

கயல்விழியின் கண்களில் பிரமிப்பு! 'அடேயப்பா! எவ்வளவு கலர். என்ன ஸ்டைல். ரொம்ப அழகு. இந்தப் பெண்ணை விட்டுட்டு அத்தான் தன்னை மணப்பாரா?' லேசான ஏமாற்றத்தோடு வரிசையாய் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பெரிய நிலைக்கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்தாள்.

'மிதமான நிறம். பெரிய நீண்ட விழிகள். கண்மை தீட்டப் படாமலே அழகாய் இருந்தது. கருகருவென சற்று வளைந்த புருவங்கள். கொழுகொழு கன்னங்கள். இன்னும் கொஞ்சம் உயரமாய் வளர்ந்திருக்கலாம். மற்றபடி தன் அழகு ஒன்றும் குறைந்ததில்லையே.'

தன்னையே மெச்சிக் கொண்டு பிரியவதனாவை நோக்கியவள் துணுக்குற்றாள். தன்னையே வெறித்துக் கொண்டிருந்தவளின் பார்வையில் ஏன் இத்தனை வெறுப்பு? கசப்பு?

லேசான பயம் தோன்ற அத்தானைத் தேடினாள். அங்கே அவன் இல்லை. பதற்றமாய்த் தேட, சற்று தொலைவில் தன் குடும்பத்தாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தான்.

அத்தை தன்னைச் சுட்டிக்காட்டி பேசும் தொனியே வாக்குவாதம் தன்னை இங்கு அழைத்து வந்ததற்காகத்தான் என்று தெளிவாகக் காட்டியது. ஹரிஹரனும் சளைக்காமல் பதில் சொல்ல, பிரச்சினை பெரிதாகி விடக் கூடாதே என அவர்களை நோக்கிச் செல்ல முயன்றவளை பிரியவதனாவின் குரல் தடுத்து நிறுத்தியது.

"ஒன் மினிட்."

"என்னங்க?"

"உனக்கென்ன பெரிய பேரழகின்னு நினைப்பா?" இறுகிய குரலில் கேட்டவளைக் கண்டு மிரண்டு போனாள் கயல்விழி.

"எ..ன்ன... சொல்றீங்க?"

"எதுக்குடி இங்கே வந்தே?"

"என்ன?"

"இந்த ஊருக்கு எதுக்கு வந்தேன்னு கேட்டேன்."

"அது... உங்க.. கல்யாணம் வரைக்கும்..."

"கல்யாணம் வரைக்கும் என் ஹரிகூட ஊர் சுத்தலாம்னு வந்தியாக்கும்?"

"ஐயோ! இல்ல... நான்..."

"ஹேய் லுக்! என்னோட ஸ்டேட்டசுக்கு உன்கூட பேசுறதையே அசிங்கமா நினைக்கிறேன். இதோ பார்... பர்ஸ்ட் அண்டு லாஸ்ட்டா சொல்றேன். மரியாதையா உன் ஊரைப் பார்த்து ஓடிப் போயிடு" ஒற்றை விரலை நீட்டி எச்சரித்தாள்.

"இல்லங்க! நான் அத்தைக்கு

ஒத்தாசையா...''

"பேசாதே! என்னால இதையெல்லாம் சகிச்சுக்க முடியாது. அவர் எனக்குன்னு முடிவானவரு. அவர் என்னைத்தான் பார்க்கணும். எங்கிட்டதான் பேசணும். அவர் மேல வேற யாரோட நிழல் படுறதைக் கூட நான் லைக் பண்ணமாட்டேன். புரியுதா?''

"ப்..பு..ரியுது''

"நான் சொல்றதை நல்லாக் கேட்டுக்கோ. நாளைக்கே... நோ... இன்னைக்கே நீ ஊரை விட்டுப் போற. நீ போனாத்தான் எங்க எங்கேஜ்மெண்ட் நடக்கும். ஓ.கே?''

"போயிடுறேன்! நான் போயிடுறேன்.''

''எங்க கல்யாணத்துக்கு கூட நீ வரக்கூடாது. என் லைப்ல இனி ஒருதரம் உன்னை நான் பார்க்கவே கூடாது.''

''இதோ பாருங்க! நீங்க நினைக்கிற மாதிரி...''

"ஷ்ஷுஷு! நான் பேசும்போது கூடப் பேசினா எனக்குப் பிடிக்காது. அதோட நீ பேசுறதைக் கேட்க வேண்டிய அவசியமும் இல்லை. நீயா போயிடுவியா இல்ல உங்க அத்தைகிட்ட சொல்லி உன்னை வெளியேத்தணுமா?''

கயல்விழியின் கண்கள் கலங்கின. இருகரங்களையும் எடுத்துக் கும்பிட்டாள். ''வேண்டாங்க! நானே போயிடுறேன். தப்புதான். நான் வந்திருக்கக் கூடாதுதான். அத்தைக்கு உடம்புக்கு முடியலன்னு மாமா வந்து கூப்பிட்டதாலத்தான் வந்தேனே தவிர, நீங்க நினைக்கிற மாதிரி எந்த தப்பான எண்ணத்தோடயும் வரல. நான் போயிடுறேன். இனி உங்க கண்ல படவே மாட்டேன்.''

பொங்கிய கண்ணீரோடு விலகி ஓடியவளைக் கண்டு முகம் மாறினான் சுதாகரன். தாயுடன் வாதிட்டுக் கொண்டிருந்த தம்பியை அழைத்தான்.

"ஹரி! கயல் அழுதிட்டே போறா பாரு. வெளியே ஓடுறாடா.''

"என்ன?'' என்றவாறு திரும்ப, அதற்குள் கதவைத் திறந்து வெளியே போய் விட்டிருந்தாள் கயல்விழி. காளிதாசும் ஹரிஹரனும் பதற்றமாய் வெளியே ஓட, நெற்றியில் அறைந்து கொண்டாள் சுமித்ரா.

"அத்தே! இது என்ன கூத்து? இப்படியா பொது இடத்தில நாடகம் போடுறது? சம்பந்தி வீட்டுக்காரங்க நம்மைப்பத்தி என்ன நினைப்பாங்க? ச்சே'' என்றவளை சுதாகரன் அதட்டினான்.

"ஏய்! வாயை மூடுடி. இப்ப என்ன ஆகிப்போச்சுன்னு நீ குதிக்கிற?''

"இன்னும் என்னங்க ஆகணும்? உங்க தம்பி செய்தது சரியா?''

''ஏன்? அவன் என்ன தப்பாப் பண்ணிட்டான்?''

"நாமதான் அவ இங்க வரவேண்டாம்... வந்தா பிரச்சினையாகும்னுதானே வீட்ல விட்டுட்டு வந்தோம். இவர் ஏன் கூட்டிட்டு வந்தார்?''

''ஏய்! என்ன உளர்ற? அவ இங்கே வந்ததால யாருக்கு என்ன பிரச்சினை?''

''என்ன பிரச்சினையா? அப்போ இவ்வளவு நேரம் இங்கே நடந்ததெல்லாம் நீங்க பார்க்கவே இல்லையா?''

"என்ன நடந்தது?''

''சரிதான். உங்க தம்பியும் அவளும் ஜோடியா வந்ததைப் பார்த்து பிரியா ரொம்ப அப்செட்டாயிட்டாள். அவங்க அம்மா அப்பா முகம் கூட சரியில்ல. நான்தான் பிரியாவை சமாதானம் பண்ணிட்டு வந்தேன்'' என்றவளை கூர்மையாய் பார்த்தான் சுதாகரன்.

''சமாதானம் பண்ணினியா? இல்ல கூடக்கொஞ்சம் பத்த வெச்சிட்டு வந்தியா?'' கணவனின் கேள்வியில் தடுமாறிப் போனாள் சுமித்ரா. அவசரமாய் மாமியாரைப் பார்க்க, இந்திரா சம்பந்தி வீட்டாருடன் பேசிக் கொண்டிருப்பது தெரிந்ததும் நிம்மதியாய் மூச்சு விட்டாள்.

சுதாகரன் விடாமல் கேட்டான். "எனக்கென்னவோ உம்மேலதான் சந்தேகமா இருக்கு.''

"என்ன பேசுறீங்க நீங்க?''

"உன்னைப் பத்தி எனக்கு மட்டும்தான்டி தெரியும். கயலை உனக்குப் பிடிக்கவே இல்லை. அதோட பிரியாமேலயும் கொஞ்சம் பொறாமை. இரண்டையும் சேர்த்து ஏதாவது வஞ்சம் தீர்த்திட்டியா?''

''ஏங்க! பொண்டாட்டிகிட்ட பேசுற மாதிரியா பேசுறீங்க? எனக்கென்ன வேற வேலை இல்லையா?''

"இல்லையே! சாதாரணமா ஷாப்பிங் வந்தா உயிர் போற அவசரம்னாக் கூட திரும்பிப் பார்க்க மாட்டியே. இன்னைக்கு என்ன புடவையைக் கூட சரியா பார்க்காம பிரியாகூட நின்னு கதை விட்டுட்டு இருந்தே?''

''அ..து... நம்ம வீட்டுக்கு வரப் போறவன்றதால சும்மா பேசிட்டு இருந்தேன்.''

## இணையதளத்தை கலக்கும் சடை பூனை!

அமெரிக்காவில் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரைச் சேர்ந்தவர் ஆனிமேரி. இவருக்கு 52 வயதாகிறது. இவர் தனது வீட்டில் செல்லமாக பூனை ஒன்றை வளர்த்து வருகிறார். இந்த பூனைக்கு கனோல் மியாவ் என்று செல்லப் பெயரும் வைத்துள்ளளர். இந்த பூனை உடல் முழுவதும் 22.87 செ.மீ. நீளமுள்ள அடர்த்தியான முடியுடன் காணப்படுகிறது. இந்த பூனையை பராமரிப்பதற்கென்றே இரண்டு ஊழியர்களை ஆனிமேரி நியமித்து இருக்கிறார்.

வாரத்திற்கு 3 நாட்களுக்கு பூனைக்கு ஷாம்பு குளியல், டிரையர், முடி பராமரிப்பு, பியூட்டிஷியன் மேற்பார்வை போன்ற கவனிப்புகளும் கனகச்சிதமாக நடக்கிறது. தற்போது இந்த பூனைதான்



இணையதளத்தை கலக்கிக் கொண்டு இருக்கிறது. இந்த பூனைக்கான பிரத்தியேக இணைய தளங்களும் தொடங்கப்பட்டுள்ளன. முகநூலில் இதற்கு தினமும் 2 ஆயிரம் பேர் வரை தகவல் அனுப்புகின்றனர். உலக அளவில் இந்த பூனைக்கு புகழ் பரவி வருவதால் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இந்த பூனையின் பெயரை பதிவு செய்யும் முயற்சியில் ஆனிமேரி ஈடுபட்டுள்ளார்.

கறுப்பு வெள்ளை நிறத்தில் ஆங்காங்கே பிரவுன் புள்ளிகளோடு உள்ள இந்த பூனையை அவர் வெளியில் அழைத்துச் செல்லும் போது நடிகர், நடிகைகளுக்கும் இல்லாத அளவுக்கு வரவேற்பு இருக்கிறதாம். சொல்லி வியக்கிறார் ஆனிமேரி.

''இல்ல! நீ ஏதோ தகிடுதத்தம் பண்ணியிருக்க. நீ பேசினப் பிறகுதான் அவ முகம் மாறிப் போச்சு. இதோ பாருடி! உன்னை நீயே மாத்திகிட்டா உனக்கு நல்லது. இல்லேன்னா உனக்குத்தான் கஷ்டம்.''

''ஹூம்! எங்க அப்பா தேடித்தேடிப் பிடிச்சாரு பாருங்க உங்களை? கட்டினவளுக்கே சாபம் கொடுக்கிறீங்களா?''

''உன்னைக் கட்டுறதுக்கு முன்னாலயே என்னைப் பெத்தவங்களுக்கு நான் பிள்ளை. என் தம்பிக்கு அண்ணன். உன்னால அவங்களுக்கு எதுவும் பிரச்சினை வந்தா... உன்னைச் சும்மா விட மாட்டேன்.'' ஒற்றை விரலை நீட்டி எச்சரித்தான் சுதாகரன்.

சுமித்ராவிற்குள் பயம் வேர் விட்டது. தன் பெயர் வெளியாகிவிடுமோ என்ற அச்சத்தில் மெல்ல நகர்ந்து மாமியாரின் அருகே சென்றாள். பிரியவதனாவின் அப்பா நிதானமாய் பேசிக் கொண்டிருந்தார்.

''சம்பந்தியம்மா! எங்களுக்கு இருக்கிறது ஒரே பொண்ணு. அவ விருப்பமில்லாம நாங்க எதையும் செய்யறதில்ல. உங்க குடும்பத்தில ஏதோ குழப்பம் இருக்குன்னு புரியுது. முதல்ல அதை சரிப்பண்ணுங்க. மத்ததெல்லாம் பிறகு பேசிக்கலாம்.''

''சம்பந்தி?''

''எங்களுக்கு உங்க குடும்பத்தையும் மாப்பிள்ளையையும் ரொம்பப் பிடிச்சதாலதான் இந்த சம்பந்தத்துக்கு ஒத்துக்கிட்டோம். அதே சமயம் எம்பொண்ணுக்கு ஒரு குறை வந்திடக் கூடாது.''

''இப்ப என்ன சம்பந்தி நடந்துப் போச்சு?''

''எதுவும் நடந்திடக் கூடாதுன்னுதான் சொல்றேன். உங்க பிள்ளைகூட வந்த பொண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும்...''

''சம்பந்தி!''

''வெறும் அத்தைமகள் மாமன்மகன்ற உறவுதானா? இல்ல அதையும் மீறி ஏதாவது இருக்கான்னு தெரிஞ்சிகிட்டு எங்கிட்ட சொல்லுங்க. ஏன்னா... சரியா விசாரிக்காம அவசரப்பட்டு தட்டை மாத்திட்டு அப்புறம் அவஸ்தைப்படக் கூடாது பாருங்க.''

''இல்ல சம்பந்தி! எம்புள்ளையப் பத்தி எனக்குத் தெரியும். அவன் விருப்பத்தைக் கேட்டபிறகுதானே நிச்சயத்திற்கு நாள் குறிச்சோம்?''

''அவருக்காக எம்மக மணிக்கணக்கா காத்திருந்தாள். அவர் அந்தப் பொண்ணுகூட வந்ததே எங்களுக்குக் கொஞ்சம் நெருடல்தான். வந்தவர் எம் பொண்ணுகிட்ட நின்னு நாலு வார்த்தை பேசினாரா? இல்லையே! இதோ இப்பக்கூட அவருக்கு எம்பொண்ணு முக்கியமாப்படல. அந்தப் பொண்ணு போனதும் அவபின்னாடியே போயிட்டாரே. இதுக்கு என்ன அர்த்தம்? அவரோட நிச்சயதார்த்தத்திற்குத்தானே துணி எடுக்க வந்தோம்? ஆனா அவர்

எதைப் பற்றியும் கவலைப்படாமல் மரியாதைக்காகக் கூட எங்ககிட்ட ஒரு வார்த்தை பேசாம போயிட்டாரே. அப்போ அவர் மனசில என்ன நினைப்போட இருக்கார்?'' அவர் பேசிக் கொண்டே போக, சுதாகரனின் முகம் கடுத்தது.

"இப்ப என்ன சொல்ல வர்றீங்க?"

''தம்பி! எனக்கு எம்பொண்ணோட வாழ்க்கை முக்கியம். உங்க தம்பி மனசில என்ன இருக்குன்னு பேசி தெளிவுபடுத்திகிட்டு வீட்டுக்கு வாங்க. அப்போ பேசிக்கலாம். இப்ப நாங்க கிளம்புறோம்.'' அவர் பொதுவாய் வணங்கிவிட்டு தன் குடும்பத்தாருடன் வெளியேற, இந்திரா தொய்ந்து போய் அமர்ந்தாள்.

## 6

**வீ**டு மொத்தமும் கொந்தளித்துக் கொண்டிருக்க, அனைவரும் ஹாலில் கூடியிருந்தனர். இந்திரா தளர்வாய் சோபாவில் அமர்ந்திருக்க, அவளை சமாதானம் செய்தபடி அருகே அமர்ந்திருந்தாள் சுமித்ரா.

ஹரிஹரன் கைகளைக் கட்டிக்கொண்டு சுவரில் சாய்ந்து நிற்க, காளிதாசும் சுதாகரனும் செய்வதறியாது நின்று கொண்டிருந்தனர். இவற்றில் கலந்து கொள்ளாமல் மற்றொரு சோபாவில் அமர்ந்து தன் பேத்தியுடன் விளையாடிக் கொண்டிருந்தார் நாகராஜன்.

உள்ளே உமாவின் அறையில் இன்னும் அழுது கொண்டிருந்தாள் கயல்விழி. உமா அவளை எத்தனையோ சமாதானம் சொல்லியும் அவளது கண்ணீர் நின்றபாடில்லை.

''போச்சு! மானம் போச்சு! மரியாதை போச்சு! இத்தனை வருஷமா கட்டிக்காத்த பேர் கெட்டுப் போச்சு. இப்படி எல்லாத்தையும் குழிதோண்டி புதைக்கவா இவளை ஊர்ல இருந்து கூட்டிட்டு வந்தீங்க?" இந்திராவின் குரலில் கோபமானார் காளிதாஸ்.

"ஊர்ல சிவனேன்னு இருந்த பொண்ணை கூட்டிட்டு வரச் சொன்னதே நீதான். இப்ப என்னைச் சொல்றியா?"

"சொன்னேன். என் உடம்பு முடியாம இருக்குதே. இவ வந்தா ஒத்தாசையா இருக்குமேன்னு சொன்னேன். ஆனா இவ இப்படி ஒரு காரியம் செய்வான்னு நினைக்கலையே."

"அப்படி அவ என்ன பண்ணிட்டா?"

"என்ன பண்ணல? இன்னிக்கு சம்பந்தி வீட்டுக்காரங்க முன்னால என்னைத் தலைகுனிய வெச்சிட்டாளே!"

"அம்மா! அப்படி அவ என்னதாம்மா பண்ணினா?" எனக் கேட்ட இளையமகனை கோபமாய் பார்த்தாள்.

''நீதான்டா! நீதான் ஒட்டுமொத்த பிரச்சினைக்கும் காரணம்."

"நான் என்ன பண்ணினேன்?"

"உன்னை யார் அவளைக் கூட்டிட்டு வரச் சொன்னது?"

''நீங்க யாரும் கூட்டிட்டு போகல. அதான் நான் கூட்டிட்டு வந்தேன். தட்ஸ் ஆல்."

''யாரை எப்போ எங்கே கூட்டிட்டு போகணும்னு எனக்குத் தெரியாதா? நீ என்ன அதிகப்பிரசங்கி மாதிரி காரியம் பண்ற?"

"அம்மா! இப்போ நீங்க இப்படி பதறுற அளவுக்கோ கோபப்படுற அளவுக்கோ என்ன நடந்தது? பாவம்! கிராமத்தில வீட்டுக்குள்ளேயே அடைஞ்சி கிடந்தவ. முதல் முறையா நம்ம வீட்டுக்கு வந்திருக்கா. இங்கேயும் அடைச்சி வெக்கணுமா? அதான் கூட்டிட்டு வந்தேன். இதுல என்ன தப்பு? அவளைத் தனியா வீட்ல விட்டுட்டுப் போனது உங்க தப்பு. இதுல என்னைக் குறை சொல்றீங்க?"

''பேசுவடா! நீ இதுவும் பேசுவ, இன்னமும் பேசுவ. இன்னிக்கு உம்மாமனார் பேசினதை நீ கேட்டிருக்கணும். நீதான் அவ முந்தானையைப் பிடிச்சிட்டு கூடவே போயிட்டியே."

"அம்மா!" கத்தினான் ஹரிஹரன்.

''பின்ன என்னடா? அந்த ஆள் என்னை நிக்க வெச்சு கேட்டானே! உங்க புள்ளைக்கும் அந்த பொண்ணுக்கும் என்ன உறவுன்னு? நான் என்ன பதில் சொல்ல முடியும்?" அத்தையின் கேள்வியில் கயல்விழி திடுக்கிட்டாள்.

'ஐயோ! அங்கே பிரச்சினை பெரிதாகியிருக்கும் போலிருக்கிறதே.'

ஹரிஹரன் தாயை நெருங்கி வந்து நேராய்க் கேட்டான்.

"என்னம்மா சொல்றீங்க?"

"அத்தைகிட்ட கேட்காதீங்க. அவங்களால சொல்ல முடியாத கேள்வியெல்லாம் கேட்டாரு" சுமித்ரா சிடுசிடுத்தாள்.

"யாரு?"

“பிரியாவோட அப்பா.”

“என்ன கேட்டாரு?”

“உங்களுக்கு கயல் முக்கியமா, பிரியா முக்கியமான்னு கேட்டாரு.”

“வாட் நான்சென்ஸ்? என்ன உளர்றீங்க?”

“அவர் கேட்டதில என்ன தப்பு?”

“அண்ணீ.”

“உங்களுக்கு நிச்சயம் பண்ணி வெச்சது பிரியாவைத்தானே. அவளை விட்டுட்டு நீங்கபாட்டுக்கு கயல்கூட போயிட்டா வேற என்ன நினைப்பாங்க?”

“ஓ! ஷிட்! கயல் அழுதிட்டே வெளியே போனாளே. இது அவளுக்கு தெரியாத ஊர். வழி தவறி எங்காவது போயிட்டா என்னாகும்? அதான் கூடப் போனேன்.”

“ஏன்? தெரியாத ஊர்ல இப்படி தனியா போறோமேன்னு அவளுக்கு தோணாதா? அவ காரியமாத்தான் போயிருக்கா.”

“அண்ணி... புரியும்படி சொல்லுங்க”

“ஆமா! அவகூடவே நீங்களும் போயிட்டீங்க. இப்போ உங்க நிச்சயதார்த்தமே கேள்விக்குறியாகிப் போச்சு. இதைத்தானே அவ எதிர்பார்த்திருப்பா.”

“ஏய்! வாயை மூடு. அந்த ஆள் முட்டாள்தனமா பேசினதுக்கு நீ ஏன்டி கயல்மேல பழியப் போடுற?” சுதாகரன் குறுக்கிட, மகளைத் தடுத்தாள் இந்திரா.

“அவ சொல்றது சரிதானே சுதா?”

“அம்மா?”

“இவ ஏதோ திட்டத்தோடத்தான்டா நம்ம வீட்டுக்குள்ள நுழைஞ்சிருக்கா. இல்லேன்னா நான் வீட்ல இருன்னு சொன்ன பிறகும் சின்னவன் கூடச் சேர்ந்து அப்படி வருவாளா?”

“அம்மா! அவ வரமாட்டேன்னுதான் சொன்னா. நான்தான் கூட்டிட்டு வந்தேன்.”

“டேய்! முதல்ல எனக்கொரு உண்மை தெரிஞ்சாகணும். உன் மனசில என்ன இருக்கு?”

“என்னன்னா?”

“பிரியாவை கட்டணும்னு நினைக்கிறியா? இல்ல கயலை கட்டிக்கணும்னு நினைக்கிறியா?”

“என்ன பைத்தியக்காரத்தனமான கேள்வி இது?”

“கேட்டதற்கு பதில் சொல்லு.”

‘தாயின் கேள்விக்கு அத்தான் என்ன பதில் சொல்லப் போகிறான்?’ பதறும் இதயத்தோடு காதைத் தீட்டினாள் கயல்விழி.

“அம்மா! கயல் நம்ம அத்தைப் பொண்ணு. சின்னவயசில இருந்து பார்த்து பழகியிருக்கோம். அவமேல நான் வெச்சிருக்கிறது இயல்பான அன்பு. ஆனா பிரியாவை நான் பார்க்கப்போனது இவதான் என் மனைவின்னு முடிவு பண்ணின பிறகுதான். அது வேற இது வேறம்மா. இரண்டையும் போட்டு குழப்பாதீங்க.”

“அப்படின்னா... பிரியாவைத்தான் கல்யாணம் பண்ணிக்க விரும்புற?”

## கடலுக்கடியில் பாதாள உலகம்!

அண்டார்ட்டிகா கடலில் 8 ஆயிரம் அடிக்கு கீழே இதுவரை அறியப்படாத ஒரு பாதாள உலகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வெளியுலகம் அறியாத பல புதிரான உயிரினங்கள் இந்த பாதாள உலகில் இருப்பதாக இங்கிலாந்து விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இதில் பலவகை நண்டுகள், புதுவகையான ஆக்டோபஸ், நட்சத்திர மீன்கள் போன்றவை இருப்பதாக இந்த விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த அரிய வகை உயிரினங்கள் அறிவியல் உலகத்திற்கு முற்றிலும் புதியவை என்றும் கூறுகின்றனர். இதில் இன்னொரு ஆச்சரியம் என்னவென்றால் கடலுக்கடியில் உள்ள எரிமலைகளுக்கு மேலே இந்த உயிரினங்கள் வாழ்வதுதான். எரிமலைகள் சீறும் போது கரும்புகையை கக்குகின்றன. அப்போது இதன் வெப்பநிலை 380 டிகிரி அளவுக்கு இருக்கும்.

சூரிய வெளிச்சத்துக்கே முற்றிலும் வாய்ப்பில்லாத நிலையில் இருக்கும் இருட்டில் இந்த உயிரினங்கள் எரிமலைக் கரும்புகையில் உள்ள நச்சுத்தன்மை வாய்ந்த வேதிப்பொருட்களை உடைப்பதன்





மூலம் தங்களுக்கு தேவையான சக்தியையும் இந்த உயிரினங்கள் பெறுகின்றன. இந்த பாதாள உலகத்தில் காணப்படும் இரண்டு டஜன் புதிய உயிரினங்களில் யெட்டிகிராப் என்ற உயிரினம்தான் அதிக அளவில் உள்ளது. இவை 16 செ.மீ. நீளம் உடையவை. எரிமலைக் குழம்பு வெடிக்கும் இடத்திற்கு அருகே இந்த உயிரினங்கள் உலவுகின்றன.

இவை நண்டுகளைப் போன்ற உடலமைப்பைக் கொண்டிருந்தாலும் இவற்றின் மார்புப் பகுதியில் ரோமத்தால் ஆன அடர்த்தியான அடுக்குகளை கொண்டுள்ளன. இதில் பாக்டீரியாக்களை வளர்த்து அதனையே உணவாக உண்ணுகின்றன. இங்கு புதுவகையான ஆக்டோபசும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுவரை அறியப்படாத புதிய இனம் இது என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். மேலும் இங்கு 7 கரம் கொண்ட நட்சத்திர மீன் போன்ற உயிரினங்களும் இருப்பதாக தெரிவிக்கின்றனர். இதுபோன்ற அரிய வகை உயிரினங்கள் தங்களை மேலும் ஆராய்ச்சியில் ஈடுபட தூண்டுவதாகவும் அவர்கள் கூறுகிறார்கள்.

"கண்டிப்பா. இதில என்ன சந்தேகம்?" ஹரிஹரனின் பதிலில் கயல்விழியின் இதயம் சிலகணம் நின்று பின் துடித்தது. அவன் மனதை தெளிவாய்ச் சொல்லிவிட்டான்.

'அன்றிலிருந்து இன்றுவரை அவன்மீது நேசம் வைத்தது நான்தானே! இது அவனுக்கே தெரியாதே. தனக்குள் தோன்றி தனக்குள் வளர்ந்து தனக்குள்ளே மரித்துப் போகும் இந்த நேசம் கடைசி வரை யாருக்கும் தெரியப் போவதில்லை. தெரியவும் கூடாது.

அத்தானின் மனதில் அந்த அழகுப் பெண்தான் இருக்கிறாள். அவளைத்தான் தன் மனைவியாய் நினைக்கிறான். இதற்கு மேலும் இங்கே இருந்து அவனது வாழ்க்கையை நிம்மதியைக் குலைக்கக் கூடாது.

அவன் அருகே வாழ முடியாவிட்டால் என்ன? அவன் நினைவுகள் என் மனதில் இருக்கும் வரை வேறு யாராலும் என் நேசத்தைப் பிரிக்க முடியாது. பிரிக்கவும் முடியாது. இறுதிவரை என் மூச்சோடு கலந்திருக்கும் அவனது நினைவுகள் மட்டும் எனக்குப் போதும்.'

கண்ணீரைத் துடைத்துக் கொண்டே எழுந்தாள் கயல்விழி. தன் பெட்டியை எடுத்து கட்டிலின் மேல் வைத்தாள்.

காலையில் கழற்றிப் போட்ட புடவை அப்படியே கிடக்க, அதை மடிக்கத் துவங்கினாள். அவளது செயல்பாடுகளை பார்த்த உமா பதறினாள்.

"கயல்! என்ன பண்றே?"

"ஊருக்குப் போறேன்."

"எ..ன்..ன?"

"இங்க உள்ள எல்லாப் பிரச்சினைகளுக்கும் நான்தான் காரணம். நான் போயிட்டா எல்லாம் சரியாகிடும். நான் போறேன்" கயல்விழி அழுத்தமாகச் சொல்ல, வெளியே தன் தாயிடம் மறுத்தான் சுதாகரன்.

"இல்லம்மா! ஹரி கயலைக் கடைக்குக் கூட்டிட்டு வந்ததோ, அதை பொண்ணு வீட்டுக்காரங்க பார்த்ததோ இப்ப பிரச்சினை இல்லை."

"வேற?"

"நடுவில யாரோ செய்த நாரதர் வேலைதான் இந்தப் பிரச்சினைக்கு மொத்தக் காரணம்" சுதாகரன் தன் மனைவியை வெறித்துக் கொண்டே சொல்ல, சுமித்ராவின் முகம் வெளிறியது.

இந்திரா குழப்பமாய் நிமிர்ந்தாள். "என்னப்பா சொல்ற?"

"ஹரியை இன்னொரு பெண்கூட பார்த்ததும் தன்னோட நிச்சயதார்த்தத்தையே நிறுத்துற அளவுக்கு பிரியா ஒண்ணும் படிக்காத பாமரப் பொண்ணு இல்ல. சிட்டியிலயே வாழ்ந்தவ. அவ கண்ணுக்கு இதெல்லாம் தப்பாத் தெரியாது."

"அப்போ?"

"வேற யாரோ வேணும்னே அவ மனசில நஞ்சை விதைச்சிருக்காங்க. ஹரியைப் பத்தியும் கயலைப் பத்தியும் தப்புத்தப்பா இணைச்சிப் பேசி அவளைக் குழப்பியிருக்காங்க."

"அண்ணா! நீ... என்ன சொல்ற? யார் இப்படிப் பண்ணியிருப்பாங்க."

“அதை நான் கண்டுபிடிக்கிறேன் ஹரி! நீ இப்ப ஒன்னே ஒண்ணு மட்டும் செய்.”

“சொல்லுண்ணா.”

“முதல்ல போய் பிரியாவைப் பாரு. அவ ரொம்பக் குழம்பிப் போயிருக்கா. கொஞ்சம் பொறுமையா பேசுங்க. மனசு விட்டு பேசினா எந்தக் குழப்பமும் வராது. போ.”

“ச..சரிண்ணா.”

“அம்மா! ஹரி புத்திசாலி. திறமைசாலி. அவன் ப்ராப்ளத்த அவனே ஸால்வ் பண்ணிடுவான். நீங்க வீணா வருத்தப்பட்டு உடம்பைக் கெடுத்துக்காதீங்க.”

‘‘ஆமாம்மா! எம்மேல உங்களுக்கு நம்பிக்கை இருக்கில்லையா?”

‘‘இருக்குப்பா! எது செய்யுறதா இருந்தாலும் பார்த்து பொறுமையா பேசுங்க. எனக்கு ரொம்ப படபடப்பா இருக்கு. கொஞ்சம் படுத்து எழுந்துக்கிறேன்.”

“அப்பா! அம்மாவைப் பார்த்துக்கங்க. நான் இப்ப வந்திடுறேன்’’ என்றவாறு ஹரிஹரன் வெளியேற, அவனது இருசக்கர வாகனம் புறப்படும் வரை அறைக்குள் நின்றவள், மெல்ல பெட்டியோடு வெளியே வந்தாள்.

தன் அறைக்குள் நுழைய முயன்ற இந்திராவை தயக்கமாய் அழைத்தாள்.

“அத்தே.”

‘‘ம்?’’ என திரும்பியவள் கையில் பெட்டியோடு நின்றவளைப் பார்த்து புருவம் உயர்த்தினாள். காளிதாஸ் பலமான அதிர்வோடு கயல்விழியை நெருங்கினார்.

“கயல்! என்னம்மா இது?”

“நான்... ஊருக்குப் போயிடுறேன் மாமா.”

“என்ன?”

“தெரிஞ்சோ தெரியாமலோ என்னால உங்க நிம்மதி கெட்டுப்போச்சு. இனிமேலும் என்னால நீங்க சங்கடப்பட வேண்டாம்! என்னை ஊர்ல கொண்டு போய் விட்டுடுங்க மாமா.”

‘‘நல்ல முடிவுதான் எடுத்திருக்க. போயிட்டு வா’’ என்ற இந்திராவை நம்பமுடியாமல் பார்த்தார் காளிதாஸ்.

“என்ன இந்திரா, இப்படிப் பேசுற?”

‘‘ஏன்? நாம சொல்லாமலே கிளம்புறான்னா அவளுக்கே நம்ம நிலைமை புரியுதுன்னுதானே அர்த்தம்? போகட்டும் விடுங்க.”

“அடுத்தவங்க மனசு புண்படுகிற மாதிரி பேசுறவ இல்லையே நீ?”

‘‘இப்ப அத்தை என்ன தப்பா பேசினாங்க மாமா? இவ போறதுதான் நம்ம எல்லாருக்கும் நல்லது” என்ற சுமித்ராவின் முகம் பற்றி ஆத்திரமாய்த் திருப்பினான் சுதாகரன்.

“அம்மா அப்பா பேசும்போது நீ ஏன்டி குறுக்கே பேசுற. போ உள்ளே.”

“ஏன்? நான் பேசினா என்ன?”

“வேண்டாம் சுமி. நான் எல்லா நேரமும் பொறுமையா இருக்க மாட்டேன்.’’ மருமகனின் குரல் உயரவும் நாகராஜன் எழுந்தார்.

‘‘சுமிம்மா! அப்பாவுக்கு ஒரு காபிக் கொடும்மா.”

‘‘இதோ வர்றேம்பா’’ என்றவாறு இருவரும் விலகியதும் மனைவியை நெருங்கினார் காளிதாஸ்.

“இதோ பாரு இந்திரா! நாமதான் போய் கயலை அழைச்சிட்டு வந்தோம். இப்ப நாலே நாள்ல கொண்டுபோய் விட்டால் என் தங்கச்சி என்ன நினைப்பாள்?”

“அதெல்லாம் பார்த்தால் நம்ம புள்ள கல்யாணம் என்னாகும்? எனக்கு எம்புள்ள கல்யாணம்தான் முக்கியம்.”

“அதான் ஹரி பேசப் போயிருக்கானே. நிச்சயதார்த்தம் வரைக்குமாவது இருந்துட்டு போகட்டுமே.”

“வேண்டாம் மாமா.”

“ஏம்மா?”

“நிச்சயதார்த்தம், கல்யாணமெல்லாம் எல்லாரும் சந்தோஷமா கொண்டாடுற விசேஷம். நான் இருந்தா எல்லாருக்குமே சங்கடம். நான் போயிடுறேன் மாமா.”

“கயல்...”

‘‘அத்தான் அவர் மனசுக்கு பிடிச்ச பெண்ணோட சந்தோஷமா வாழணும் மாமா. என்னால அவருக்கு எந்த சங்கடமும் வரக்கூடாது. என்னை போக விடுங்க மாமா.” கண்களில் நீர் தளும்பச் சொன்னவளை சுதாகரன் கவனமாய்ப் பார்த்தான்.

மனதின் வலியை மறைக்க முயன்று முடியாமல் வெளியேறிய அந்தக் கண்ணீரை அவன் மனம் உணர்ந்தது. ‘இந்தப் பெண் தன் தம்பியை விரும்புகிறாளோ?’

“இல்லம்மா! இப்ப உன்னைக் கூட்டிட்டுப் போனா உன் அம்மா கேட்கிற கேள்விக்கு நான் என்ன பதில் சொல்லுவேன்?”

“அம்மாகிட்ட நான் சொல்லிக்கிறேன் மாமா. உங்களுக்கு கஷ்டமா இருந்தா

என்னை பஸ் ஏத்தி விட்டுடுங்க. நான் போயிடுவேன்."

"கயல்! நான் சொல்றதைக் கேளும்மா. முதல்ல ஹரி வந்திடட்டும்."

''வேண்டாம் மாமா! சின்னத்தான் வர்றதுக்குள்ள நான் போகணும்.'' அவளது பதற்றமும் கண்ணீரும் அவள் ஹரியை விரும்புகிறாள் எனத் தெளிவாய்ச் சொல்லிவிட, சுதாகரன் பெருமூச்சு விட்டான்.

"அப்பா! நான் போய் கயலை விட்டுட்டு வர்றேன்."

"சுதா?"

''ஆமாப்பா! நானும் ஊருக்குப் போயி ரொம்ப நாளாச்சு. கயலை விட்டுட்டு அப்படியே அத்தையையும் பார்த்திட்டு வர்றேன்."



"ரொம்ப நன்றி பெரியத்தான்."

''வா போகலாம்'' என்றவாறே கார் சாவியை எடுத்துக் கொண்டு, அவளது பெட்டியை வாங்கிக் கொண்டு அவன் வெளியேற, கயல் இந்திராவை நெருங்கினாள்.

''அத்தே! உடம்பை பார்த்துக்கங்க. உங்களுக்கு உதவியா இருக்கணும்னு வந்தேன். முடியாமப் போச்சு. மன்னிச்சிடுங்க அத்தை. நான் கிளம்புறேன்.'' கண்கள் பனிக்க சொன்னவளிடம் பதிலேதும் சொல்ல முடியாத தர்மசங்கடத்தில் இருந்தாள் இந்திரா.

''வர்றேன் மாமா. வர்றேன் உமா'' என்றவள் விடுவிடுவென வெளியேறி காரில் ஏறினாள். சுதாகரன் எதுவும் பேசாமல் காரைக் கிளப்பினான்.

வழிநெடுக மவுனமாய் அழுது கொண்டே வந்த கயல்விழியைக் கண்டு மனம் வருந்தியவனாய் சாலையோரமாய் காரை நிறுத்தினான்.

''கயல்... நான் கேட்கிற கேள்விக்கு உண்மையான பதிலைச் சொல்லணும். சொல்லுவியா?"

"எ..ன்னத்... தான்?" எனத் தடுமாறினாள்.

## கூந்தல் வளர்ப்பதில் கின்னஸ் சாதனை!

ஒவ்வொருவருக்கும் ஒரு சாதனை நிகழ்த்த வேண்டும் என்ற ஆசை இருக்கத்தான் செய்யும். ஆனால் எல்லோராலும் அது முடிவதில்லை. உலகில் எத்தனையோ சாதனையாளர்கள் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கலாம். ஆனால் ஜார்ஜியாவில் அட்லாண்டா நகரில் வசிக்கும் ஆஷா மண்டேலா என்ற 50 வயது பெண் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக தனது தலைமுடியை வெட்டாமல் பராமரித்து வருகிறார்.

2008-ம் ஆண்டு இவரது நீளமான கூந்தலுக்காக இவரது பெயர் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பிடித்தது. இந்த சாதனை படைத்த முதல் பெண்மணியும் இவரே ஆவார். இதற்கு அடுத்த வருடமும் தனது சாதனையை இவரே முறியடித்தார். அப்போது இவரது கூந்தலின் நீளம் 19 அடி 6 அங்குலமாக இருந்தது. இதற்கு அடுத்த வருடம் இவரது முடிக்கற்றைகள் மிக நீளமாக வளரும் தன்மை கொண்டிருப்பதால் இவரது சாதனையை குறிப்பிடுவதை கின்னஸ் புத்தகமே நிறுத்திக் கொண்டது.

சிறுசிறு பின்னல்களாக தனது முடியினை அலங்கரித்துக் கொள்ளும் ஆஷாவுக்கு ஒரு மகன் இருக்கிறார். 2-வது கணவருடன் வசித்து வரும் இவர் வெளியில் செல்லும் போது தனது கூந்தலை சுமக்க குழந்தையை இடுப்பில் சுமப்பது போன்றே குறுக்காக ஒரு துணியை தோளில் கட்டிக் கொண்டு அதில் தனது முடியை சுருட்டி வைத்துக் கொள்வார். சமீபத்தில் இவரது கூந்தலை அளந்த போது இவரது முடியின் நீளம் 55 அடி 7 அங்குலமாக இருந்தது. 39 பவுண்டு எடை கொண்ட இவரது கூந்தலே இவருக்கு ஏராளமான ரசிகர்களை பெற்றுத் தந்துள்ளது.

இவரது முடி 9-வது உலக அதிசயம் என்றும், இவர் ஒரு நடமாடும் சரித்திரம் என்றும் பாராட்டுகிறார்கள். இத்தனைக்கும் புற்று நோயால் தாக்கப்பட்டு மருத்துவம் செய்து கொண்ட போதும் இவருக்கு முடி கொட்டவில்லை. இரண்டு முறை மாரடைப்பு வந்து படுக்கையில் படுத்த பிறகும் முடி வளர்ப்பதை மட்டும் இவர் கைவிடவேயில்லை. இவ்வளவு நீளமான முடி வளர்ப்பது உடல் ஆரோக்கியத்துக்கு கெடுதல் என்று டாக்டர்கள் சொன்னபோதும் கூந்தலை கத்தரிக்க முடியாது என்று பிடிவாதமாக இருக்கிறார் ஆஷா!

“நீ ஹரியை விரும்புறியா?” சுதாகரன் நேரிடையாகக் கேட்டுவிட, பலமாய் அதிர்ந்தாள். பேச்சுவராமல் தட்டுத்தடுமாறி தவிக்க, கண்ணீர் உடைப்பெடுத்துக் கொண்டது.

“இல்லன்னு பொய் சொல்லாதே. எனக்குத் தெரியும் நீ அவனை விரும்புறேன்னு! பதில் சொல்லு.”

“நான்... பதில் சொல்லி... என்ன ஆகப்போகுது அத்தான். காலம் கடந்து போச்சே. என் அத்தான் எனக்கு இல்ல... இல்ல...” என்றவாறு பெருங்குரலெடுத்து அழ ஆரம்பித்தாள் கயல்விழி.

## 7

பிரியவதனாவின் ஆடம்பர மாளிகையின் மேல்தளத்தில் நின்று கொண்டிருந்தான் ஹரிஹரன். வரிசையாய் சின்னஞ் சிறு மண்தொட்டிகளில் விதவிதமான சிறுமலர்கள் பூத்திருந்தன. பச்சை பசேலென்ற செடிகளில் ரத்தச்சிவப்பில் குட்டியாய் பூத்திருந்த மலர்கள் கண்ணைப் பறித்தன.

வெயில் படாமல் இருக்க, வண்ணமயமான பாலிதீன் கூரை வேயப்பட்டிருக்க, ஹரிஹரன் பொறுமையின்றி நின்று கொண்டிருந்தான். செடிகளின் நடுவே போடப்பட்டிருந்த இரும்பு ஊஞ்சலில் அமர்ந்திருந்த பிரியவதனா கால்மேல் கால் போட்டுக் கொண்டு தனது செல்போனில் தோழியுடன் பேசிக் கொண்டிருந்தாள்.

கிட்டத்தட்ட இருபது நிமிடங்களாய் அவன் அங்கு நிற்பதையே மறந்து அவள் பேசிக் கொண்டே இருக்க, ஹரிஹரன் கடுப்பாய் குரல் கொடுத்தான்.

“எப்போ பேசி முடிப்ப பிரியா?”

“ஜஸ்ட் ஒன் மினிட்!” என்றவாறே போனை ஒரு கையால் மூடிக் கொண்டு ஹரிஹரனை ஏறிட்டாள்.

“பேசிட்டு இருக்கேனில்ல?”

“ட்வென்ட்டி மினிட்ஸ்ஸா வெயிட் பண்ணிட்டு இருக்கேன்.”

“நான் வெயிட் பண்ணல? மார்னிங் ஜவுளி ஷோரூம்ல ஒன் அவரா வெயிட் பண்ணல?”

“ஓ! அதுக்காக நான் இன்னும் நாற்பது நிமிஷம் வெயிட் பண்ணணுமா?” கோபத்தில் வெடித்தவனை கையமர்த்தினாள்.

“ஷ்! ஏன் இப்படி கத்துறீங்க?”

“ஓ.கே. நீ பேசு. நான் கிளம்புறேன்.”

“வெயிட் ஹரி” என்றவள் போனை கட் பண்ணிவிட்டு நிமிர்ந்தாள்.

“எதுவுமே சொல்லாமக் கிளம்புறீங்க?”

“அதான் எல்லாம் தெளிவாச் சொன்னேனே”

“நீங்க சொன்னது இருக்கட்டும். நான் சொன்னதைப் பத்தி எதுவும் பதில் சொல்லாம போறீங்களே.”

“என்ன சொன்னே?”

“அந்தப் பொண்ணை ஊருக்கு அனுப்பச் சொன்னேனே.”

“வ்வாட்?”

“யெஸ்! அவளை இன்னிக்கே அனுப்பிடுங்க.”

“என்ன பிரியா இது? நான் இவ்வளவு நேரம் சொல்லியும் என்னை நம்பலையா?”

“ஸாரி ஹரி! நான் ரிஸ்க் எடுக்க விரும்பல” பிரியவதனா அலட்சியமாய்ச் சொல்ல, ஹரியின் முகம் மாறியது.

“வாட் யூ மீன்?”

“அந்தப் பொண்ணு உங்க வீட்ல இருக்கிறது எனக்குப் பிடிக்கல.”

“ஏன்?”

“காரணம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஐ டோண்ட் லைக் ஹெர்.”

“பிரியா! அவ எங்க கெஸ்ட். நம்ம கல்யாணம் வரைக்கும்தான் இருக்கப் போறா. அப்புறம் ஊருக்குப் போயிடுவா”

“நோ. அவ இன்னிக்கே போயாகணும்.”

“ஸ்டுப்பிட் மாதிரி பேசாதே பிரியா. வீட்டுக்கு வந்த கெஸ்ட்டை விரட்டியடிக்கச் சொல்றியா?”

“அவ வெறும் கெஸ்ட்தானே?”

“என்ன?”

“இல்ல... வெறும் கெஸ்ட்தானா? இல்ல அதையும் தாண்டி உங்களுக்குள்ள...”

“லுக் பிரியா! திஸ் இஸ் டூ மச்.”

“நீங்க நடந்துகிட்டது மட்டும் சரியா?”

“அப்படி என்ன தப்பா நடந்தேன்?”

“என் கண்ணு முன்னாலயே இன்னொருத்தியை பைக்ல கூட்டிட்டு வருவீங்களா?”

“ஸில்லியா பேசாதே.”

“எது ஸில்லி? நான் பேசுறதா? நீங்க நடந்துகிட்டதா?” பிரியவதனா ஆத்திரமாய் கேட்க, சோர்வாய் கண்களை மூடிக்

கொண்டான்.

“என்ன? பேச முடியலையோ?”

‘‘வேண்டாம் பிரியா. நான் உன்னை... ரொம்ப உயர்வான இடத்தில வெச்சிருக்கேன். நீ படிச்சவ. டீஸண்ட்ஸியா நடந்துக்கிறவ. உன்னோட அமைதியும் மென்மையும் எனக்கு ரொம்பப் பிடிக்கும். நீ இப்படியெல்லாம் பேசலாமா? இன்னும் கொஞ்ச நாள்ல நாம கணவன் மனைவி ஆகப் போறோம். நமக்குள்ள பேச எவ்வளவோ இருக்கு. அதை விட்டுட்டு ஏன் இப்படி தேவையில்லாம சண்டை போட்டுகிட்டு...”

“ஸாரி ஹரி! என் மனசுக்கு பிடிக்காத எதையும் என்னால சகிச்சுக்க முடியாது.”

“உனக்கு ஏன் பிரியா கயலை பிடிக்கல?”

“உங்க மேல யார் ஆசைப்பட்டாலும் எனக்குப் பிடிக்காது.”

“என்ன உளர்ற?”

‘‘எனக்கு எல்லாம் தெரியும் ஹரி. எங்கிட்ட எதையும் மறைக்க வேண்டாம்.”

“பிரியா!”

‘‘உங்களுக்கும் அவளுக்கும்தானே கல்யாணம் பண்றதா முடிவு பண்ணியிருந்ததாம்.”

“வ்வாட்? என்ன பைத்தியக்காரத்தனம் இது? உன் கற்பனைக்கு அளவே இல்லையா?”

“இது ஒண்ணும் என் கற்பனை இல்லை. என் காதால கேட்ட உண்மை.”

“காதால கேட்டியா? யார் சொன்னது?”

“அது... யார் சொன்னா என்ன? விஷயம் உண்மையா இல்லையா அதைமட்டும் சொல்லுங்க.”

‘‘நீ கண்டவங்க பேச்சைக் கேட்டு உளறுவதற்கெல்லாம் என்னால் பதில் சொல்ல முடியாது.”

“யாரு? யாரு கண்டவங்க? எல்லாம் உங்க வீட்டு ஆட்கள் சொன்னதுதான்.” பிரியவதனா வெறுப்பாய்ச் சொல்ல, அதிர்ந்து போனான் ஹரிஹரன்.

“எ..ன்ன? எங்க வீட்ல உள்ளவங்களா?”

“அவங்க சொல்லப் போய்தான் எல்லா விஷயமும் தெரிஞ்சது. இல்லேன்னா எங்கிட்ட சொல்லியிருப்பீங்களா?”

“எதை?”

“உங்க ரெண்டுபேருக்கும் கல்யாணம் பேசினதை.”

‘‘பிரியா! யாரோ உன்னை நல்லா குழப்பியிருக்காங்க. நீ நினைக்கிற மாதிரி எதுவும் கிடையாது. ரிலேஷனுக்குள்ள கல்யாணம் பண்ணக்கூடாதுன்னு எங்க அம்மா உறுதியா இருக்காங்க.”

“அப்போ அவங்க சம்மதிச்சா அவளை நீங்க கட்டியிருப்பீங்க இல்ல?”

‘‘எதைச் சொன்னாலும் இப்படி ஏடாகூடமாய் பேசினா எப்படி? முதல்ல இதெல்லாம் உனக்கு யார் சொன்னது? அதைச் சொல்லு...”

“அந்த அளவுக்கு மேனர்ஸ் இல்லாதவளா நான்?”

‘‘மேனர்ஸா? அப்படின்னா என்ன பிரியா? அடுத்தவங்களைப் பத்தி அவங்களுக்கே தெரியாம பேசுறது, விசாரிக்கிறது, அதை நம்புறது இதுதான் மேனர்ஸா?”

‘‘ஹரி...’’ குரலை உயர்த்தினாள் பிரியவதனா. அவனும் கோபமாகவே பேசினான்.

“யாரோ சொன்னதை நம்புவ? ஆனா என்னை நம்பமாட்டே.”

“உங்க மேல நம்பிக்கை இருக்கு. ஆனா அவமேல இல்லை.”

“இதுல அவளை ஏன் இழுக்கிற?”

“சம்பந்தப்பட்டவ அவதானே?”

“கயல் என்ன பண்ணினாள்?”

“இன்னொருத்திக்கு நிச்சயம் பண்ணின ஒருத்தன் பின்னாடி சுத்துறாளே... இது தப்பில்ல.”

‘‘முட்டாள் மாதிரி பேசாதே பிரியா. நான்தான் அவளைக் கூட்டிட்டு வந்தேன். அதுவும் அவளுக்கு எடுக்கிற புடவையை அவளே செலக்ட் பண்ணட்டும்னுதான்.”

‘‘இந்தக் கதையெல்லாம் எங்கிட்ட விடாதீங்க. நான் பார்த்தேன். அவ கண்ணுல உள்ள ஆசையைப் பார்த்தேன். உங்க கூட நடந்து வந்த தோரணையில என்னவோ உலகத்தையே வென்ற மாதிரி ஒரு பார்வை. ஒரு கனவு. நான் அதைப் பார்த்தேன்.”

“உளறாதே.”

‘‘உண்மை. நீங்க அவளை விரும்புனீங்களோ இல்லையோ, பட் அவ உங்களை விரும்புறா.”

“நோ.”

“யெஸ்.”

“இதெல்லாம் உன்னோட யூகம். அவ எங்கிட்ட ஒருநாளும் அப்படி நடந்துக்கல. சின்னத்தான்ற வார்த்தையைத் தவிர வேறு

## அபூர்வமான இரவுக் கிளிகள்!

உலகில் எத்தனையோ அரிய வகை பறவை இனங்கள் உள்ளன. அந்த வகையில் ஆஸ்திரேலிய காடுகளில் 100 ஆண்டுகளுக்கு முந்தைய அரிய வகை பறவை இனமான இரவுக் கிளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பெருகி வரும் சுற்றுச்சூழல் சீர்கேட்டால் உலகின் பலவகை உயிரினங்களும் அழிந்து வரும் வேளையில் 100 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இந்த அரிய வகை இரவுக் கிளிகள் அழிந்து விட்டதாகவே இதுவரை கருதப்பட்டு வந்தது. ஆஸ்திரேலிய காடுகளில் வனவிலங்குகள் மற்றும் பறவைகள் பற்றிய



ஆராய்ச்சியில் ஈடுபட்ட ஜோன் யங் என்ற இயற்கை வல்லுநர் இந்த இரவுக் கிளிகள் உயிருடன் இருப்பதற்கான ஆதாரங்களை வெளியிட்டுள்ளார்.

இவர் 15 ஆண்டுகளுக்கு மேலாக இரவுக் கிளிகள் பற்றிய தேடலில் ஈடுபட்டார். இதற்காகவே ஆஸ்திரேலியாவின் அடர்ந்த காடுகளில் சுற்றித் திரிந்தார். இதன் ஒரு பகுதியாக 2007-ம் ஆண்டு இரவுக் கிளிகளின் குரல்கள் காட்டில் வைக்கப்பட்டிருந்த ஒலிப்பதிவு கருவியில் பதிவாகி இருந்தன. இதையடுத்து ஜோன் யங்கிற்கு புதிய நம்பிக்கை ஏற்பட்டது.

இரவுக்கிளிகளை படம் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அவரது அயராத உழைப்பிற்கு பலன் கிடைத்தது. அடர்ந்த காட்டுப்பகுதியில் அவர் வைத்திருந்த ஒளிப்பதிவு கருவிகளில் இந்த அரிய வகை கிளிகளின் படங்கள் பதிவாகின.

காதல் கிளிகள், பச்சை வண்ணக் கிளிகள், பஞ்சவர்ண கிளிகள் என்று எத்தனையோ கிளிகள் பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம். இந்த இரவுக் கிளிகளைப் பற்றி இப்போது நாம் கேள்விப்படும் போது ஆச்சரியமாகவே இருக்கிறது.

எதுவும் பேசினதில்ல.''

''என் வார்த்தையில நம்பிக்கை இல்லேன்னா அவகிட்டயே உங்களை விரும்புறாளான்னு கேட்டுப் பாருங்க.''

''உனக்கென்ன புத்தி கெட்டுப் போச்சா? இன்னும் ஒன் மன்த்ல மேரேஜ்ஜ வெச்சிகிட்டு இப்பப்போய் இன்னொரு பொண்ணுகிட்ட நீ என்னை விரும்புறியா இல்லையான்னு கேட்கச் சொல்றியே? உனக்கே இது அபத்தமாப் படல?''

''நீங்க எவ்வளவு கோபப்பட்டாலும் உண்மை இதுதான் ஹரி.''

''ஓ.கே. இப்ப கடைசியா என்னதான் சொல்ற?''

''முதல்ல சொன்னதுதான். அவளை இன்னிக்கே ஊருக்கு அனுப்பினால் குறிச்ச டேட்ல எங்கேஜ்மெண்ட் நடக்கும். இல்லேன்னா...''

''இல்லேன்னா...''

''எல்லாத்தையும் ட்ராப் பண்ண வேண்டியதிருக்கும். எங்க அப்பா எனக்கு வேற மாப்பிள்ளை பார்க்க வேண்டியதிருக்கும்.'' பிரியவதனா எந்த பாதிப்பும் இன்றி வெகு அலட்சியமாய்ச் சொல்ல, ஹரிஹரன் விறைப்பாய் நிமிர்ந்தான்.

''இதுதான் உன்னோட முடிவா?''

''யெஸ்.''

''ஓ.கே. ரொம்ப தேங்க்ஸ். நான் கிளம்புறேன்.''

''பதில் சொல்லிட்டுப் போங்க.''

''அதான் சொன்னேனே... ரொம்ப தேங்க்ஸ்னு.''

''ஹரி...'' புரியாமல் விழித்தாள்.

''உன்னைப் பத்தி கல்யாணத்துக்கு முன்னயே தெரிஞ்சதுக்கு ரொம்ப நன்றி. இல்லேன்னா என் லைப் புதைகுழியில சிக்கிகிட்ட சிங்கம் மாதிரி ஆயிருக்கும்.''

''ஹரி!''

''லுக்! கல்யாணம்றது நீயா நானான்னு போட்டிபோடுற விவாத மேடையில்லை. அது ஒரு அழகான பந்தம். எனக்கு நீ, உனக்கு நான்னு மனமொத்து வாழுற பந்தம். ஒருத்தர் மேல ஒருத்தர் எவ்வளவு அன்பு வெக்கிறோமோ அதே அளவு நம்பிக்கையும் வைக்கணும். அப்பத்தான் அந்த வாழ்க்கை இனிக்கும். உனக்கு எம்மேல உள்ள நம்பிக்கை எப்ப மறைஞ்சதோ அப்பவே நம்ம கல்யாணப் பேச்சு முடிஞ்சு போச்சு. இதுல எனக்கு எந்த வருத்தமும்

இல்ல. உன்னைப் பத்தி புரிஞ்சுக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்ததுக்கு நான் கயலுக்குத்தான் நன்றி சொல்லணும்."

"அப்போ... அவளுக்காக என்னையே தூக்கியெறிஞ்சிடுவீங்களா?"

''தூக்கியெறிஞ்சது நீ. நான் சுதாரிச்சுகிட்டேன்."

''ஹரி! இப்பவும் நான் உங்களை சந்தேகப்படல. அந்தப் பொண்ணு உங்க மேல..."

"ஸாரி! நமக்குள்ள எல்லாம் முறிஞ்சு போனபிறகு என் அத்தை மகளைப் பற்றி பேச உனக்கு எந்த ரைட்ஸும் கிடையாது."

"ஹரி?"

''நல்லவேளை... எந்த நிகழ்ச்சியும் நடக்கல. அதனால நீ உங்க அப்பாகிட்ட சொல்லி தாராளமா இன்னொரு மாப்பிள்ளை தேடிக்கலாம். எனக்குன்னு பொறந்தவளை நான் தேடிக்கிறேன். ஓ.கே. குட்பை.'' ஹரிஹரன் நடக்கத் துவங்க, பிரியவதனா பதறியவாறே ஊஞ்சலை விட்டு இறங்கினாள்.

''அவசரப்படாதீங்க ஹரி. நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்க'' என அவன் பின்னே ஓடிவர, அதைக் காதில் வாங்காமல் படிக்கட்டை அடைந்து மளமளவென இறங்கத் துவங்கினான்.

''நான் என்ன பண்றது ஹரி. உங்க நெருக்கத்தைப் பார்த்துட்டு உங்க அண்ணியே சொல்லும்போது நான் எப்படி நம்பாம இருக்க முடியும்?'' பிரியவதனா சத்தமாய்க் கேட்க, ஹரிஹரனின் நடை தடைபட்டது.

''ஆமா ஹரி! உங்க அண்ணிதான் சொன்னாங்க. இப்பக்கூட அந்தப் பொண்ணு உங்களைக் கட்டிக்கணும்னு ஆசைப்பட்டுத்தான் உங்க வீட்டுக்கு வந்திருக்காளாம்."

''இதையும் அண்ணிதான் சொன்னாங்களா?"

"ஆ...மா."

''சரி'' என்றவன் மீண்டும் இறங்கத் துவங்க, பதறிக் குரல் கொடுத்தாள்.

"என்ன ஹரி! எதுவுமே சொல்லாமப் போறீங்க?"

"என்ன சொல்லணும்?"

"எம்மேல எந்தத் தப்பும் இல்லையே. உங்க அண்ணி சொன்னதை வெச்சுத்தான்... நான்..."

"அவங்க சொன்னா நீ நம்பிடுவியா?"

"ஹ..ரி..."

"இப்பவே அடுத்தவங்க சொன்னதைக் கேட்டு என்னை இவ்வளவு டார்ச்சர் பண்றியே... நாளைக்கு கல்யாணமான பிறகு என்னென்ன பேசுவ?"

"இல்ல ஹரி..."

"நின்னாக் குற்றம், உட்கார்ந்தா குற்றம், தும்மினாக் குற்றம்ன்னு என்னை கேள்வி கேட்டே கொல்லுவியே. போதும்டா சாமி. உனக்கு ஒரு கும்பிடு. உன் குடும்பத்துக்கு ஒரு கும்பிடு."

"ஹரி! நான் சொல்றதைக் கொஞ்சம்..."

"நோ... சந்தேகம்றது ஒரு விஷ விருட்சம். அது உம்மனசில வந்தபிறகு உன்னையும் வாழ விடாது. என்னையும் வாழ விடாது. ஸோ! நீ உனக்கேத்த லைப்பை அமைச்சுக்க. என்னை விட்டுடு'' என்றவன் அதற்கு மேல் நில்லாமல் விடுவிடுவென இறங்கிப் போயே விட்டான்.

அதற்கு மேலும் அவனிடம் கெஞ்சுவதற்கு தனது தன்மானம் இடம் தராததால் பற்களைக் கடித்தவாறே மேலே நின்று கொண்டாள் பிரியவதனா.

படிக்கட்டில் இறங்கி வந்தவனை ஆவலாய் எதிர்கொண்டார் பிரியவதனாவின் தந்தை.

"என்ன தம்பி! பேசிட்டீங்களா?"

"ம்."

"பிரியா என்ன சொன்னாள்?"

''அவ மனசுல என்ன இருக்குதோ அதைச் சொன்னாள்."

"வந்து... நீங்க என்ன தம்பி சொன்னீங்க?"

''அதை உங்க பொண்ணுகிட்டயே கேளுங்க'' என்றவாறு நடக்க முயன்றவனை வேகமாய்த் தடுத்தார்.

"நில்லுங்க தம்பி! என்ன ஒரு மாதிரி... பேசுறீங்க?"

"ஸாரி ஸார்! எனக்கு நிறைய வேலை இருக்கு. ஒவ்வொருத்தர்கிட்டயும் நின்னு பதில் சொல்லிட்டு இருக்க முடியாது. என்ன பேசணுமோ அதை உங்க பொண்ணுகிட்ட பேசிட்டேன். நீங்க என்ன கேட்கணுமோ அதை அவகிட்டயே கேட்டுக்கங்க. அப்புறம் ஒரு விஷயம்! இனி எதற்காகவும் எங்க வீட்டுப்பக்கம் நீங்கள் வந்துவிட வேண்டாம். இனி நமக்குள் எதுவுமே இல்லை'' நிறுத்தி நிதானமாய் சொல்லிவிட்டு விடுவிடுவென வெளியேறினான்.

## 8

இடி இடித்து பெருமழை பொழிந்து ஓய்ந்ததைப் போல் இருந்தது. பதினைந்து வருடங்களாய் தனக்குள் புதைத்து வைத்திருந்த நேசத்தை சுதாகரனிடம் மொத்தமாய்க் கொட்டித் தீர்த்ததில் கயல்விழியின் முகம் சோகத்தையும் கண்ணீரையும் துடைத்து வெண்பளிங்காய் மின்னியது.

மொத்தக் கண்ணீரும் வெளியேறி இருந்ததில் முகம் தெளிவாய் இருக்க, குரலும் பிசிறின்றி ஒலித்தது. அவள் பேசியவற்றைக் கேட்டு பிரமித்துப் போய் நின்றான் சுதாகரன்.

சாலையில் சென்ற வாகனங்களின் ஓசையைத் தவிர காருக்குள் வெகு அமைதி. சுதாகரன் வியப்பாய் கேட்டான்.

"ஏம்மா! உம்மனசுக்குள்ள இவ்வளவு ஆசையை வெச்சிகிட்டு எப்படி எங்க வீட்ல உன்னால அமைதியா இருக்க முடிஞ்சது?"

"அத்தான்?"





''ஹரியை பார்க்க பேச எவ்வளவோ சந்தர்ப்பம் கிடைச்சிருக்குமே. ஏன்? இன்னிக்குக் கூட நாங்க எல்லாரும் வெளியே போன பிறகுதானே ஹரி வந்தான்?''

"ஆமா."

''அப்போ அவன்கிட்ட பேசியிருக்கலாமே."

''எப்படி பெரியத்தான்? என்னால... எப்படி சொல்ல முடியும்?''

"ஏன்?"

''இப்ப அவர் இன்னொரு பொண்ணுக்காக நிச்சயிக்கப்பட்ட மாப்பிள்ளை."

''அட என்னம்மா நீ? இது அம்மா அப்பா பார்த்த வரன். ஜஸ்ட் பொண்ணு மட்டும்தான் பார்த்திருந்தோம். மத்தபடி எந்த முடிவும் எடுத்துடலை."

''நிச்சயத்துக்கு நாள் குறிச்சாச்சே பெரியத்தான்?''

''ம்ப்ச்! அது ஒரு பெரிய விஷயமா? இதோ இப்பக்கூட ஹரியை பொண்ணு வீட்ல போய் பேசச் சொல்லியிருக்கேன். அவங்க ஒத்துக்கலன்னா நிச்சயதார்த்தம் தானா நின்னுடப் போகுது."

''ஐயோ! வேண்டாம் பெரியத்தான். அப்படியெல்லாம் சொல்லாதீங்க. சின்னத்தானுக்கு அந்தப் பொண்ணை ரொம்பப் பிடிச்சிருக்கு. அவர் மனசுபோல வாழட்டும்."

"கயல்..."

"மனசுக்கு பிடிச்ச துணை கிடைக்கிறது பெரிய விஷயம் அத்தான். அந்தத் துணை கிடைக்காமப் போனா மனசு எப்படி

வலிக்கும்னு அனுபவப்பூர்வமா உணர்ந்தவ நான். அந்த வலி அவருக்கு வரக் கூடாது. நான் போனாத்தான் நிச்சயதார்த்தம் நடக்கும்னு அந்தப் பொண்ணு சொல்லிச்சி. அதுக்காகத்தான் நான் கிளம்பினேன். நான் போயிட்டேன்னு தெரிஞ்சதும் அந்தப் பொண்ணோட கோபமெல்லாம் போயிருக்கும்."

"கயல்! அப்போ... ஹரிகிட்ட இதைப்பத்தி பேச வேண்டாமா?"

''வேண்டாம் அத்தான். காலம் கடந்து சொல்லி என்ன ஆகப் போகுது. அத்தானோட மனசை ஏன் கலங்க வெக்கணும். நான் உங்ககிட்ட சொன்னது உங்களோடயே இருக்கட்டும்."

"ம்."

''காரை எடுங்க அத்தான். என்னை விட்டுட்டு நீங்க ஊர் திரும்பணுமில்ல. வீட்ல கல்யாண வேலை இருக்கே" கயல்விழி இயல்பாய் சொல்ல, நீண்ட பெருமூச்சோடு வண்டியை உசுப்பினான் சுதாகரன்.

''இவ்வளவு ஆசையை மனசில வெச்சிகிட்டு அவன்கிட்ட ஒரு வார்த்தை சொல்லாம இப்படி உன்னையே தண்டிச்சிட்டு இருக்கியே."

''சொல்லியிருக்கலாம் அத்தான். இதை எப்போதோ சொல்லியிருக்கணும். ஆனால் சொல்வதற்கு வாய்ப்பே கிடைக்கவில்லையே."

''நாங்க ஊருக்கு வரும்போது சொல்லியிருக்கலாமே"

''முதல்ல அக்காவோட கல்யாணம் முடியட்டும்னு சொல்லாம இருந்தேன். அக்காவை உங்களுக்கு முடிக்கணும்னு ரொம்ப ஆசை அம்மாவுக்கு."

சுதாகரன் மவுனமானான்.

அவனும் அறிந்ததுதான். அதுவரை வருடம் ஒருமுறை ஊருக்கு வருபவர்களின் வருகை அதன்பின்தானே நின்று போனது. அத்தையின் ஆசையைக் குற்றம் சொல்ல முடியாது.

தன் அண்ணன் மகனுக்கே பெண்ணைக் கொடுத்துவிட்டால் ஒன்றுக்குள் ஒன்றாய் இருக்கலாம். பெண்ணைப் பற்றி கவலையின்றி வாழலாம் என நினைத்திருப்பார்கள்.

ஆனால் அம்மா பலமாய் மறுத்ததோடு அவசரம் அவசரமாய் சுமித்ராவை மணமுடித்து வைத்துவிட்டாளே. அனைத்தையும் அறிந்தவன் என்பதால் மவுனமாய் தலையை மட்டும் ஆட்டினான்.

''அக்காவை அத்தை மறுத்தப்பவே எனக்கு பாதி உசிர் போயிடுச்சி. அக்கா என்னைவிட அழகு. ரொம்ப பொறுப்பானவ. அமைதியானவ. அவளையே வேணாம்னு சொன்ன அத்தை என்னை மட்டும் எப்படி ஏத்துக்குவாங்கன்னு ரொம்ப பயம்."

"உண்மைதான்..."

"அக்காவுக்கு உங்க மேலே ரொம்பப் பிரியம் அத்தான். ஆனா அது கைகூடாமப் போச்சு. எங்கேயோ தேடிப்பிடிச்சு ஒரு வழியா கல்யாணம் பண்ணி வெச்சாங்க. ஆனா அக்கா சந்தோஷமா வாழல அத்தான். அவ விடுற கண்ணீரை நான் பார்த்தே வளர்ந்தேன். அக்கா என்னைப் பார்க்கும் போதெல்லாம் சொல்வாள்."

"எ...என்ன சொல்வா?"

"மனசில எந்த ஆசையும் வளர்த்துக்காதே கயல். நினைச்ச புருஷன் கிடைக்கலன்னா வாழ்க்கையே நரகமாகிடும்னு சொல்வாள்."

சுதாகரனின் கண்களும் கலங்கியது. மனத்திரையில் சிரித்த முகமாய் பூங்குழலி வந்து போனாள்.

''அதனால என் பிரியம் யாருக்கும் தெரியாமலே மனசுக்குள்ளயே புதைஞ்சுப் போச்சு. என் அம்மாகிட்ட கூட சொல்லல. சின்னத்தான் கல்யாணம் முடிவானதும் மாமா வந்து சொன்னப்ப என் மீதி உசிரும் போயிடுச்சு. சரி! அத்தானோட நினைப்பு மட்டும் போதும்னு இருந்தப்பத்தான் அத்தைக்கு உடம்பு முடியலன்னு மாமா வந்து கூப்பிட்டாங்க. என்னால மறுக்க முடியல. கடைசியா ஒருமுறை அத்தானை ஆசைதீர பார்த்துக்கலாம்னு ஆசைப்பட்டுத்தான் வந்தேன். அதுக்குக்கூட எனக்கு கொடுப்பினை இல்லை போலிருக்கு. பாதியில திரும்பிட்டேன். இந்த நிலையில எம்மனசை எப்படிச் சொல்ல முடியும்?" வேதனையாய் கண்களை மூடிக் கொண்டாள் கயல்விழி.

மூடிய விழிகளில் இருந்து சூடாய் நீர் வழிந்தது. கார் சீரான வேகத்தில் போய்க் கொண்டிருக்க, சுதாகரனின் மனம் வேகமாய் சிந்தித்தது.

'இல்லை! இதை இப்படியே விட்டு விடக் கூடாது. இவளது மனதைப் பற்றி ஹரியிடம் சொல்ல வேண்டும்.'

இந்திரா தன் படுக்கை அறையில் நிலைகொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தாள். கயல்விழி அழுது கொண்டே வெளியேறிய கோபத்தில்

காளிதாஸ் அலுவலகத்திற்கு போய்விட, கணவனின் பாராமுகம் மனதை வருத்தியது.

காலையில் இருந்தே நிகழ்ந்த நிகழ்வுகள் அவளை வெகுவாய் களைப்படைய வைத்தது. சூடாய் ஏதாவது குடிக்க வேண்டும் போலிருந்தது. படுக்கையை விட்டு எழ முடியவில்லை.

ருக்மணி இன்று விடுமுறை எடுத்திருப்பதை மறந்து குரல் கொடுத்தாள்.

“ருக்கு! ருக்கு”

பதிலில்லை.

‘ச்சே! இன்னிக்கு லீவு கேட்டாளே! இந்த உமாப் பெண் எங்கே போய்விட்டாள்?’
“உமா! உமா!”

இப்போதும் பதிலில்லை. மாடியறையில் சத்தமாய் தொலைக்காட்சி ஓடிக் கொண்டிருந்தது. எப்படி அழைத்தாலும் தன் குரல் வெளியே கேட்கப் போவதில்லை என்று உணர்ந்தவளாய் எழ முயற்சித்தாள்.

முடியாமல் உடல் தள்ளாடியது. காலையில் போட வேண்டிய மாத்திரையை போடாதது நினைவு வர, கட்டிலில் புரண்டு மேஜையை நெருங்கினாள். மாத்திரையை எடுத்துக் கொண்டு தண்ணீரைத் தேட, வாட்டர் ஜக் காலியாக இருந்தது.

மனம் நொந்து போனாள். உடல் வெடவெட என ஆடியது. நெஞ்சை அடைப்பது போல் இருக்க உடலெல்லாம் வியர்த்தது. நாவறண்டு போக, நாவால் உதட்டை ஈரப்படுத்திக் கொண்டாள்.

மனம் தானாய் கயல்விழியைத் தேடியது. விடிந்தது முதல் தனக்கு என்னென்ன வேண்டும் என்று கவனித்து அவ்வப்போது சூடாய் ஏதாவது சாப்பிடக் கொடுத்து, மாத்திரைகளைக் கொடுத்து அவள் கவனித்த விதம் மனதிலாடியது.

நான்கே நாட்கள்தான். ஆனால் தன்னுடைய உணவு முறைகள், மாத்திரை வகைகள் என அனைத்தையும் கவனமாய் கேட்டுக் கொண்டு அவள் செய்த சேவை

## வைரத்தோடை விழுங்கிய கோழி; கொல்ல மனம் இல்லாத எஜமானி!

இங்கிலாந்தில் பெர்ஷயர் பகுதியில் வசிப்பவர் கிளாரி லெனான் (வயது 38). இவர் தனது வீட்டில் செல்லமாக கோழி ஒன்றை வளர்த்து வருகிறார். இதற்கு சாரா என்ற பெயர் வைத்துள்ளார். எந்தநேரம் பார்த்தாலும் இந்த கோழியை தோளில் வைத்துக் கொண்டு வீட்டுக்குள்ளேயே சுற்றிக் கொண்டிருப்பார். ஒருநாள் திடீரென்று கிளாரியின் காதில் இருந்த வைரத் தோடை இந்த கோழி கொத்தி விழுங்கிவிட்டது. எதிர்பாராத விதமாக அந்த வைரத் தோடு அதன் தொண்டையில் சிக்கிக் கொண்டது.



இந்த தோடு கிளாரிக்கு அவரது காதலர் ஆடம் என்பவரால் காதல் பரிசாக வழங்கியதாகும். இதனால் கோழியை கிளாரி டாக்டரிடம் கொண்டு சென்றார். எக்ஸ்ரே எடுத்து பார்த்தபோது கோழியின் வயிற்றில் தோடு சிக்கி இருந்தது உறுதி செய்யப்பட்டது.

சிக்கலான பகுதியில் தோடு இருந்ததால் அதை ஆபரேஷன் மூலம் வெளியில் எடுக்க முடியாது என்று டாக்டர்கள் தெரிவித்து விட்டனர். கோழியின் இரண்டாவது இரைப்பையில் சிக்கியுள்ள வைரத் தோடை ஆபரேஷன் மூலம் அகற்றுவது கடினம் என்பதால் அப்படியே விட்டு விட்டனர். ஆபரேஷன் செய்தாலும் கோழியின் உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்றும், தோடு கோழியின் வயிற்றுக்குள்ளேயே இருந்தால் அதன் உயிருக்கு எந்த ஆபத்தும் வராது என்றும் தெரிவித்துவிட்டனர். இதனால் கிளாரியும் கோழியுடன் வீடு திரும்பிவிட்டார். வைரத் தோடுக்காக கோழியை கொல்ல அவருக்கு மனம் இல்லை. அதிகபட்சமாக இன்னும் 8 ஆண்டுகள் வரை கோழி உயிர் வாழும் என்பதால் அதுவரை காத்திருப்பது என்ற முடிவுக்கு வந்துவிட்டார் கிளாரி.

கோழியின் மீது இவ்வளவு இரக்கமும் பாசமும் வைத்துள்ள கிளாரியை பாராட்டாமல் இருக்க முடியாது!

மனதை அழுத்தியது.

'ஐயோ! அந்த சிறுபெண்ணை கண்ணீரோடு விரட்டி விட்டேனே! இன்று தண்ணீர் தரக்கூட ஆளின்றி தவிக்கின்றேனே! இறைவா!'

"உமா! உமா! சுமி! உமா" தொடர்ச்சியாய் குரல் கொடுத்து ஓய்ந்து கண்கள் செருகிய போது அறைக்கதவு திறக்கப்பட்டது.

கணவனைக் கண்டதும் நிம்மதியாய் கண்களை மூட, "இந்திரா" என ஓடி வந்து அவளைத் தூக்கினார் காளிதாஸ்.

"இந்திரா! என்னம்மா ஆச்சு? இந்திரா! கண்ணைத் திறந்து பாரு'' அவளது கன்னத்தைத் தட்டினார். சிரமமாய்க் கண்களைத் திறந்தாள்.

"எ..ன்..னங்க! த..தண்...ணீ.. த...ண்..."

"இதோ... இதோ எடுத்திட்டு வர்றேன்." மனைவியை படுக்கையில் கிடத்திவிட்டு, வெளியே ஓடிச் சென்று நீரை எடுத்து வந்து மனைவிக்கு புகட்டினார்.

இந்திரா கையிலிருந்த மாத்திரையைக் காட்ட, அவற்றை ஒவ்வொன்றாய் அவளது வாயிலிட்டு நீரை சிறிதுசிறிதாய் ஊற்றினார். செம்பு நீர் முழுவதையும் குடித்து விட்டு களைப்பாய் கண்களை மூடிக் கொண்டாள் இந்திரா.

டவலால் அவளது முகத்தை ஒற்றியெடுத்து அவளை நேராய் படுக்க வைத்தார். பேனை சுழல விட்டு மனைவியின் அருகே அமர்ந்தார். மாடியில் தொலைக்காட்சியின் ஓசை அதிகரிக்கவே எரிச்சலோடு எழுந்து வெளியே வந்தார்.

"சுமித்ரா! சுமித்ரா."

"என்ன மாமா?" மாடியிலிருந்து எட்டிப் பார்த்தாள்.

''எல்லோரும் எங்கே போனீங்க? அத்தை இங்கே எவ்வளவு கஷ்டப்பட்டுட்டு இருக்கா? யாருக்காவது பார்க்கணும்னு தோணுதா?"

"என்னாச்சி மாமா?"

"முதல்ல அந்த இழவு டி.வி.யை ஆப் பண்ணு. காதைப் பொளக்குது."

மாமனாரின் கோபத்தில் முகம் கறுத்தது. வேகமாய் கீழே இறங்கி வந்தாள்.

"ஏன் மாமா? நான் வீட்ல இருக்கிறதே என்னிக்கோ ஒருநாள்தான். அப்பக்கூட டி.வி. பார்க்கக் கூடாதா?"

''பாரும்மா! உன்னை யார் வேண்டாம்னது? அத்தை உடம்புக்கு முடியல. படுக்கிறேன்னு போனாளே. என்ன ஏதுன்னு பார்க்க வேண்டாமா? ஒரு காபித் தண்ணி வெச்சு கொடுக்கலாமில்ல?"

"இந்த வேலையெல்லாம் ருக்மணி செய்யணும்."

"நீ யாரும்மா?"

"மாமா."

''நீ எங்க மருமகதானே. எங்களை கவனிச்சுக்க வேண்டிய கடமை உனக்கு இல்லையா?"

"க்கும். பொல்லாத கடமை. நிம்மதியா ஒருநாள் வீட்ல உட்கார்ந்து ஒரு படம் பார்க்க முடியல. பாட்டுக் கேட்க முடியல. நோயாளி மாமியாரைக் கட்டிகிட்டு அழ நான் என்ன நர்ஸா? இல்ல இந்த வீட்டு வேலைக்காரியா?"

''சுமித்ரா?'' காளிதாஸ் திகைத்துப் போனார். மருமகள் இப்படிப் பேசி அவர் கேட்டதில்லை.

"அத்தைக்கு ஓடி ஓடி சேவகம் பண்ண இங்கே நாலு நாளா ஒருத்தி இருந்தாளே. அவதான் லாயக்கு. என்னால எல்லாம் இப்படி சேவகம் பண்ண முடியாது"

முகத்தைத் திருப்பிக் கொண்டு போனவளைக் கண்டு திகைப்பாய் மனைவியின் புறமாய் திரும்ப, படுக்கையில் படுத்திருந்த இந்திராவின் கண்களில் நீர் வழிந்தது.

''தப்பு பண்ணிட்டேன்! தப்பு பண்ணிட்டேன்'' என அரற்றிக் கொண்டிருந்த மனைவியிடம் ஓடினார்.

## 9

**ஹ**ரிஹரன் சோர்வாய் களைப்பாய் வீட்டிற்குள் நுழைந்தபோது இரவாகி விட்டிருந்தது. பிரியாவைச் சந்தித்த பிறகு நேராக வீட்டிற்குச் சென்றால் சுமித்ராவிடம் கோபத்தை கொட்டி விடக் கூடும் என்ற அச்சத்தில் கடற்கரைக்குச் சென்று கால்வலிக்கும் அளவிற்கு நடந்து கொண்டே இருந்தான்.

இருட்டத் துவங்கியபிறகே வீடும் கயல்விழியும் வீட்டில் நடந்த களேபரமும் நினைவுக்கு வர வீட்டிற்கு கிளம்பினான். வீட்டிற்குள் நுழைந்து ஹாலில் கிடந்த சோபாவில் சாய்ந்தமர்ந்து கண்களை மூடிக் கொண்டான்.

கடற்கரைக் காற்றில் வெகுநேரம் நின்றதில் தலையை வலித்தது. சூடாய் காபி குடிக்கலாம் எனத் தோன்ற கண்களை

மூடியவாறே ருக்மணியை அழைத்தான்.

"ருக்மணிம்மா."

"ருக்கு இன்னிக்கு லீவு" சுமித்ராவிடமிருந்து பதில் வர, கடுப்பாய் தாயை அழைத்தான்.

"அம்மா! அம்ம்மா..."

"அத்தை வீட்ல இல்ல."

"உமா!"

''அத்தைக்கு உடம்புக்கு முடியல. மாமாவும் உமாவும் ஹாஸ்பிடலுக்குக் கூட்டிட்டு போயிருக்காங்க'' என்றதும் சட்டென கண்களைத் திறந்தான்.

டைனிங் டேபிளில் அமர்ந்து தகப்பனும் மகளும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். கடமைக்காக பதிலைச் சொல்லிவிட்டு தந்தைக்கு பரிமாறியபடியே கேட்டாள் சுமித்ரா.

"சாப்பிடுறீங்களா?"

"கயல்! கயல்!"

''சித்தப்பா! அந்த அக்கா இங்கே இல்ல...'' சுதாகரனின் குழந்தை டிராயிங் நோட்டில் எதையோ வரைந்து கொண்டே குரல் கொடுக்க, எழுந்து அதனருகே சென்றான்.

"குட்டிம்மா! என்னடா சொல்ற?"

"உனக்குத் தெரியாதா சித்தப்பா?"

"என்னடாக் கண்ணு?"

"நம்ம வீட்ல ஒரே சண்டை. கயலக்கா ரொம்ப அழுதாங்க. அப்புறமா... பெட்டியெல்லாம் தூக்கிட்டு ஊருக்குப் போயிட்டாங்க..." அது மழலை மொழியில் சொல்ல, திடுக்கிட்டான் ஹரிஹரன்.

"எ..ன்..ன?"

"ஆமா சித்தப்பா. பாவம் அந்த அக்கா."

"எப்டி? எப்படிப் போனாள்?"

"அப்பாதான் கூட்டிட்டு போனாங்க... அப்புறம்..." என ஏதோ துவங்க, எச்சில் கையோடு எழுந்து வந்தாள் சுமித்ரா.

"ஏய்! உன்னை ஹோம் வொர்க்தானே பண்ணச் சொன்னேன். என்ன பண்ணிட்டு இருக்கே?"

"ஹோம் வொர்க்தான் பண்றேன்."

"பிறகென்ன பேச்சு? ஒழுங்கா வரை. நான் சாப்பிட்டு வர்றதுக்குள்ள வரைஞ்சி முடிச்சிருக்கணும். இல்லே தோலை உரிச்சிடுவேன்."

"ஒரு நிமிஷம் அண்ணி" ஹரிஹரனின் அழுத்தமான குரலில் நின்றாள்.

''கயல் எங்கே?''

''என்னைக் கேட்டா? எனக்கென்ன தெரியும்? யார் வர்றாங்க, யார் போறாங்கன்னு நான் என்ன கணக்கா எடுத்திட்டு இருக்கேன்?''

"வேணாம் அண்ணி! என் பொறுமையை சோதிக்காதீங்க."

''இதென்ன வம்பாப் போச்சு? தாலிகட்டின புருஷனே என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லாம போறார்... வர்றார். இந்த வீட்ல யார் என்னை மதிக்கிறா. கட்டினவனே சொல்லாம போனா ஒண்ட வந்தவளா சொல்லிட்டு போவாள்?''

"அப்போ... உங்களுக்குத் தெரியாது?"

"தெரியாது?"

''ஆனா ஏன் போனான்னு தெரிஞ்சிருக்குமே.''

"எ..ன்ன?"

''அவளை இந்த வீட்டை விட்டு அனுப்பணும்னு ரொம்ப மெனக்கெட்டு நிறைய வேலை செய்திருக்கீங்க போலிருக்கு?'' தீவிரமாய் கேட்டவனைக் கண்டு லேசாய் முகம் மாறினாள் சுமித்ரா. அதற்குள் நாகராஜனும் சாப்பிட்டு முடித்து எழுந்துவர, இருவரையும் பார்த்தான் ஹரிஹரன்.

"ஏன் அண்ணி! நீங்க இந்த வீட்டுக்கு மருமகளா வந்து பத்து வருஷம் ஆச்சு. இதுவரை என்னிக்காவது ஒரு வார்த்தை உங்களை மரியாதை குறைவா பேசியிருக்கேனா? உங்கள மதிக்காம நடந்திருக்கேனா?"

"இ..இல்ல..."

''அன்னிக்கு உங்க அப்பா கயலை வார்த்தைக்கு வார்த்தை வேலைக்காரின்னு அலட்சியமா பேசினதுக்காக கொஞ்சம் கோபப்பட்டுட்டேன். அப்பக்கூட உங்களை நான் எதுவும் வார்த்தை கடத்தி பேசலையே. அப்புறம் ஏன் அண்ணி உங்களுக்கு இவ்வளவு ஆத்திரம்? யார்மேல இவ்வளவு கோபம்? எம்மேலயா இல்ல கயல் மேலயா? சொல்லுங்க அண்ணி...''

''எ..எனக்கு... யார் மேலயும் எந்தக் கோபமும் இல்ல...''

''பொய்! உங்களுக்கு எம்மேல கோபம்... கயல்மேல ஆத்திரம்... அதான் அதை எங்ககிட்ட நேரடியாக் காட்ட முடியாம பிரியாகிட்ட போய் இவ்வளவு கேவலமா பிஹேவ் பண்ணியிருக்கீங்க? உங்க புத்தியில் எப்படி இந்த மோசமான எண்ணமெல்லாம்...''

''தம்பி! கொஞ்சம் மரியாதையா

அம்மாவைக் காக்க வந்த தெய்வப்பிறவி! இந்த வீட்டு மருமகளா இருந்து நீங்க செய்யத் தவறிய கடமைகளைச் செய்த ஒரு புண்ணியவதி. இத்தனை வருஷத்தில ஒரு நாளாவது எங்க அம்மாவுக்கு ஒரு வேளை சாப்பாடு தந்திருப்பீங்களா? ஒரு டம்ளர் சுடுதண்ணீர் போட்டு கொடுத்திருப்பீங்களா? ஆனா அவ செய்தாளே. இந்த வீட்டு கிச்சனையே தன்னோட உலகமா ஏத்துக்கிட்டு உங்க எல்லாருக்கும் ஆக்கிப் போட்டாளே. என் அம்மாவை ஒரு வேலை செய்யவிடாம பசியில வாடாம ஒரு தாயா ஒரு தெய்வமா இருந்து பார்த்தாளே! நீங்க செய்வீங்களா?"

''ஏன்? அவளைப் பத்தி இவ்வளவு பெருமையா பேசுறீங்களே! பேசாம அவளையே கல்யாணம் பண்ணி கூட்டிட்டு வாங்களேன். காலம்பூரா உங்க அம்மாவோட காலடியில சேவகம் பண்ணிட்டு கிடப்பாள்ல? அதை விட்டுட்டு ஏன் கோடீஸ்வரர் வீட்டுல பெண் தேடுறீங்க?" சுமித்ரா வெடுக்கெனக் கேட்க, நாகராஜன் நக்கலாய்ச் சொன்னார்.

"அட என்னம்மா நீ? போயும் போயும் அந்தப் பொண்ணை கட்டுவாரா? முதல்ல உம்மாமியார் இதுக்கு சம்மதிப்பாங்களா?"

''எல்லாம் சம்மதிப்பாங்க. பணமும் நகையும் கிடைச்சா தாராளமா சம்மதிப்பாங்க. ஆனா அவ என்ன கொண்டு வருவா? என்னை மாதிரி நூறு பவுன் கொண்டு வருவாளா?''

''அடச் சும்மா இரும்மா. கட்டிக்க நல்லதா நாலு துணி கொண்டு வர்றதே பெரிய விஷயம். இதுல நூறு பவுனாம்" நாகராஜன் வாய்விட்டுச் சிரிக்க, ஹரிஹரன் தீவிரமாய் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

'பேசாம அவளையே கல்யாணம் பண்ணி கூட்டிட்டு வாங்களேன்' என்ற வார்த்தை அவனது காதிற்குள் மீண்டும் மீண்டும் ஒலித்தது.

'அட! எனக்கு இது தோன்றாமல் போயிற்றே! கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு ஏன் நெய்யிற்காக ஊர் முழுக்க தேடி அலைய வேண்டும்? நான் ஏன் கயலைக் கட்டிக் கொள்ளக் கூடாது. சின்ன வயதிலிருந்தே சின்ன மருமகனே! என் இளைய மக உனக்குத்தான் என்பாரே அத்தை. அதை உண்மையாக்கி விட்டால் என்ன?

கயலைப் போல் ஒரு அன்பான மனைவி கிடைப்பது எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம். ஒரு தாயாய்... ஒரு தோழியாய்... தனக்கு எல்லாமுமாய் இருப்பவள். சிறிய வயது முதல் என் மீது அன்பை மட்டுமே பொழிபவள். அவளையே கட்டிக்கொண்டால் என் வாழ்க்கை நிச்சயமாய் சந்தோஷமாக இருக்கும்' உள்மனம் அடித்துக் கூற, திருப்தியான புன்னகையோடு நிமிர்ந்தான்.

"தேங்க்ஸ் அண்ணி."

"எதுக்கு?"

''ஒரு அருமையான ஐடியா கொடுத்ததுக்கு."

தகப்பனும் மகளும் ஒருவரையொருவர் புரியாமல் பார்த்துக் கொள்ள, ஹரிஹரன் மாடிப்படியை நோக்கி உற்சாகமாய் நடந்தான்.

ஏதோ நினைவு வந்தவனாய் நின்று திரும்பினான்.

"அப்புறம்... மாமா! நீங்க அடிக்கடி ஒரு வார்த்தை சொல்றீங்களே!"

"எ..ன்ன வார்த்தை?"

''அதான் நூறு பவுனு... இருநூறு பவுனுன்னு... இனிமே அந்த வார்த்தையை சொல்லாதீங்க."

"ஏன்?"

"யார் காதுலயாவது விழுந்தா நூறுபவுன் நகை போட்டவன் ஏன் சாப்பாட்டுக்கு கூட வழியில்லாம சம்பந்தி வீட்ல உட்கார்ந்து சாப்பிடுறான்னு சந்தேகப்படுவாங்க."

"ஹரி."

"ஷ்! சத்தம் போடாதீங்க. நீங்க போட்ட நகையை உரசிப் பார்த்தாத்தானே தெரியும், தங்கமா தகரமான்னு."

''தம்பி! என்ன நினைச்சிட்டு இப்படியெல்லாம்..."

"வெயிட் வெயிட்! பதறாதீங்க. நாங்க அந்த மாதிரி பண்ண மாட்டோம். ஏன்னா எங்க அம்மா பார்த்தது பெண்ணைத்தான். நீங்க போட்டு அனுப்பிய பொன்னை அல்ல. மைன்ட் இட்" என்றவாறு தடதடவென மாடியேறிச் செல்ல, இருவரும் இறுகிப் போயினர்.

## 10

**மா**லைச் சூரியன் மறையத் துவங்கிய இனிய மாலைப்பொழுது. பறவையினங்கள் தங்கள் இருப்பிடத்திற்கு கூட்டம் கூட்டமாய் திரும்பிக் கொண்டிருக்க, வானம் செந்தூரக் கோலமாய் காட்சியளித்தது.

அருகே இருந்த கோவிலில் மணியோசையும் கூடவே ஒலித்த பக்திப்பாடலும் ரம்மியமாய் இருக்க,

மொட்டைமாடியில் மெல்ல நடந்து கொண்டிருந்தான் ஹரிஹரன். முகத்தில் தீவிர சிந்தனை.

கீழே வீட்டில் மூத்த மகனிடம் இந்திரா கடிந்து கொண்டிருந்தாள்.

"சுதா! அந்தப்பய மனசில என்னதான் நினைச்சிட்டு இருக்கான். பொறுமையாய் பேசி சமாதானம் பண்ணிட்டு வான்னு அனுப்பினா இப்படி மொத்தமா காரியத்தையே கெடுத்திட்டு வந்திருக்கானே? கல்யாணம்னா என்ன சின்னப்புள்ளைங்க விளையாட்டா, எடுத்தோம் கவிழ்த்தோம்னு முடிவெடுக்க. இவன் ஏன் நம்மகிட்ட எல்லாம் ஒரு வார்த்தை கேட்காம அப்படிச் சொல்லிட்டு வந்தான்?"

''அம்மா! ஹரி ஒண்ணும் சின்னப் பையன் இல்ல. தப்பான முடிவெடுக்க.'' சுதாகரன் சொல்ல, இந்திரா திடுக்கிட்டாள்.

"ஏய்! என்னப்பா சொல்ற?"

"ஆமம்மா! இது அவனோட லைப். அவன்தானே முடிவெடுக்கணும்?"

"அப்போ! அவன் செய்தது சரின்றியா?"

''ரொம்பச் சரிம்மா. இப்பவே தம்பிமேலே கொஞ்சமும் நம்பிக்கையில்லாம சந்தேகப்படுறவளை நம்பி எப்படிம்மா அவன் வாழ்க்கையை பணயம் வைப்பான்?"

"டேய்! அது சின்னப் பொண்ணுடா. ஏதோ கோபத்தில குழப்பத்தில அப்படி பேசியிருக்கும். இவன்தானே பொறுமையா எடுத்துச் சொல்லணும்."

"சொன்னா மட்டும் அவ கேட்பாளா? அம்மா! நீங்க ரொம்ப ஏமாளிம்மா."

"என்னய்யா இப்படிச் சொல்ற?"

''வெளுத்ததெல்லாம் பாலுன்னு நினைக்கிறீங்க. கிட்ட நின்னு பார்த்தாதாம்மா உண்மை புரியும்" ஓரமாய் நின்று தங்களது பேச்சை கவனித்துக் கொண்டிருந்த மனைவியைப் பார்த்துக் கொண்டே சொன்னான் சுதாகரன்.

"என்னப்பா சொல்ற? எனக்கு... எதுவும் புரியலையே"

''அம்மா! நீங்க நினைக்கிற மாதிரி அந்தப் பொண்ணு ஒண்ணும் அப்பாவியோ அமைதியானவளோ கிடையாது. ஹரியை வாய்க்கு வந்தபடி பேசியிருக்கா. ரொம்ப அவமானப்படுத்தியிருக்கா. கடைசி வரை நிற்க வெச்சே பேசியிருக்கா."

"எ..ன்...ன?"

"அதோட தனக்கு வேற மாப்பிள்ளை பார்க்க வேண்டியதிருக்கும்னு அவதான் சொன்னாளாம். இப்படிச் சொன்னா யாருக்குத்தான் கோபம் வராது? அதான் இவனும் வேண்டாம்னு சொல்லிட்டு வந்திட்டான். எப்படியோ நம்ம ஹரி தப்பிச்சிட்டான்னு சந்தோஷப்படுங்கம்மா. தாலிகட்டின பிறகு கட்டினவ ராட்சஸியா இருந்தாலும் சகிச்சிட்டுத்தானே போகணும். அப்படி சகிச்சிட்டு வாழுறத விட வேற ஒரு அருமையான பொண்ணை கட்டி வெச்சா அவன் லைப் சந்தோஷமா இருக்குமே."

"அதெல்லாம் சரிப்பா! ஆனா... இந்தப் பய வாயே திறக்க மாட்டேங்கிறானே! இவன் சம்மதிச்சாத்தானே நாம இன்னொரு பெண்ணைப் பார்த்து..."

''வேணாம்மா.. நீங்க சிரமப்பட வேண்டாம். ஏற்கனவே உங்க உடம்பு ரொம்ப வீக்கா இருக்குன்னு டாக்டர் சொல்லியிருக்கார். நீங்க நல்லா ரெஸ்ட் எடுங்க."

''நான் ரெஸ்ட் எடுத்தா அவனுக்கு எப்படி கல்யாணம் பண்றது? முதல்ல அவனுக்கு கல்யாணத்தை பண்ணிடணும்."

"பண்ணலாம்மா. நான் பொண்ணுகூட பார்த்திட்டேன்."

### மின்சாரத்தை உற்பத்தி செய்யும் விலாங்கு மீன்கள்!

விலாங்கு மீன்களைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். உருண்டு திரண்ட நீண்ட உடலுடன் இந்த மீன் காணப்படும். பார்ப்பதற்கு பாம்பு போல் இருக்கும். விலாங்கு மீன்களில் பலவகை உண்டு. இதில் எலக்ட்ரோபோரஸ் எலக்ட்ரிகல்ஸ் என்ற விலாங்கு மீன் ஒன்று உண்டு. இது மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறன் படைத்தது. இதன் மேல்புறம் கரும் சாம்பல் நிறத்துடனும், அடிவயிறு மஞ்சள் நிறத்துடனும் இருக்கும். சேற்றுக்கு அடியில் வாழ விரும்புகிற இந்த மீன் வெளிக்காற்றையும் சுவாசிக்கும். 10 நிமிடங்களுக்கு ஒரு முறை தண்ணீருக்கு மேல் வந்து காற்றை சுவாசித்து விட்டு பழையபடி சேற்றுக்குள் ஒடி மறைந்து கொள்ளும்.

ஜிம்னோடிடே குடும்ப வகையைச் சேர்ந்த இந்த விலாங்கு மீன் 2.5 மீட்டர் நீளத்திற்கு வளரும். பொதுவாக ஒரு மீட்டர் நீளம் உடைய மீன்கள்தான் அதிகமாக இருக்கும். 20 கிலோ எடை வரைக்கும் இந்த மீன் வளரும். இந்த மீன் 'ஷாக்' அடிக்கிற அளவுக்கு 600 வோல்ட் மின்சாரத்தை உற்பத்தி

“என்ன?” இந்திரா வியப்பாய்க் கேட்க, தொலைக்காட்சி செய்தியில் மூழ்கியிருந்த காளிதாசும், சுமித்ராவும் வியப்பாய் திரும்பினர்.

‘‘சுதா! என்னப்பா சொல்ற? நீ பொண்ணு பார்த்திருக்கியா? யார் அது?”

‘‘எல்லாம் நமக்கு வேண்டப்பட்ட பொண்ணுதாம்பா.”

“யாருடா அது?” இந்திரா ஆர்வமாய் கேட்க, புன்னகைத்தான் சுதாகரன்.

“கொஞ்சம் பொறுங்கம்மா. உங்ககிட்ட சொல்லாம இருப்பேனா? அதுக்கு முன்னால நான் ஹரிகிட்ட பேசணும். அவனுக்கு ஓ.கே.ன்னா அப்புறம் உங்ககிட்ட பர்மிஷன் கேட்க வேண்டியதுதான்.”

“அப்போ அவன்கிட்ட இப்பவே கேளு. அவனைக் கீழே வரச் சொல்லு.”

“வேண்டாம்மா! உங்க எல்லாரையும் வெச்சுக் கேட்டால் ஒழுங்கா பதில் சொல்ல மாட்டான். நானே போய் பேசிட்டு வர்றேன்.”

“நானும் வர்றேனே.”

‘‘நோ. நீங்க மாடியேறக் கூடாது. பேசாம காபி குடிச்சிட்டு அப்பா கூடச் சேர்ந்து டி.வி. பாருங்க. நான் இப்ப வந்திடுறேன்” என்றவாறே எழுந்து கொண்ட சுதாகரன் மாடிக்குச் செல்ல, சில நிமிட இடைவெளியில் தானும் மாடி ஏறினாள் சுமித்ரா.

அன்றைய பேச்சுக்குப் பிறகு இரண்டு நாட்களாய் ஹரிஹரன் யாரிடமும் பேசுவதில்லை. நாகராஜனும் தன் வீட்டிற்குப் போய்விட, சுமித்ராவிற்கு யாரிடமும் பேச முடியாமல் பைத்தியம் பிடிப்பதைப் போலிருந்தது.

மாமனாரோ மாமியாரோ கணவனோ எந்த ஒட்டுதலும் இன்றி விலகியே நிற்க, மனம் பலவற்றையும் எண்ணிக் குழம்பித் தவித்தது. தன்னால்தான் இந்தத் திருமணம் நின்று போனது என்று அனைவருக்கும் தெரிந்து விட்டதோ?

அதனால்தான் தன்னிடம் யாரும் இயல்பாய் பேசவில்லையோ என அவளது குற்றம் செய்த மனம் குறுகுறுத்துக் கொண்டே இருந்தது. இன்று தன் கணவன் தம்பியிடம் தனியாய் பேசப் போனதும் மெல்ல மாடியேறி அவர்களது பார்வையில் விழாதவாறு படிக்கட்டில் அமர்ந்து கொண்டாள்.

காதை மட்டும் அவர்பக்கமாய் நீட்டிக் கொண்டு பார்வையை கீழே வைத்துக் கொண்டு அமர்ந்திருக்க, சுதாகரனின் மென்மையான குரல் கேட்டது.

‘‘என்ன ஹரி? இன்னும் அந்த பிரியாவையே நினைச்சிட்டு இருக்கியா?”

ஹரிஹரன் அவசரமாய் மறுத்தான்.

“சேச்சே! இல்லண்ணா. அதையெல்லாம் எப்பவோ மறந்திட்டேன். இப்ப நான் வேற ஒரு குழப்பத்தில இருக்கேன்.”

“என்னடா குழப்பம்?”

‘‘வாண்ணா! இப்படி உட்கார். நானே இதைப் பத்தி உங்கிட்ட பேசணும்னு நினைச்சேன்.’’ என்றவாறு மொட்டைமாடியின் சுற்றுச் சுவர்மீது அமர்ந்தான் ஹரிஹரன்.

அவன் என்ன சொல்லப் போகிறான் என்ற குழப்பத்தில் தானும் அவனருகே அமர்ந்து கொண்டான்.

‘‘அண்ணா! அண்ணி ஒரு விஷயம் சொன்னாங்க” என அவன் ஆரம்பித்ததும் பகீரென்றது சுமித்ராவிற்கு. உள்ளம் அதிர, உடல் பதற, காதை இன்னும் கூர்மையாக்கினாள்.

“என்ன சொன்னாள்?’’ சுதாகரனின்



செய்கிறது. இதற்காகவே அதனுடைய உடம்பில் 5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் வரை மின்சாரம் உற்பத்தி செய்யும் எலக்ட்ரோ பிளேட்டுகள் உள்ளன. இந்த மின்சாரத்தை பயன்படுத்தி தனக்கு வேண்டிய உணவு மீனை அதிர்ச்சியடைய வைத்து அதனை செயல் இழக்க வைத்து பிடித்து தின்னும். எதிரி மீனிடம் இருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ளவும் இந்த மின்சாரத்தை இந்த விலாங்கு மீன் பயன்படுத்தும்.

கையில் பிடித்தாலும் நழுவிப் போகும் இந்த விலாங்கு மீன் உணவுக்காக மின்சாரத்தையும் தயாரித்து உயிர்வாழ்வது வினோதமாகவே இருக்கிறது.

குரலில் கடுமை தொனித்தது.

"அண்ணி! எனக்கு ஒரு பொண்ணு பார்த்திருக்காங்க..."

"என்ன பொண்ணா?" சுதாகரன் நம்பிக்கையின்றிக் கேட்க, சுமித்ரா பலமாய் அதிர்ந்தாள். 'இது என்ன புதுக்குழப்பம். நான் எங்கே இவனுக்கு பெண் பார்த்தேன்?'

"ஆமாண்ணா! பொண்ணு ரொம்ப அருமையான பொண்ணுண்ணா. உனக்கோ எனக்கோ தோன்றாத எண்ணம் அண்ணிக்கு தோணியிருக்குண்ணா. உண்மையிலே அண்ணிக்கு எம்மேல ரொம்ப அக்கறை... அன்பு."

"வேண்டாம் ஹரி! அவளைப் பத்தி எனக்குத்தான் தெரியும். அவ ஒரு கோணல் புத்திகாரி. அவ பேச்சைக் கேட்டு ஏமாந்திடாதே."

"சேச்சே! அண்ணியை அப்படியெல்லாம் தப்பாப் பேசாதண்ணா."

"போடா! அவ என்னென்ன செய்வாள், செய்தாள்னு எனக்கு மட்டும்தான் தெரியும்."

"இல்லண்ணா! அண்ணிக்கு எம்மேல மட்டுமில்ல நம்ம குடும்பத்தோட மானம் மரியாதை, ஏன் நம்ம கயல்மேல கூட ரொம்ப அக்கறை."

"யாருக்கு? அவளுக்கா? டேய்! கயலை வீட்டை விட்டு அனுப்பியதே அவதானேடா. அவ செய்த காரியத்தாலதானே உன் கல்யாணப் பேச்சு இப்படியாகிப் போச்சு"

சுதாகரனின் வார்த்தையில் விக்கித்துப் போனாள் சுமித்ரா.

ஹரிஹரன் மறுப்பாய் தலையசைத்தான். "இல்ல அண்ணா! நீ அண்ணியைப் பத்தி தப்பா புரிஞ்சிட்டு இருக்க."

"யாரு? நானா? என்னை விட வேறு யாராலயும் அவளை சரியா புரிஞ்சிக்க முடியாது."

"இல்லண்ணா! அண்ணி ரொம்ப நல்லவங்க. இல்லேன்னா எனக்கு பெண் பார்ப்பாங்களா?"

"வேண்டாம் ஹரி! அவ அவளை மாதிரியே எவளையாவது உன் தலையில கட்டி வெச்சிடப் போறா. சொன்னாக் கேளு."

"பொண்ணு யாருன்னு தெரிஞ்சா நீ இப்படிச் சொல்ல மாட்டாய்."

"யாருடா பொண்ணு?"

"கயல்விழி" ஹரிஹரன் சொல்ல, திகைப்பாய் விழிகளை விரித்தான் சுதாகரன்.

"ஹே...ய்! என்ன சொன்னே?"

"கயல்விழி அண்ணா! நம்ம கயலைத்தான் சொன்னாங்க."

சுமித்ராவிற்கு தலை சுற்றியது. அவள் எதிர்பார்த்து பயந்தது என்ன? இங்கே நடப்பது என்ன?

"ஹரி! நிஜமாவா சொல்ற?"

"ஆமாண்ணா! நம்ப முடியல இல்ல? ஆனா இதுதான் நிஜம். நமக்கு இது தோணாமப் போச்சே."

"ஆமா! நீ என்ன பதில் சொன்ன?"

"ம்ப்ச்! இன்னும் சொல்லல."

"ஏன்டா? உனக்கு... கயலை பிடிக்கலையா?"

"என்ன அண்ணா நீ? கயலைப் போய் யாருக்காவது பிடிக்காமப் போகுமா?"

"அப்போ ஓ.கே.வா?" உற்சாகமாய்க் கேட்டான்.

"இல்லண்ணா! ஏற்கனவே ஒருத்தியப் பேசி நிச்சயம் வரை முடிவு எடுத்தபிறகு நின்னுப் போச்சு. இப்போ இவளைக் கட்டிக்கக் கேட்டா... கயல் என்ன நினைப்பாள்?"

"என்ன நினைப்பாள்?"

"வேற வழியில்லாம கடைசியா நம்மகிட்ட வர்றானேன்னு நினைக்க மாட்டாளா?"

"போடா ஃபூல். கயலைப் பத்தி நீ தெரிஞ்சிகிட்டது இவ்வளவுதானா? உனக்காக அவ வருஷக்கணக்கா தவம் பண்ணிட்டு இருக்காடா."

"அண்ணா?"

"கட்டினா உன்னைத்தான் கட்டுவேன். இல்லாட்டி கடைசிவரை உன் நினைப்போடவே வாழ்ந்திடுறேன்னு எங்கிட்டயே சொன்னாளே" சுதாகரனின் பதிலில் ஹரிஹரன் இதயம் சிறகடித்தது.

"எ...என்ன? எப்போ அண்ணா சொன்னாள்?"

"அன்னிக்கு நான்தானே அவளை ஊருக்கு கூட்டிட்டுப் போனேன். அப்பச் சொன்னா."

"எப்படி? அவளே... சொன்னாளா?"

"க்கும். நல்லாச் சொல்வாளே! பதினஞ்சு வருஷமா உன் நினைப்பை மனசுக்குள்ளயே பூட்டி வெச்சவ அவளாச் சொல்வாளா? நான் சொல்ல வைச்சேன்" என்றவனது கரங்களைப் பற்றிக் கொண்டான் ஹரிஹரன்.

"அண்ணா! இ...இதெல்லாம் உண்மைதானா? பொய் இல்லையே."

"சத்தியமான உண்மை. உனக்கு

சந்தேகமாய் இருந்தால் நீயே அவகிட்ட கேட்டுக்கோ."

''ஹய்யோ! என்னால... நம்பவே முடியலண்ணா" ஹரிஹரனால் நம்பவும் முடியவில்லை. அவளைக் கட்டிக் கொள்ள முடிவு எடுத்தபின் அவன் தயங்கியதே அவள் தன்னை முழுமனதாய் ஏற்றுக் கொள்வாளோ மறுத்து விடுவாளோ என்ற தயக்கம்தான்.

அவள் மனதில் தான் இருக்கிறோம். அதுவும் வருடக்கணக்கில் பதிந்து போயிருக்கிறோம் என்று தெரிந்ததும ஏனோ உடனே அவளைப் பார்க்க வேண்டும் என்று தோன்றியது. மனம் லேசாகிப் பறக்கத் துவங்கியது.

''அண்ணா! எனக்கு உடனே கயலைப் பார்க்கணும். பேசணும்."

"போ. போய்ப் பாரு. பேசு."

"நீயும் வாண்ணா."

"நானும் உன்னோடு வந்தால் இங்கே உள்ள வேலையை யார் பார்ப்பதாம்?"

"இங்கே என்ன வேலை?"

"பார்த்தியா? மனசுல ஆசை வந்ததும் மத்ததை மறந்திட்டியே."

"நானா? எதை... மறந்தேன்?"

''முக்கியமான விஷயத்தை... நம்ம அம்மாவை... அவங்க சம்மதிச்சாத்தானே இந்தக் கல்யாணம் நடக்கும்?"

"ஐயோ! ஆமாண்ணா! இப்போ என்ன பண்றது?"

"உனக்கு அந்தக் கவலை வேண்டாம். நான் அம்மாகிட்ட பேசுறேன். நீ உன்னோட கயல்கிட்ட பேசு'' என்ற சுதாகரனைக் கட்டிக் கொண்டான்.

"தேங்க்யூ அண்ணா. தேங்க்யூ ஸோ மச்."

''உங்க சந்தோஷத்தில நானும் பங்கெடுத்துக்கலாமா?'' என்ற குரலில் இருவரும் திரும்ப, சுமித்ரா தயக்கமாய் நின்று கொண்டிருந்தாள்.

''அடடே! வாங்க அண்ணி! இந்த சந்தோஷத்துக்கான மொத்த காரணமே நீங்கதானே அண்ணி! வாங்க" ஹரிஹரன் உற்சாகமாய் அழைக்க, சுமித்ராவிற்கு கூசியது.

எத்தனை அலட்சியமாய் பேசியும் தன்னை மாட்டிவிடாமல் தன் கணவனிடம் தன்னைப் பற்றி பெருமையாய் பேசி உயர்த்தியவனைப் பார்க்கையில் மனம்

## மீன் தொட்டியே மதில் சுவரானது!

துருக்கியைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர் ஒருவர் தனது வீட்டுக்குரிய மதில் சுவரை கற்களால் எழுப்புவதற்கு பதிலாக மிக நீண்ட மீன் தொட்டிகளைக் கொண்டு மதில் சுவர்களை உருவாக்கி உள்ளார். 50 மீட்டர் நீளம் உள்ள இந்த மீன்



தொட்டியை உருவாக்குவதற்கு அவருக்கு ரூ.14 லட்சம் செலவு பிடித்துள்ளது. பணம் பத்தும் செய்யும் என்பதற்கு இந்த மீன் தொட்டி மதில் சுவரும் ஒரு உதாரணம் ஆகும்.

நாம் ஒரு சிறு மீன் தொட்டி வாங்குவதற்கே பலமுறை யோசிக்கிறோம். மீன் தொட்டியிலுள்ள மீன்களை பராமரிக்க நம்மால் முடியாது என்பதால் மீன் தொட்டி வாங்கி மீன் வளர்ப்பதையும் நாளடைவில் விட்டு விடுகிறோம். ஆனால் இந்த தொழிலதிபர் வீட்டைச் சுற்றிலும் மீன் தொட்டியை கட்டி மீன்களை வளர்க்கிறார் என்றால் பிரமிப்பாகவே இருக்கிறது. இந்த மீன்களை பராமரிக்க இவருக்கு எங்கே நேரம் இருக்கிறது என்பதை நினைக்கும் போது ஆச்சரியமாகவே உள்ளது.

சாதனைக்காகவே வாழ்பவர்கள் வெளிநாடுகளில் மட்டும்தான் இருப்பார்களோ என்று நமக்கு எண்ணத் தோன்றுகிறது. அவர்களுடைய பொருளாதாரம் இதுபோன்ற சாதனைகளுக்கு இடமளிக்கிறது. ஆனால் நாம் அடுத்த வேளை உணவுக்கே திண்டாடும் போது இதுபோன்ற சாதனைகளை எங்கே நிகழ்த்துவது. வேடிக்கை வேண்டுமானால் பார்க்கலாம்.

கனத்தது. நன்றிப்பெருக்கில் கண்கள் கசிந்தது. குற்ற உணர்வில் அமைதியாய் நின்றவளை நெருங்கினான் சுதாகரன்.

''என்ன சுமி! எனக்குத் தெரியாம நிறைய காரியம் செய்திருக்க போல?'' என்ற கணவனிடம் பதறி, மறுப்பாய் தலையசைத்தாள்.

"இல்லங்க... நான்.. தெரியாம..."

''அண்ணி! அண்ணன் இந்தக் கல்யாணத்தைப் பத்தி சொல்றான்'' ஹரிஹரன் அவசரமாய் குரல் கொடுக்க, அவனை நன்றியாய் பார்த்தாள்.

'என்னை மன்னிப்பாயா?' என அந்தக் கண்கள் கெஞ்சியது.

"நீங்க எப்பவுமே எனக்கு இன்னொரு அம்மா அண்ணி" என்றான் மென்மையாய்.

''இவன் சரியாத்தான் சொல்றான் சுமி. நான்தான் இத்தனை நாளா உன்னை சரியா புரிஞ்சுக்கல போலிருக்கு. தேவையில்லாம கோபப்பட்டு உம்மனசைக் கஷ்டப்படுத்திட்டேன். ஸாரி சுமி."

"ஐயோ! இல்லங்க! நான்தான் உங்க எல்லோருடைய அருமையும் புரியாம முட்டாள்தனமா என் இஷ்டத்திற்கு இருந்திருக்கேன். ஸாரிங்க." முதன்முறையாய் மென்மையாய் பேசிய மனைவியைப் பார்த்து வியந்தான் சுதாகரன்.

"ஹேய் சுமி! நீயா பேசுற? உன் வாய்ஸ் இவ்வளவு ஸாப்ட்டா இருக்கா? நான்தான் இத்தனைநாளா சரியா கவனிக்கல போலிருக்கு."

''நான் எங்கே பொறுமையா பேசியிருக்கேன். எப்பவும் படபடன்னு வெடிச்சிட்டேதானே இருப்பேன்."

"அடடா! தானாக ஒப்புக் கொள்ளும் போது தவறுகள் கூட இனிமையாகிடுதே" சுதாகரன் லயிப்பாய் சொல்ல இருவரின் இடையே கையை ஆட்டினான் ஹரிஹரன்.

"ஹலோ! இங்கே ஒருத்தன் நிற்கிறதையே ரெண்டுபேரும் மறந்திட்டீங்களா?" என்றதும் இருவரும் விலகினர்.

"ஹரி! நீ இன்னும் போகலையா?"

''அட! இந்தக் கழட்டி விடுற வேலையெல்லாம் வேண்டாம். மொதல்ல ரெண்டுபேருமாச் சேர்ந்து அம்மாகிட்ட என் மேரேஜ்க்கு பர்மிஷன் வாங்கிட்டு அப்புறமா உங்க ரொமான்ஸ கன்ட்னியூ பண்ணுங்க. கமான்! கமான் கிளம்புங்க."

''பாரேன்! அவனுக்கு காரியம் ஆக நம்மை விரட்டுறான்."

"அது நம்ம கடமைதானேங்க."

"அதுவும் சரிதான்" என்றவாறு இருவரும் இணைந்தே செல்ல, ஹரிஹரனின் மனம் நிம்மதியால் நிறைந்தது.

## 11

**பி**ள்ளைகளும் மருமகளுமாய்ச் சேர்ந்து சொன்ன செய்திகளைக் கேட்டு கிறுகிறுத்துப் போனாள் இந்திரா. அந்த சந்தர்ப்பத்திற்காகவே காத்திருந்ததைப் போல் தானும் நுழைந்தார் காளிதாஸ்.

''நான் இந்த முடிவை எப்போதோ எடுத்திட்டேன். ஹரிக்கு பெண்பார்க்கும் போதே சொன்னேன். என் தங்கச்சி மக இருக்கா. அவளையே ஹரிக்கு கேட்போம்னு. இவதான் கேட்கல."

"ஏம்மா! அத்தை வீட்டுல சம்பந்தம் வெச்சுக்க ஏன் தயங்குறீங்க? நம்மை விட அவங்க எதில குறைஞ்சிட்டாங்க? நாம சிட்டியில கார் பங்களான்னு வாழுறோம். அவங்க கிராமத்தில சொத்து பத்தோட வாழுறாங்க. இதுல என்ன உங்களுக்கு கவுரவ குறைச்சல்?"

இந்திரா பெருமூச்சு விட்டாள். "நான் பெண் எடுக்கிற வீட்ல பணமோ நகையோ எதிர்பார்க்கிறதில்லப்பா. எம்புள்ளைகளுக்கு ஏத்தமாதிரி பொண்ணு அமையணும்னுதான் பார்ப்பேன். நீங்க சந்தோஷா வாழணும்னுதான் நினைப்பேன்."

''ஏம்மா! கயலைக் கட்டினா நான் சந்தோஷமா வாழ மாட்டேனா?"

''வாழுவீங்கப்பா. ஆனா நாளைக்கு குழந்தை குட்டின்னு வரும்போது அந்த சந்தோஷம் பறிபோயிடக் கூடாதில்லையா?"

"அம்மா?"

"ஆமாப்பா! உறவுக்குள்ள கல்யாணம் பண்ணினா குழந்தை எப்படி பிறக்கும்னு..."

''இதையே எத்தனை காலம்தான் சொல்லுவே இந்திரா..."

"நான் ஒண்ணும் சும்மா சொல்லலங்க. அதை அனுபவிச்சவ..."

"என்னம்மா சொல்றீங்க?"

''ஆமாப்பா! என் அம்மாவை அவங்க சொந்த தாய்மாமனுக்கே கட்டி வெச்சிருக்காங்க. எங்க அம்மாவுக்கு பிறந்த முதல் குழந்தை ஊனமாத்தான் பொறந்திச்சி."

"ஊனம்னா எப்படிம்மா? பெரியம்மா, மாமா எல்லாருமே நல்லாத்தானே

இருக்காங்க?'' சுதாகரன் புரியாமல் கேட்டான்.

"இப்போ அந்தக் குழந்தை உயிரோட இல்லப்பா" இந்திராவின் கண்கள் கசிந்தன. காளிதாஸ் பதறினார்.

"என்ன சொல்ற இந்திரா?"

"ஆமாங்க! மொதல் குழந்தை பெண் குழந்தை. அதுவும் ரெண்டு காலும் ஊனமா பொறந்தது. அதோட மூளை வளர்ச்சியும் குறைவா இருந்தது. நாங்கள்லாம் பொறக்கிற வரைக்கும் இருந்ததாம். பிறகு எப்படியோ உடம்பு முடியாமப் போயி... ம்ப்ச்!"

''அம்மா! அந்தக் குழந்தை அப்படி பிறந்ததுக்கு காரணம் பாட்டி தன்னோட தாய்மாமனை கட்டினது மட்டுமில்ல."

"பின்னே?"

''பாட்டி காலத்தில் ஹாஸ்பிடலுக்கு செக்–அப்புக்கு எல்லாம் போக மாட்டாங்க. தடுப்பூசி போட மாட்டாங்க இல்லையா?"

"ஆமா"

"அதனால ஏற்பட்ட குறைபாடுதாம்மா இது. ஆனா இப்ப அப்படியில்லையே. கன்சீவான உடனே டாக்டர்கிட்ட போயிடுறோம். டாக்டர்ஸ் சொல்றமாதிரி நடந்துக்கிறோம். குழந்தையோட ஒவ்வொரு வளர்ச்சியையும் ஸ்கேனிங் பண்ணி பார்க்கிறோம். மாத்திரை மருந்துன்னு, சத்துள்ள ஆகாரம் எல்லாம் சாப்பிடுறதால குழந்தை ஹெல்த்தியா ஆரோக்கியமா பொறக்கும்மா."

"ஆனா இப்பவும் ஊனமுற்ற குழந்தைங்க பொறக்குதேப்பா."

"பிறக்குதுதான். நான் மறுக்கல. ஆனா அதுக்கு எவ்வளவோ காரணம் இருக்கும்மா. வயித்தில குழந்தை இருக்கும் போது கண்ட மாத்திரையும் சாப்பிடுறது, சிலர் குழந்தை வேண்டாம்னு அதை அழிக்க ஏதாவது மெடிஸன் எடுத்துக்கிறது இப்படி ஏதாவது ஒரு காரணமா இருக்கலாம்."

''ஆமா அத்தே! டெலிவரி டைம்ல ஏற்பட்ட சிக்கல்களால கூட சில குழந்தைகளுக்கு குறைபாடு ஏற்படுதே."

"இருந்தாலும்..."

''இந்திரா! உன்னோட பயமும் எச்சரிக்கை உணர்வும் நல்லதுதான். ஆனா யாரோ ஒருத்தருக்கு நடக்கிறத வெச்சு எல்லாருக்கும் அப்படியே நடக்கும்னு நினைச்சு பயப்படுறது தப்பும்மா."

''ஆமாம்மா! இப்ப நம்ம அத்தைக்கு, பெரியம்மாவுக்குக் கூட உறவுக்குள்ளதானே கட்டியிருக்காங்க. அவங்கள்லாம் ஆரோக்கியமான குழந்தைங்களை பெத்துக்கலையா? அந்த மாதிரி நமக்கு சாதகமான விஷயங்களை எடுத்துக்கங்கம்மா. உங்க பயம் தானாப் போயிடும். எப்பவுமே கெட்டதை நினைச்சு பயப்படுறதை விட நல்லதை நினைச்சி நம்மையே தேத்திக்கணும்மா."

"இந்திரா! நாம மனசறிஞ்சி யாருக்கும் எந்தத் தீங்கும் செய்யல. அதனால நம்ம பிள்ளைகளுக்கு எந்த கஷ்டமும் வராது. அவங்க மனசு நிறைஞ்சி வாழட்டும். சரின்னு சொல்லு."

இந்திரா தயக்கமாய் இளையமகனை ஏறிட்டாள். கண்களில் ஆர்வமும் தவிப்புமாய் நின்றவனைப் பார்க்கையில் மனம் தவித்தது. மகனது முகத்தை பரிவாய் வருடினாள்.

''ஹரி! உனக்கு... கயலைப் பிடிச்சிருக்காப்பா?"

''அவ என்னையே நினைச்சிட்டு இருக்காம்மா. இப்ப இல்ல... பல வருஷமா..."

"அப்போ... உனக்கு?"

"எப்போ அவ என்னை விரும்புறான்னு தெரிஞ்சதோ அந்த நிமிஷத்தில இருந்தே நானும் அவளை விரும்புறேம்மா. சின்ன வயசில இருந்தே உள்ள அன்புதான் இப்போ பிரியமாகியிருக்கு. ஆனா... உங்க சம்மதம் இருந்தாத்தான்... நான் அவகிட்ட எம்மனசை சொல்லுவேன். இல்லைன்னா... எப்பவும் போல அவ கனவுலயே வாழட்டும்னு விட்டுடுவேன். எம்மனசை சொல்லாமலேயே நானும் அவ நினைப்போட..."

''ஐயோ! வேண்டாம்பா! ஏன் இப்படியெல்லாம் பேசுற?"

''எல்லாமே உங்க கையிலதாம்மா இருக்கு."

"என்னவோப்பா! ஆளாளுக்கு ஏதேதோ சொல்றீங்க. நீங்க சொல்ற மாதிரி நல்லதா நடந்தாச் சரி."

"அம்மா."

"நீ கயலையே கட்டிக்க. ஆனா என் பேரப்பிள்ளைகளை ஒரு குறையில்லாம நல்லபடியா பெத்துக் கொடுத்திடுங்க." என்ற தாயை இருவரும் கட்டிக் கொண்டனர்.

"இது போதும்மா! சீக்கிரமே உங்களை மாதிரியே அழகாவும், அப்பாமாதிரி அன்பாவும் ரெட்டைப்புள்ள பெத்துக் கொடுக்கிறோம்."

''கொடுங்கடா கண்ணுங்களா. நானும் சின்னக் குழந்தையை தூக்கி வருஷக்கணக்காச்சி. மூத்தவனும் ஒத்தைப் புள்ளையோட நிறுத்திட்டான்."

''கவலைப்படாதீங்க அத்தே. கூடிய சீக்கிரமே நாங்களும் இன்னொரு குழந்தையை பெத்துக்கலாம்னு இருக்கோம்" சுமித்ரா வெட்கமாய்ச் சொல்ல, சுதாகரன் வியந்தான்.

"ஏய் சுமி! சொல்லவே இல்ல."

"ஸாரிங்க! நம்ம பெண்ணுக்கும் தம்பி வேணுமாம்."

"அப்படிப்போடு..."

''வேலைக்குப் போறதால கஷ்டமா இருக்கும்னுதான் டிலே பண்ணினேன். இப்போ... வேலையை விட்டுட்டு முழுநேர ஹவுஸ் வொய்ப்பா இருக்கலாம்னு முடிவு பண்ணிட்டேன்."

''வாவ்! குட் ஐடியா! இதைத்தான் நான் சொல்லிட்டே இருந்தேன். நீதான் கேட்கல."

"இனிமே கேட்கிறேங்க."

"அடடா! இந்தக் கயல் பொண்ணு நம்ம வீட்டுக்கு வந்தநேரம் எல்லாம் நல்லதாவே நடக்குதே. என் பெரியமருமக பேசுறதக் கேட்கவே சந்தோஷமா இருக்கு."

"உண்மைதான் மாமா. கயல்விழியாலதான் நான் மாறினேன். அவளுக்கும் ஹரிக்கும் நான் நன்றிக்கடன் பட்டிருக்கேன்."

''என்ன அண்ணி பெரிய வார்த்தையெல்லாம் பேசிகிட்டு..."

''அதானே! இப்போ நாமெல்லாம் எவ்வளவு சந்தோஷமா இருக்கோம். அதைக் கொண்டாட வேண்டாமா?'' சுதாகரன் சத்தமாய் கேட்க மொத்தமாய் பதில் வந்தது.

"கொண்டாடணும்... கொண்டாடணும்."

"அப்போ எல்லாரும் கிளம்புங்க."

"எங்கே?"

''அத்தை வீட்டுக்கு. அங்கே போய் கொண்டாடினாத்தானே இந்த சந்தோஷம் இரட்டிப்பாகும்?"

"அதுவும் சரிதான். போகலாம். எல்லாரும் போகலாம்.'' இந்திரா தலையசைக்க, அனைவரும் அவரவர் அறைகளுக்குச் சென்று புறப்படத் தயாராகினர்.

அதே நேரம் கிராமத்தில் கயல்விழி அழுது கொண்டே பலமாய் மறுத்தாள்.

"முடியாது! முடியாது! இதுக்கு நான் ஒத்துக்கவே மாட்டேன்."

"ஏன்டி! இந்த மாப்பிள்ளைக்கு என்ன கொறைச்சல்? நமக்கேத்த இடம். உன் அக்காளோட சொந்தக் கொழுந்தன். இந்த இடம் அமைஞ்சா நீயும் அக்காளும் ஒருத்தருக்கொருத்தர் ஒத்தாசையா இருப்பீங்கள்ல?"

''எதுக்கு? ஒருத்தரை ஒருத்தர் கட்டிப்பிடிச்சி அழச் சொல்றியா?'' அழுகையோடு கேட்ட மகளை முறைத்தாள் சாவித்திரி.

''உன் வாயில மட்டும் ஏன்டி நல்ல வார்த்தையே வரமாட்டேங்குது?"

"இதோ பாரும்மா! நான் சொன்னா சொன்னதுதான். எனக்கு கல்யாணமே வேண்டாம்."

''இன்னும் எத்தனை காலம்தான்டி இப்படி குதிருமாதிரி வீட்டோட இருப்ப. உன்னை கட்டிக் கொடுத்தாதானே உன் அண்ணனுக்கு ஒருத்தியப் பார்க்க முடியும்?"

"முதல்ல அண்ணனுக்கு பாரு. என்னை விட்டுடும்மா."

''எருமை மாடே! வீட்ல வளர்ந்த குமரியை வெச்சிட்டு எவளாவது பையனுக்கு கல்யாணம் பண்ணுவாளா?"

"ஏன் பண்ணினா என்ன?"

''கழுதை மாதிரி வளர்ந்திருக்கியே தவிர மண்டையில ஒரு மண்ணும் இல்ல. சனியன்! சனியன்!'' என கயல்விழியின் முதுகில் அறைந்தாள் சாவித்திரி.

வெளியே போய்விட்டு வீட்டிற்குள் நுழைந்த தருமர் மனைவியின் செயலைக் கண்டு அதட்டினார்.

''இந்தா! தலைக்கு மேலே வளர்ந்த புள்ளையப் போட்டு ஏன் அடிக்கிற? விலகு!"

''இவளைப் பெத்ததுக்கு நான் என்னைத்தான் அடிச்சிக்கணும்."

"ஏன்? என்ன ஆகிப் போச்சு?"

''சீமையில இல்லாத சுந்தரிக்கு இந்த மாப்பிள்ளை வேண்டாமாம். எட்டாங்கிளாஸ் படிச்ச குமரிக்கு கவர்மென்ட் ஆபீஸரா கிடைப்பான்?"

''எந்த ஆபீசர் வந்தாலும் எனக்கு கல்யாணம் வேண்டாம்."

"பல்லை உடைப்பேன். பெத்தவளை எதிர்த்துப் பேசுற அளவுக்கு வளர்ந்திட்டியோ?'' என மீண்டும் அடிக்கப் பாய்ந்தவளை தடுத்தார் தருமர்.

“விடு சாவித்திரி. தப்பை நாம பண்ணிட்டு புள்ளைய ஏன் அடிக்கணும்?”

“என்னங்க சொல்றீங்க?”

“ஆமா! இதுக்கு முன்னால வந்த சம்பந்தத்தை எல்லாம் எம்மவ என் அண்ணன் மவனுக்குக்குன்னு சொல்லித்தானே தட்டிக் கழிச்ச?”

“ஆ...மா.”

“நாம சொன்னதை மனசில விதைச்சிருக்கும் புள்ள. இப்ப இன்னொருத்தனைக் கூட்டியாந்து இவன்தான் மாப்பிள்ளைன்னு சொன்னா அது ஒத்துக்குமா?”

“ஏய்! அப்பன் சொல்றது நிசமாடி?” மகளைத் தன்புறமாய்த் திருப்பிக் கேட்டாள் சாவித்திரி. கயல்விழி பதில் பேசாமல் கல்லாய் நிற்க, சாவித்திரியின் கண்கள் கலங்கியது.

“வேண்டாம்டி. நடக்காதுன்னு தெரிஞ்சும் ஆசைப்படுறது முட்டாள்தனம். அம்மா சொல்றதைக் கேளு.”

“ஏம்மா! நினைச்ச நேரமெல்லாம் எப்படிம்மா மனசை மாத்திக்க முடியும்?”

“அடியேய்! என் அண்ணன் பேச்சைக் கேட்டு நானும் ஆசைப்பட்டேன்தான். இல்லேங்கல. ஆனா உன் அத்தை உங்களையெல்லாம் ஏத்துக்க மாட்டாம்மா. வீணா மனசில ஆசைய வளர்த்திட்டு கஷ்டப்படாதேம்மா.”

“அம்மா...”

“அவனுக்கு கல்யாணம் முடிவாகிடுச்சிடி. இதுக்கு பிறகும் அவன் மேல ஆசைப்பட்டு என்னாகப் போகுது? அவன் நினைப்பு உன் மனசில இருந்தா துடைச்சிப் போட்டுடு.”

“மனசுல மட்டும் இருந்தா துடைச்சிடுவேன். ஆனா அத்தானோட நினைப்பு இந்த உசிர் முழுக்க பரவிக் கிடக்கும்மா. என் உடம்புல உசிர் இருக்கிற வரைக்கும் அந்த நினைப்பு போகாது.”

“ஆண்டவா! நான் என்ன பண்ணுவேன்! ஏன்டி இப்படி பைத்தியக்காரி மாதிரி பேசுற. நாம ஆயிரம் கனவு காணலாம். ஆனா அது எல்லாமே பலிக்காதுடி.”

“அத்தான் எனக்கு கிடைக்க மாட்டார்னு எனக்கும் தெரியும்மா. ஆனா அவரைத் தவிர யாரையும் நான் புருஷனா ஏத்துக்க மாட்டேம்மா. அப்படி... என்னை மீறி எவனையாவது மாப்பிள்ளைன்னு கூட்டிட்டு வந்தே, வர்றவன் என் பொணத்தைத்தான் பார்ப்பான்” கயல்விழியின் உறுதியில் தருமர் உறைந்து போனார். சாவித்திரியால் தாள முடியவில்லை.

“சாவுடி. இப்படி வீட்டோட தண்டமா இருக்கிறதுக்கு பேசாம செத்துப்போ. ரெண்டு நாள் அழுதிட்டு அடுத்த காரியத்தைப் பார்க்கிறேன்.”

“சாவித்திரி! என்ன பேசுற?”

“வேற என்ன பண்ணுவேன்? மூத்தவன் கல்யாண வயசைக் கடந்து நிக்கிறான். இவளுக்கடுத்து ரெண்டு வளர்ந்து நிக்குது. இவ இப்படியே இருந்தா மத்தத நான் எப்படி கடத்துவேன்? இவளை வெச்சிகிட்டே அடுத்ததுக்கு கல்யாணம் பண்ணினா ஊர் என்ன சொல்லும்? நாம ஏதோ பாவம் பண்ணியிருக்கோம். அதான் நாம பெத்தது எல்லாமே இப்படி வாழத் தெரியாம வாழ்க்கைய தொலைச்சிட்டு நிக்குது. எல்லாம் என் நேரம்.” சாவித்திரி தலையில் அடித்துக் கொண்டு அழ, கயல்விழி அப்படியே நின்றாள்.

‘நான்தான் எல்லோருக்கும் தடையாய் நிற்கிறேனா?’ என்ற கேள்வி அவளுள் விஸ்வரூபம் எடுத்தது.

## 12

**கா**ளிதாஸ் தன் குடும்பத்தோடு தங்கை வீட்டை அடைந்தபோது பொழுது நன்றாய் விடியத் துவங்கியிருந்தது. சாவித்திரியின் வீட்டை நெருங்கும் போதே முன் இருக்கையில் அமர்ந்திருந்த சுதாகரனும் ஹரிஹரனும் முகம் மாறினர்.

வீட்டுமுன் கூட்டம் குழுமியிருக்க, அனைவரின் முகமும் சோகத்தையும் பதற்றத்தையும் பூசிக் கொண்டிருந்தன. மனம் பதைக்க, காரை நிறுத்தினான் ஹரிஹரன்.

“அண்ணா! என்ன இது... ஒரே கூட்டமா இருக்கு?”

“யார் முகமும் சரியில்லை ஹரி... ஸம்திங் ராங்!”

“என்னப்பா சொல்றீங்க?” இந்திரா பதறினாள்.

“என்னன்னு தெரியலம்மா. வாங்க பார்க்கலாம்” என அனைவரும் கதவைத் திறந்துக் கொண்டு இறங்க, கூடியிருந்தவர்களின் பார்வை அவர்களின் பக்கம் திரும்ப, கூட்டத்தினர் காளிதாஸை அடையாளம் கண்டு கொண்டனர்.

“அடியேய் கயலு! உன் மாமன் உன்னை வழியனுப்பி வைக்க குடும்பத்தோட வந்திருக்கான்டி” முதிய பெண்மணி

பெருங்குரலெடுத்து அழ, அனைவரும் திடுக்கிட்டனர்.

ஹரிஹரனின் உடல் பலமாய் அதிர, அருகே நின்ற சுதாகரன் தம்பியைப் பற்றிக் கொண்டான்.

''அ...ண்...ணா! இ...வங்க... என்ன சொல்றாங்க?''

''எனக்கும் புரியல... வா! உள்ளே போலாம்.''

''இல்ல... என்... கயலுக்கு... என்னவோ ஆயிடுச்சி. எனக்கு பயமாயிருக்கு. நான் வரல.''

''ஹரி! பதறாதேப்பா... ஏம்மா! இங்கே... என்ன நடக்குது?'' என்று கேட்டான் ஒரு பெண்மணியிடம்.

''அதை என்னன்னு சொல்றதுய்யா. பைத்தியக்காரப்பொண்ணு... மனசில யாரையோ நினைச்சிட்டு இருந்தா போலிருக்கு. அது தெரியாம அவ ஆத்தா கல்யாண ஏற்பாடு பண்ணினா. இன்னிக்கு மாப்பிள்ளை வீட்டுக்காரங்க பொண்ணு பார்க்க வர்றதா இருந்தது...''

''எ..ன்..ன?''

''இந்தப் பொண்ணு அவசரப்பட்டு அரளிவிதையை அரைச்சிக் குடிச்சிட்டாய்யா'' அந்தப் பெண்மணி புடவைத் தலைப்பால் வாயை மூடிக் கொண்டு அழ, பலமாய் அதிர்ந்தனர்.

''நோ... நோ... என் கயலுக்கு எதுவும் ஆகியிருக்கக் கூடாது. ஆகக் கூடாது'' என்றவாறே மற்றவர்களை விலக்கிவிட்டு



வீட்டிற்குள் ஓடினான் ஹரிஹரன்.

அவன் பின்னே மற்றவர்களும் ஓட, தருமர் வந்து காளிதாசைக் கட்டிக் கொண்டார். விம்மியழுதவரை தன்னோடு அணைத்துக் கொண்டார் காளிதாஸ்.

''மச்சான்! இந்தப்புள்ள இப்படி அவசரப்பட்டுட்டாளே... நான் என்ன பண்ணுவேன்?''

தலைவிரி கோலமாய் மகளை மடியில் போட்டு கதறிக் கொண்டிருந்த சாவித்திரி நிமிர்ந்தாள். அண்ணனையும் அண்ணன் குடும்பத்தாரையும் கண்டு அழுகை அதிகரித்தது.

"அண்ணா! பார்த்தியா? எம் புள்ள எப்படி கிடக்கிறா பார்த்தியா? இதுக்கா... இப்படி அல்பாயுசுல எமன்கிட்ட கொடுக்கவா இவளைப் பெத்தேன்? பாவி! பாவி! இப்படி பண்ணிட்டாளே? சண்டாளி! என்னைப் பத்தி நினைச்சுப் பார்த்தாளா? பெத்தவளை நினைக்காம கூடப்பொறந்ததுகளை பத்தி கவலைப்படாம இப்படி செய்ய எப்படி முடிஞ்சது?'' சாவித்திரி தலையில் அடித்துக்



கொண்டு அழ, ஹரிஹரன் உறைந்து போனவனாய் நின்றான்.

ஓலைப்பாயில் கந்தல்துணியாய் கிடந்த கயல்விழியை பார்க்கையில் இதயம் வலித்தது. நிறைய வைத்தியம் செய்திருப்பரோ... பாயைச் சுற்றிலும் பாத்திரங்கள் இறைந்து கிடந்தது.

கண்கள் செருகிப்போய்... வாயில் நுரை தள்ளிக் கிடந்தவளைப் பார்த்து நெஞ்சை அடைக்க, கண்களில் நிறைந்த நீரோடு அவளது காலடியில் மண்டியிட்டு அமர்ந்தான். இரு பாதங்களையும் கட்டிக் கொண்டான். சுதாகரன் அவளது நாடித்துடிப்பை பரிசோதிக்க, ஹரி கதறினான்.

''அவசரப்பட்டுட்டியே கயல்! இந்த அத்தான் வரதுக்குள்ளே அவசரப்பட்டுட்டியே. என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லியிருந்தா... உன்னை இப்படி விட்டிருப்பேனா? சொல்லாமலே மறைச்சிட்டியே! என்னை கொலைகாரனாய் நிறுத்தி வெச்சிட்டியே. இதோ பார்... உனக்காக வாதாடி... போராடி... அம்மாவிடம் சம்மதம் வாங்கி குடும்பத்தோடு பெண் கேட்டு வந்தேனே! என்னைப் பார்க்காமல் போயிட்டியா?

விடமாட்டேன் கயல்! உன்னை போகவிட மாட்டேன். எழுந்திரு. நாம கல்யாணம் பண்ணிக்கணும். நீ எப்படியெல்லாம் ஆசைப்பட்டியோ அப்படியெல்லாம் உன்னை நான் வாழ வைக்கணும். எழுந்திரு கயல்! எழுந்திரும்மா.

இந்த அத்தானை ஏமாத்திட்டு போயிடாதடி. கயல்! கண் விழிச்சுப் பாரும்மா. உன் சின்னத்தான் வந்திருக்கேன் பாரு! எழுந்திரும்மா! அம்மா! கயல்கிட்ட சொல்லுங்கம்மா. எனக்கு கயல் வேணும்மா. கயல்! எழுந்திரு கயல்'' காலைப் பற்றிக்கொண்டு கதறியவனைக் கண்டு ஊரே அழுதது.

சுதாகரன் திடுக்கிட்டான். கயல்விழி உயிருடன் இருந்தாள். நாடித்துடிப்பு குறைந்து கொண்டேவர பதறினான்.

"அத்தே! எப்போ விஷம் சாப்பிட்டா?"

"தெரியலய்யா! ராத்திரி ரொம்ப நேரம் முழிச்சிட்டுத்தான் இருந்தா... காலையில கண்விழிச்சிப் பார்த்தப்ப இப்படி கிடக்கிறா"

''ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனீங்களா?"

"இல்ல தம்பி! எங்க ஊர்ல இப்படி அரளிவிதையை அரைச்சி குடிச்சா புளியையும் உப்பையும் கரைச்சு ஊத்துவோம்"

"என்னது?"

''அப்படி ஊத்தினா வயித்துக்குள்ள போன மருந்து வாந்தியில வெளியே வந்திடும். புள்ள பொழைச்சிடும்"

''போங்கய்யா நீங்களும் உங்க வைத்தியமும்! ஹரி! எழுந்திரு. இது அழ வேண்டிய நேரமில்லை. கமான்."

"அண்ணா"

''கயலுக்கு உயிர் இருக்குடா. ஹாஸ்பிடலுக்குக் கொண்டு போனாக் காப்பாத்திடலாம். வா."

"என்ன? உயிரோட வெச்சிக்கிட்டா இப்படி ஊரைக் கூட்டி ஒப்பாரி வெக்கிறாங்க? நான்சென்ஸ்" கண்ணீரைத் துடைக்கவும் தோன்றாமல், கயல்விழியை வாரியெடுத்தான்.

"இங்கே ஹாஸ்பிடல் எங்கே இருக்கு?"

"நேராப் போயி வலது பக்கம் திரும்பி..."

''கொஞ்சம் கார்ல ஏறுப்பா. வழிகாட்டினா போதும்'' என்று வழி சொன்னவனை முன்பக்கம் ஏறச் சொல்லிவிட்டு பின்பக்க கதவைத் திறந்து வைத்தான் சுதாகரன்.

ஹரிஹரன் கயல்விழியோடு பின்புறம் ஏறிக் கொள்ள, ஓட்டுநர் இருக்கையில் ஏறி காரைத் திருப்பி, சீறிப் பாய்ந்தான் சுதாகரன். கயல்விழியின் தலையை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு, பரபரப்பாய் அவளது கன்னங்களைத் தட்டினான் ஹரிஹரன்.

காதருகே குனிந்து பேசிக் கொண்டே இருந்தான். "கயல்! கயல்! உனக்கு ஒண்ணும் இல்ல. கண்ணைத் திறம்மா. உன் அத்தான் வந்திருக்கேன் பாரு. முழிச்சுக்கம்மா. என்னை தவிக்க விட்டுட்டு போயிடாதே. ப்ளீஸ்டா. ப்ளீஸ்" அவனது கெஞ்சுதலில் கயல்விழியின் காதுமடல் லேசாய் அசைந்தது.

அதைக் கண்டு கண்ணீரும் உற்சாகமுமாய் மீண்டும் பேசினான்.

"கயல்! கண்ணைத் திறந்து பாரேன். இதோ உம்பக்கத்திலேயே இருக்கேனே. இத்தனை வருஷமா பேச முடியாத, பேச நினைச்சதெல்லாம் எங்கிட்ட பேசு கயல். அதுக்காகத்தானே உன்னைத் தேடி ஓடி வந்தேன்."

முன் இருக்கையில் அமர்ந்து மருத்துவமனைக்கு வழி சொல்லிக் கொண்டிருந்தவன் திரும்பினான்.

"ஏங்க! கயல் மேலே இம்புட்டு பிரியம்

வெச்சிகிட்டு ஏன் ஸார் வேற கல்யாணம் பண்ண ஒப்புக்கிட்டீங்க?"

''ஹலோ! முதல்ல ஹாஸ்பிடலுக்கு வழியைக் காட்டுங்க."

''அது இன்னும் கால்மணி நேரம் போகணும் ஸார். அப்படியே போனாலும் டாக்டர் இவ்வளவு காலையில வந்திருக்க மாட்டார். அவர் வர பத்து பதினோரு மணியாகும்."

"என்ன ஸார் இப்படி பொறுப்பில்லாம பேசுறீங்க?"

"இதுதான் ஸார் எங்க நிலைமை. ஆறு கிராமத்துக்கும் இந்த ஒரு ஆஸ்பத்திரிதான் இருக்கு. அதிலயும் டாக்டர் ஒழுங்கா வர்றதில்ல."

"அப்போ... நாம போறது கவர்மென்ட் ஹாஸ்பிடலா?"

"ஆமா."

"ஓ காட்! இங்கே பிரைவேட் ஹாஸ்பிடல் கிடையாதா?"

"அதுக்கு மதுரைக்கில்ல போகணும்."

"ஓ! ஷிட்! ஹரி! இப்ப என்ன பண்றது?"

"பதறாதீங்க ஸார். எங்க ஊர்ல நாங்க எப்பவுமே டாக்டரை எதிர்பார்க்கிறதில்ல. எங்க வைத்தியம்தான் நிறைய பேர் உசிரைக் காப்பாத்தியிருக்கு. கயலுக்கு ஒண்ணும் ஆகாது."

"எப்படிச் சொல்றீங்க?"

''அது குடிச்ச மருந்தெல்லாம் வாந்தியில வெளியே வந்திடுச்சி. இது வெறும் மயக்கம்தான். எப்படியும் கொஞ்சநேரத்தில கண் முழிச்சிடும்."

"எ..ன்ன?"

''அட ஆமா ஸார். நீங்கதான் பொறுமையில்லாம தூக்கிட்டு ஓடி வந்திட்டீங்க. நீங்க எந்த ஆஸ்பத்திரிக்கு போனாலும் சும்மா செலவுதான் ஆகும். பேசாம வண்டிய வீட்டுக்குத் திருப்புங்க."

"யோவ்! ஒரு உயிரோட மதிப்பு தெரியாம பேசாதய்யா."

''எங்களுக்கும் தெரியும் ஸார். கிராமத்தான் சொன்னா நம்ப மாட்டீங்க. இதே ஒரு கோட்டு சூட்டு போட்ட டாக்டர் சொன்னா நம்பிடுவீங்க."

"அண்ணா! என்ன இது?"

"ஸார்! அதோ அந்த குடிதண்ணீ குழாய் பக்கத்தில காரை நிறுத்துங்க."

"எதுக்கு?"

''இது வெறும் மயக்கம்தான். இதை நான் தெளிய வைக்கிறேன்" உறுதியாய்ச் சொல்ல, குழப்... காரை ஒதுக்கி நிறுத்தினான் சுதா... கதவைத் திறந்துவிட, அவன் வேகம... இறங்கி, தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்... பெண்களிடம் ஏதோ பேசி கையில் குடம் நிறைய நீரோடு வந்தான்.

"ஸார்! இந்தப் பக்க கதவைத் திறங்க."

''ஏய்! என்ன பண்ணப் போற நீ?'' ஹரிஹரன் கேட்டுக் கொண்டே கதவைத் திறக்க, குடத்திலிருந்து நீரை கைநிறைய அள்ளி கயல்விழியின் முகத்திலடித்தான் அவன்.

இரண்டு முறை கயல்விழியிடம் அசைவில்லை. மூன்றாவது முறை அடித்ததும் கண்களைச் சுருக்கினாள். ஹரிஹரனும் சுதாகரனும் வியப்பாய் அவள் முகம் பார்க்க, மீண்டும் தண்ணீர் முகத்தில் பட்டதும் சிரமமாய் கண்களைப் பிரித்தாள்.

"பார்த்தீங்களா? நான் சொன்னேனே" அவன் பெருமிதமாய்க் கேட்க, கயல்விழியின் முகத்தைத் துடைத்தான் ஹரிஹரன்.

கயல்விழி நன்றாக கண்களைத் திறந்துவிட, கண் எதிரே இருந்த முகத்தைக் கண்டு புருவம் சுருக்கினாள்.

'இது கனவா? இறந்தபின் கூட கனவு வருமா என்ன? கனவில் கூட அத்தான் அழகாய்த்தான் இருக்கிறார். ஆனால்... அவரது கண்கள் ஏன் கலங்கி இருக்கிறது? என் மரணத்தை எண்ணி அழுகின்றாரா? ஒரு ஆணின் கண்கள் கலங்குவதென்றால்... அவருக்கு என்மீது அத்தனை அன்பா?'

ஹரிஹரனின் முகத்தில் நிலைத்த பார்வையோடு இருந்தவளது முகத்தை கனிவோடு வருடினான்.

''கயல்! என்னம்மா இதெல்லாம்? என்னையே கலங்க வெச்சிட்டியே. ஏன் இப்படி முடிவெடுத்த?'' தொண்டை அடைக்க கேட்டவனது குரல் செவியைத் தீண்ட, காதுமடல்கள் சிலிர்த்துக் கொண்டன.

உடல் முழுக்க மின்சாரம் பாய்ந்தது. 'இது கனவுபோல் தெரியவில்லையே... அத்தானின் குரல் இத்தனை தெளிவாய்... எப்படி?'

"கயல்! ஆர் யு ஓ.கே. இப்ப உடம்புக்கு எதுவும் பண்ணுதா? ஹாஸ்பிடல் போலாமா?'' எனக் கேட்ட குரலில் பார்வையை மெல்ல நகர்த்தினாள்.

கார்க்கதவை பற்றியவாறே வெளியே நின்ற சுதாகரனைக் கண்டதும் மேலும்

குழப்பமாய் பார்வையைச் சுழற்றி பார்க்க, அது கனவல்ல என்று புரிந்தது. தான் ஒரு காருக்குள் இருக்கிறோம் என புரிந்த அதே நொடி தான் யார் மடி மீதோ தலை வைத்திருக்கிறோம் என்று உணர்ந்து... அது ஹரிஹரன் என்றதும் பதறி எழ முயற்சித்தாள்.

''ஏய்! படுத்துக்கோ... படுத்துக்கோ'' அன்பாய் தன்னை சாய்த்துக் கொண்டவனைப் பார்த்து மீண்டும் மயக்கம் வரும்போல் இருந்தது.

''சி..சின்னத்தான்! நீ..ங்க... எப்படி இங்கே?''

''ஓ! தேங்க் காட். என் கயலை திரும்பித் தந்ததற்கு ரொம்ப நன்றி இறைவா'' என கண்களை மூடி நிம்மதியாய் மூச்சு விட்டவனை பார்த்து இன்னும் வியந்தாள். 'என் கயலா?'

''ஸார்! அதான் கயல் கண் தொறந்தாச்சே! அவங்க பேசட்டும். நாம அதோ அங்க ஒரு டீக்கடை தெரியுது பாருங்க. அங்கே போய் டீ சாப்பிட்டுட்டு வரலாம்'' என வெளியே நின்றவன் அழைக்க, புன்னகையோடு கதவைச் சாத்தினான் சுதாகரன்.

''யோவ்! நான் கூட உன்னை சாதாரண கிராமத்தான்னு நினைச்சேன். நீ சரியான ஆள்தான்.''

''என்ன ஸார்? கிராமத்தானுக்கு நாசூக்கு தெரியாதா? நாங்களும் மனுஷங்கதான்.''

''சேச்சே! நான் தப்பாச் சொல்லல'' என்றவாறே அவனது தோளில் கைபோட்டுக் கொண்டு நடக்கத் துவங்கினான் சுதாகரன்.

கயல்விழி மீண்டும் எழ முயற்சிக்க, அதட்டினான் ஹரிஹரன்.

''அதான் படுத்துக்கோன்னு சொன்னேனே. ஏன் சிரமப்படுற?''

''இ..இல்லத்தான்... இது... தப்பு.''

''ஏன்? என்ன தப்பு...?''

''இந்த மடி... எனக்கு... சொந்தமில்லாதது'' என்றவளது வாயை ஒற்றை விரலால் மூடினான்.

''இந்த மடி மட்டுமில்ல கயல்... இந்த உடல், உயிர் எல்லாமே உனக்குத்தான்... உனக்கு மட்டும்தான் சொந்தம்...'' என்றவனை நம்ப முடியாமல் பார்த்தாள்.

''எ..ன்..ன?''

''ஆமா! உன் அத்தான் உனக்குத்தான்.''

''எ..ப்படி? உ..ங்க கல்யாணம்?''

''முதல்ல நீ நல்லா குணமாகி எழுந்துக்க. உடனே கல்யாணத்தை வெச்சுக்கலாம்.''

''ம்ப்ச்! இல்லத்தான்... அந்தப் பொண்ணு...''

''அதெல்லாம் எப்பவோ மாறிப் போச்சு கயல். எனக்கு நீதான்னு கடவுளே முடிவு பண்ணினபிறகு வேற யார்கூடயாவது நடக்குமா? என்ன... நீ மட்டும் முன்னமே இதையெல்லாம் எங்கிட்ட சொல்லியிருந்தா கொஞ்சநாள் ஜாலியா லவ் பண்ணிட்டு கல்யாணம் பண்ணியிருக்கலாம். மிஸ்ஸாகிடுச்சி. இப்ப என்ன? கல்யாணம் பண்ணிட்டு காலம் பூரா லவ் பண்ணிகிட்டே இருக்கலாம். இதுவும் நல்லாத்தான் இருக்கு.''

''ஐயோ! அத்தான்... என்ன சொல்றீங்க? எனக்கு... குழப்பமா இருக்கே'' என்று எழுந்து அமர்ந்தாள்.

''ஒரு குழப்பமும் இல்ல. எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. இதுக்கு முன்னால பேசின கல்யாணம் நின்னு போனதைச் சொன்னேன்.''

''அச்சோ! கல்யாணம் நின்னு போச்சா? எ...என்னாலயா?''

''சீச்சீ! அசடே! அந்த பிரியாவுக்கு என்னைப் பிடிக்கலையாம்.''

''நிஜமாவா?''

''ம். என்னைப் பிடிச்சிருக்கிற... என்னை விரும்புற கயல்தான் எனக்கு வேணும்னு நானும் முடிவு பண்ணிட்டேன்.''

''அ...த்..தான்...''

''உனக்கு என்னை பிடிக்குமில்ல கயல்?''

''நீங்க... என் உசிரு அத்தான். ஆனா உங்களுக்கு அந்தப் பொண்ணைத்தானே பிடிச்சிருந்தது?'' ஏமாற்றமும் வருத்தமுமாய் கேட்டவளது கன்னங்களில் லேசாய் தட்டினான்.

''அது எங்க அம்மா பார்த்த பொண்ணு கயல். அதனால அம்மாவுக்காக தலையாட்டினேன்.''

''அப்போ... நான்?''

''நீ எனக்காகவே பொறந்தவ. உன்னை யாருக்காகவும் விட்டுக் கொடுக்க மாட்டேன். கடைசிவரை இந்த நெஞ்சுக்குள்ள பத்திரமா பொத்தி வெச்சுக்குவேன்'' என்றவனை கண்ணீரோடு இறுக அணைத்துக் கொண்டாள்.

இரு மனங்களும் ஒன்றாய் இணைந்து கொள்ள, எப்போதும் இனி அவர்களுக்குள் பிரிவில்லை.

**(முற்றும்)**



13 புள்ளி 7-ல் நிறுத்தவும் (இடைப்புள்ளி)

**- செ.கலைவாணி, மேட்டூர் அணை.**



ரங்கோலி:

**- கிரேசி சகாயம், காங்கயம்.**

# கோலங்கள்



15 புள்ளி 8-ல் நிறுத்தவும் (இடைப்புள்ளி)

**- ஆர்.பிரேமா, பெங்களூரு.**



21 புள்ளி 1 வரிசை, இருபுறமும் 19-2, 15-2, 11-1, 9-2, 5-2, 1 புள்ளி (நேர்புள்ளி)

**- த.கனகா, விநாயகர்புரம்.**



ரங்கோலி:

**- பிரேமா மணி, பேயன்விளை.**



27 புள்ளி 1 முடிய (நேர்புள்ளி)

**- கோ.தீபா, ஆற்காடு.**



15 புள்ளி 8-ல் நிறுத்தவும் (இடைப்புள்ளி)
ஆறுபக்கமும் 1, 2, 1 புள்ளி

**- எம்.பரிசுத்தமேரி, திருச்சி.**



21 புள்ளி 11-ல் நிறுத்தவும் (இடைப்புள்ளி)

**- ஆர்.உதயவள்ளி, சென்னை.**

PENMANI October-2013 Regd.No.TN/CH(C)/326/12-14.Licensed to Post WPP No.TN/PMG/(CCR)WPP-49/12-14
Regd. with the Registrar of newspaper for India under No.24250/71. Published 1st of every month.

